உ

சிவமயம்



அருள்தரு மங்கைநாயகர் துணை

# அருவியூர் வடக்கு வளவு நகரத்தார்

## வாழ்வை வளமாக்க வழி காட்டும் வழிமுறை

## (சடங்குகளும், சம்பிரதாயமும்)



வெளியீடு

நாள் : 6.05.2006

அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் பண்பாட்டு மன்றம்

கோயமுத்தூர் - 641 009.



A.P. ஸேதுராமன்

நூல் வெளியீட்டுக்கு

வாழ்த்துக்கள்

**அரசு மெடிக்கல்ஸ் குரூப்**

கோயமுத்தூர்

உ

யோகீ வேலம்பாள் சுவாமிதுணை
வேலங்குடி கருப்பையா சுவாமி துணை

சடங்குகளையும் , சம்பிரதாயத்தையும் கடைப்பிடித்து
நகரத்தார் மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள் !
வாழ்க வளமுடன்!



அரிமா சித. கரு. சக்திவேல்
தலைவர் (2002 to 2005)
அருவியூர் வடக்குவளவு நகரத்தார்
பொதுநலச்சங்கம், பிரான்மலை

சர்வதேச தரம் வாய்ந்த 916 KDM, 22ct KDM
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள்
வாங்க கைராசியான நிறுவனம்

மக்களின் பேராதரவுடன் வெள்ளிவிழா
கண்ட நிறுவனம்

**S.M.** அன்பு அன்கோ ஜுவல்லரி மார்ட்
**S.M.** அன்பு அன்கோ
சொணா மணி லெண்டிங்
பொன். புதுப்பட்டி.

யோகீ வேலம்பாள் அறக்கட்டளை
பொன்னமராவதி

போன் : 04333
(Off) : 262183 (Resi) : 262283

உ

# சமர்ப்பணம்



*"நன்னெறியும், நம்பிக்கையும்*
*நலம்கூட்டும் நல் வழிமுறையும்*
*சாஸ்திர, சம்பிரதாயத்தையும்*
*கலாச்சார, பண்பாட்டு முறைகளையும்*
*வழி வழியாய் நடத்தி வாழ்வாங்கு*
*வாழ்ந்த நம்மின முன்னோர்கள்*
*அனைவருக்கும், இந்நாளிலும்*
*இனிவரும் நாட்களிலும், நம் சமூகத்தின்*
*சாஸ்திர, சம்பிரதாய கலாச்சார*
*பண்பாடுகளை வழிமுறையாய் தவறாது*
*நடைமுறைப்படுத்தி, நலமாக, வளமாக*
*வாழவிருக்கும் நகரத்தாரனைவருக்கும்*
*இந்த தொகுப்பு நூல் சமர்ப்பணம்.........*



## நூல் விவரம்


நூல் : அருவியூர் வடக்குவளவு நகரத்தார் வாழ்வை வளமாக்க வழிகாட்டும் வழிமுறை (சடங்குகளும், சம்பிரதாயமும்)

தொகுப்பாசிரியர்கள் : ம. மாணிக்கம்
முத்து கனகசபை

பொருள் : அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் வாழ்வியல் சடங்கு முறைகள்

உரிமை : தொகுப்பாசிரியர்களுக்கு

பதிப்பு : 2006 மே மாதம்

மொத்தப் பக்கங்கள் : 80 பக்கங்கள்

வெளியிட்டோர் : அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் பண்பாட்டு மன்றம்
20, ரெங்கோனார் வீதி, காட்டூர்,
கோயமுத்தூர் – 641 009.

அச்சிட்டோர் : மாயன் என்வலப்ஸ்
டாக்டர் ராதாகிருஷ்ணா ரோடு, கோவை – 12




உ
அருள்மிகு மங்கைநாயகர் துணை

### அருவியூர் வடக்குவளவு நகரத்தார் பொதுநலச் சங்கம்

பிரான்மலை



பெறுநர்

திரு. முத்துகனகசபை அவர்கள்
கோயமுத்தூர்

## வாழ்த்து மடல்

அன்புடையீர் வணக்கம்.

தாங்கள் வெளியீடு செய்ய உள்ள அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் திருமணம், சடங்கு, செய்முறை வழிமுறைகள் பற்றி தொகுத்து வழங்க பெரு முயற்சி எடுத்து அதை புத்தக வடிவில் தயாரித்து வெளியீடு செய்வதற்கு தாங்கள் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள அன்பையும் பாசத்தையும் நகரத்தார் பெருமக்கள் சார்பிலும் எனது சார்பிலும் வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருள்தரு மங்கை நாயகர் தேனம்மை அருளாசியோடு வாழ்க, வளர்க எனப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

தங்களன்புள்ள

A. சேதுராமன்
தலைவர்

3-04-2006
ஒடுவன்பட்டி



**அரு. வே. மாணிக்கவேலு** D. Pharm.,
தலைவர்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக்கழகம்,
பிரான்மலை.

## வாழ்த்துரை

நம்மவரின் திருமணப் பழக்க வழக்கங்கள் நமக்குப் பெரிதும் பெருமை சேர்ப்பவையாக விளங்குவதோடு நம்முடைய தனித்தன்மையை சிறப்பிப்பதாகவும், அமைவதாகும்.

வருங்கால சந்ததியினர் நம் மரபுகளையும் தனித்தன்மையையும் தொடர்ந்து விருப்போடும், பிடிப்போடும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நல்நோக்கோடு திரு. முத்துகனகசபை அவர்கள் இவ்வெளியீட்டை கொண்டுவருவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்

அரு. வே. மாணிக்கவேலு
தலைவர்

5–4–2006
பொன்னமராவதி



# அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் சங்கம்

1–A, சர் சண்முகம் சாலை
கௌவுலி பிரவுன் சாலை
ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர் – 641 002.



N. செல்வம்

தேதி : 12–04–2006

## வாழ்த்துச் செய்தி

பெறுநர்

திரு. முத்துகனகசபை அவர்கள்
கோவை – 641 009

தங்களின் பெருமுயற்சியால் வெளிவரவிருக்கும் நமது சமூக சம்பிரதாய சடங்குகள் தொகுப்பு நூல் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நமது சமூகத்தார் அனைவரும் மேற்படி நூலைப் படித்து, கடைப்பிடித்து நமது பெருமையையும் சிறப்பையும் கட்டிக்காத்து நலம் பெற வேண்டுமாய் வாழ்த்துகிறேன்.

இவண்

N. செல்வம்

N. செல்வம்
தலைவர்

# அருவியூர் வடக்குவளவு நகரத்தார் இளைஞர் பேரவை



கௌவுலி பிரவுன் சாலை, ஆர்.எஸ். புரம்

கோயமுத்தூர் – 641 002.

சு. சோலைராஜன்

தேதி : 12-04-2006

## வாழ்த்து மடல்

பெறுநர்

திரு. முத்துகனகசபை
கோயமுத்தூர்

தாங்கள் நம் சமூகத்தின் மேல் கொண்டுள்ள பாசத்தின் வெளிப்பாடே நகரத்தாரின் வாழ்வை வாழவைக்கும் சடங்குகளும் சம்பிரதாயமும் என்ற இந்நூல்.

நம் ஒவ்வொருவர் இல்லத்திலும் வைத்தும், படித்தும், போற்றியும் நம் இளைய தலைமுறையினருக்காகப் பாதுகாக்கப்பட வேண்டிய மிகப் பெரிய பொக்கிஷம்.

தாங்களின் இந்த மிகப்பெரிய முயற்சிக்கு கோயமுத்தூர் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் இளைஞர் பேரவையின் சார்பாகவும், எனது சார்பாகவும், நம் சமூகத்தின் சார்பாகவும் தங்களை வாழ்த்தி வணங்குகின்றேன்.

இப்படிக்கு

தங்கள் அன்புள்ள

சு. சோலைராஜன்

சு. சோலைராஜன்
தலைவர்



உ

அருள்தரு மங்கைநாயகர் துணை

# அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்

1-A, சர் சன்முகம் சாலை, கௌவுலி பிரவுன் சாலை
ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர் – 641 002.

"விதைக்குள் விருட்சம் போல்
கதைக்குள் கருத்துப் போல்
புதையலுக்குள் பொருள் போல்
சதைக்குள் நரம்பு போல்
நரம்புக்குள் உணர்வுபோல்
மரபுக் கவிதைக்குள் மகிமைபோல்
புதுக்கவிதைக்குள் அர்த்தம்போல்
இதயத்துள் நேயம் போல்
அறிவிற்குள் ஆற்றல் போல்
பிரபஞ்சத்தின் அதிசயம் போல்
உடலுக்குள் உயிர் போல்
சந்திரனுக்குள் குளுமைபோல்
சூரியனுக்குள் வெப்பம் போல்
மண்ணுக்குள் மகிமை போல்
கல்லுக்குள் சிற்பம் போல்
சிப்பிக்குள் முத்து போல்
காற்றுக்குள் இசைபோல்
மலருக்குள் மணம்போல்
முகிலுக்குள் (மேகம்) மழை போல்"
சம்பிரதாயமிகுந்த சடங்குகளில்
ஆயிரமாயிரம் அர்த்தங்கள் !
நம் வாழ்வை வளமாக்கும் சுரங்கங்கள் ! என
அறிவோம் ! இந்நூல் தொகுக்கப்பெற்றது
நல்முயற்சி, முயற்சி வெற்றி பெற நாம் கடைப்
பிடிப்போம் ! நன்மை பல பெறுவோம் !

என வாழ்த்தி, வரவேற்கும்

## அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்

கோயமுத்தூர் – 641 002.

| தலைவர் | பொருளாளர் | சேமிப்புதிட்ட பொறுப்பாளர் | செயலாளர் |
|---|---|---|---|
| N. செல்வம் | மா. சுவாமிநாதன் | A.P. சேதுராமன் | முத்துகனகசபை |

| துணைத்தலைவர் | துணைச் செயலாளர் |
|---|---|
| G. சுப்பிரமணியன் | M. சரவணன் |
| M. ஜெகநாதன் | C. அருணகிரி |

உ

அருள்தரு மங்கைநாயகர் துணை

**அருவியூர் வடக்குவளவு நகரத்தார் இளைஞர் பேரவை**

1-A, சர் சண்முகம் சாலை, கௌவுலி பிரவுன் சாலை

ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர் – 641 002.

*இளைஞர்களுக்கு வழிகாட்ட உதித்தது,*
*நகரத்தார் நடைமுறைப்படுத்த மலர்ந்தது,*
*தொடரும் நலம் பெறுக! எழுந்தது,*
*சரித்திரம் பேச நடைமுறையை தந்தது,*
*வாழ்வை வளமாக்கும் முறையை குறித்தது,*
*சடங்குகளையும், சம்பிரதாயங்களை தொகுத்தது, - இந்நூல்*
*இன்றைய காலத்தின் பொக்கிஷமானது,*
*போற்றுவோம்! பின்பற்றுவோம்! புகழ் பெறுவோம்!*

*என*

*வாழ்த்தி நூல் வெளியீட்டை வரவேற்கும்*

**அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் இளைஞர் பேரவை**

**கோயமுத்தூர் – 641 002.**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **சு. சோலைராஜன்** | **N.S. அசோகா** | **TMRS. சிவகுமார்** |
| துணைத்தலைவர் | துணைச் செயலாளர் | சேமிப்பு திட்டப் பொறுப்பாளர் |
| **ச. கணேசன்** | **Dr. ந. வசிஷ்டர் சுப்பிரமணியன்** | **கு.தி. வெங்கடாசலம்** |



# அருவியூர் வடக்குவளவு நகரத்தார்கள் திருமண நிகழ்ச்சி நடத்தும் முறை

## (வழக்கமான சடங்குகள்)



**ம. மாணிக்கம்**

முன்னுரை :

உலகம் தோன்றி உயிர்கள் உண்டாகிப் பல்கிப் பெருகித் தழைத்து பரிணாம வளர்ச்சி அடையும்பொழுது, பகுத்தறியும் பாங்கில் ஏற்பட்ட முதிர்ச்சியால் முறைப்படுத்தப்பட்ட வாழ்வியல் முறைமை ஏற்பட்டது. வாழ்க்கை முறை முறைப்படுத்தப்பட்டது. அந்த வகையில் பல சமூகங்களிலும் அவரவர்கள் பெற்ற அறிவைப் பொறுத்து வரையறை செய்யப்பெற்றது. ஒவ்வொரு சமூகத்திற்கும் வாழும் இடங்களைப் பொறுத்தும் வாழ்க்கை முறை நெறிப்படுத்தப்பெற்றது.

கட்டுக் கோப்பான கட்டுப்பாடுடைய சமூகமே நெறியாக வாழ்ந்து சிறப்படைய முடியுமென்று நம்பினர். அந்த வகையில் வாழும் முறையை வகைப்படுத்தினர். அவ்வழியில் நமது சமூகத்திலும் மரபு வழியாக பல சடங்குகளும் சம்பிரதாயங்களும் கடைப்பிடித்து வரப்பெற்றன.

நமது இந்து மதத்தில் சடங்குகளும் சம்பிரதாயமும் முன்னோர்களால் மதித்துப் போற்றிப் பேணிக்கடைப்பிடித்து வந்து சிறப்படைந்திருந்தன. அவை விஞ்ஞான ரீதியான காரண காரியங்களுடன் இருந்தாலும் முழுமையான விளக்கம் பலரும் அறியாமலிருந்திருக்கலாம். ஒரு சிலர் இன்றைய வாழும் முறை, அவசர, பொருளாதார, வேகமான உலகத்தில் காலம், நேரம் கருதி முழு ஈடுபாட்டுடன் கடைப்பிடிக்க இயலாமல் இருக்கிறோம். அதனால் என்ன சடங்குகள், எப்படிச் செய்வது, எதற்குச் செய்வது என்பதை நினைவில் கொள்ள முடியாமல் மறந்து வருகிறோம். சிலர் ஆர்வமின்மையால் செய்வதில்லை. சிலர் காரணம் சரியாகத் தெரியாததால் மூட நம்பிக்கை என்று விட்டுவிடுகின்றனர். மூடநம்பிக்கை அல்ல, மூல நம்பிக்கை என உணர்ந்து மூலமான ஆதியிலிருந்து கடைப்பிடித்து வரும் சடங்குகள், சம்பிரதாயங்கள் என நம்பிக்கை கொண்டு அதை விடாமல் கடைப்பிடித்து வந்தால் அனுபவத்தில் அர்த்தங்கள் புரிந்து உணர்ந்து பலனையும் அனுபவிக்கலாம்.

நமது திருமண நிகழ்ச்சிகளிலும் மற்றும் சுப நிகழ்ச்சிகளிலும் சடங்குகள் பலவற்றை விட்டு விலகி வந்து கொண்டிருக்கிறோம். முப்பது வருடங்களுக்கு முன்பு செய்து வந்த சடங்குகள் இப்பொழுது குறைந்து விட்டன. இன்னும் முப்பது வருடங்களில் எவை நிலைத்து நிற்குமோ, என்ற ஐயம் தோன்றுகிறது. அந்நிலை வராமல் தவிர்க்க வேண்டியது நமது தலையாய கடமை. கடமையை நிறைவேற்ற விவரம் அறிந்த பலரிடம் இயன்றளவு தகவல்கள் சேகரித்துத் தொகுத்து வழங்கியுள்ளோம். தயவுசெய்து அனைவரும் அறிந்து இயன்றவரை, முடிந்தவரை விடாமல் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்தி நலம் பல பெற எல்லாம வல்ல அருள்மிகு தேனம்மை உடனுறை மங்கை நாயகர் பாதமலர் போற்றி சிரந்தாழ்த்தி இருகரம் கூப்பி வணங்கி வேண்டுகிறோம்.

# பொருளடக்கம்

1. எங்களின் இலட்சியம் ........ 11
2. நூல் முகம் ........ 13
3. வெற்றி ........ 15
4. வளமான வாழ்வு ........ 16
5. நகரத்தார் வரலாற்று வாழ்வியல் அளவுகோல் ........ 17
6. இறைவன் தந்த வரம் ........ 19
7. திருமண வாழ்த்து ........ 22
8. திருமண நிகழ்ச்சி ........ 23
9. இசைவு பொன்னோலை ........ 38
10. மங்கல வாழ்த்து ........ 39
11. உங்கள் சிந்தனை ........ 40
12. மணமேடைக்குச் சேகரிக்க வேண்டிய பொருட்கள் ........ 42
13. குருவழி ........ 44
14. புதையல் ........ 46
15. பிறந்த குழந்தைக்கு ........ 53
16. பெண் பிள்ளை பூப்பெய்தியதும் ........ 55
17. மணி விழா ........ 58
18. அம்மானை ........ 60
19. நம்மவரின் பழம்பெருமை ........ 70
20. தொடரும் உரை ........ 71
21. நன்றி ........ 75



# எங்களின் இலட்சியம்

வணக்கம் !

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள், முதியோர். முதியோர் சொல்லும் மூல பழக்கம், முன்னேற்ற பாதையின் முதல் மைல்கல்லாகும். ஒவ்வொரு பண்டிகை, விழாக்களுக்கும் நாம் செய்கின்ற பழக்க வழக்கம் அனைத்தும் பண்பாடு, கலாச்சாரம் இவற்றின் பிரதிபலிப்பாக இருக்கும். இன்று இந்திய நாடே உலக நாடுகளின் வல்லரசாக திகழயிருக்க போவதும் உலக நாடுகளின் பார்வையில் முதன் நிலை வகிப்பதும் நமது நாட்டின் பண்பாடு, கலாச்சார கோட்பாட்டுடன் அறநெறியில் ஆன்மநேயத்தை தொடுவதுதான் காரணமாகும்.

இவ்வாறு உயர்ந்த பண்பாடு கலாச்சாரம் வழிமுறைகளை நாம் பண்டைய காலம் முதல் வழி வழி முறையாய் கடைப்பிடித்து வந்து சிறப்பாக முதன்மை இனமாக வாழ்ந்து வந்துள்ளோம். ஆனால் இன்று சிறந்த நடைமுறைகளை காலத்தின் கோலத்தில் நடைமுறைப்படுத்துவதை மறந்துவிட்டோம். நாமும் வாழ்வியலை கொஞ்சம், கொஞ்சமாக தொலைத்துக்கொண்டு வருகிறோம். இதனால் நாம் இழக்கயிருப்பது ஒரு சமூகத்தை என்பதை அனைவரும் உணரவேண்டும். நம் சமூகமோ மிக மிகச் சிறுபான்மையானது இவ்வளவு சிறிய சமூகத்தை பண்பாடு, கலாச்சாரம் இவற்றிலிருந்து தவறாது காத்து ஒற்றுமையுடன் வாழவிட வேண்டியது அனைவருடைய உடலுக்கு மூச்சுக்காற்று அவசியம், போன்று அவசியத் தேவையாகும்.


எனவே இந்த நடைமுறை பழக்க, வழக்க சடங்குமுறை நம்மவரில் அனைவருக்கும் தெரிகிறதா? என்ற ஐயப்பாடு எங்கள் இதயத்தில் பெரும் வலியை ஏற்படுத்தியது. ஒவ்வொரு குடும்ப விழாக்களில் கலந்துகொண்டு நடைமுறைகளை பார்க்கிற பொழுது "ஒரு குழந்தையை பிரிந்த தாய்" போல் வேதனை அடைந்தோம். மேலும் நமது மூதாதையார்கள் விட்டுச் சென்ற முழுமையான பழக்க வழக்கம் முழுவதையும் நடைமுறைப்படுத்துகிறோமா? என்றால் அதுவும் அரைகுறை நிலையில்தான். ஏதோ நடந்தால் சரி என்ற நிலையில் நம் மனதை நிலைப்படுத்திக் கொண்டோம். இவ்வாறு நடைபெறுவதால் நாம் இழந்த இழப்பு கோடிக்கணக்கிலிருக்கும், ஆன்மபலம் அனைத்தும் இழந்தோம். மூதாதையர் விட்டுச்சென்ற சொத்துக்களை முழுமையாக

அனுபவிக்க துடிக்கிறோம், அனுபவிக்கிறோம் ஆனால் அவர்கள் நமக்கு தந்த பண்பாட்டை, கலாச்சாரத்தை மட்டும் அனுபவிக்க மறுக்கிறோம்.

இந்நிலை மாறவேண்டும் நம் சமூகம் இழந்த அனைத்து நலங்களையும், வளங்களையும் பெறவேண்டும். அதற்கு நாம் விதைக்கவேண்டியதும், மூலதனம் செய்ய வேண்டியதும் நம் குடும்ப விழாக்கள் செய்வதை சிறந்த முறையில், பண்டைய பழக்க வழக்கங்களை கூடுதல் முறையாக நடைமுறைப்படுத்தி அவ்வாறு நடைமுறை செய்கிற சடங்குகள் காரண காரியங்களுடன் பழமை தவறாது, ஆழமான கருத்து ஒற்றுமையுடனும், முதாதையர் மொழி, மூலமொழி என போற்றி (எவ்வாறு தன் மகன் (வாரிசுகள்) எல்லா நிலைகளிலும் தங்களைவிட சிறப்பாக, உயர்வாக வாழ வேண்டும் என நினைக்கும் பெற்றோர்களை போன்று) நாம் வழக்கத்தை கடைப்பிடிப்பதன் மூலம் அவர்களுடைய பரிபூரண ஆசிகள் கிடைக்கப்பெற்று, குடும்பம் சிறக்கும், வளம்பெருகும், நலம்கூட்டும் என்பது சாஸ்திரங்கள் கூறும் உண்மையாகும்.

உண்மையாக, நலம் கூடுதலாகப் பெறவும், வளம் பெற்று வாழவும், நம் சமூகவும் சிறக்கவும், நமது வாழ்க்கை வழிமுறை சடங்குகளை அனைவரும் தெரிந்து நடைமுறைப்படுத்தி வாழும் முகமாக தொகுத்து உங்களுக்கு படைக்கிறோம். நாம் இன்று நடைமுறைப்படுத்தி நாளைய சமூகம் பல துறைகளிலும், நிலைகளிலும் உயரும் என்பதை இறைவனின் திருஉள்ளமாக நினைந்தோம். அதை உங்களுக்கு அர்ப்பணிக்கிறோம். இறைவனின் விருப்பத்தை ஏற்று நாமனைவரும் நலம் பெறுவோமாக !

**நகரத்தார் உயர்வின் இலட்சியவாதிகள்**
**தொகுப்பாசிரியர்கள்**





# “நூல் முகம்”

இச்சிறிய தொகுப்பு நூல் தொகுப்பாசிரியர்களாகிய எங்களுக்கு சமூகத்தின் மீது கொண்டுள்ள “காதல்”, அதையும் மீறிய மரியாதை வளரவேண்டும் என்ற தொலை நோக்கு ஆர்வம், நாம் இழந்த செல்வங்களையும், நற்பெயரையும், மேன்மையையும் அடைய வேண்டும் எனும் சின்ன சின்ன ஆசை. இதற்கான காரண காரியங்களை ஆராய்ச்சி செய்தபொழுதுதான் நாம் விட்டு வந்துவிட்ட சாஸ்திர, மூலபழக்க வழக்கங்கள் என்பது எங்கள் கண் முன் நிழலாக ஓடியது. “ஆம்” ஒரு விதையை பக்குவமாக உழுது பருவம் பார்த்து விதைத்து, வளர்ந்தபின் அதற்கு வேண்டிய நடைமுறைகளை தொடர்ந்து செய்வித்தால் தான் பலன் நம் இல்லம் தேடிவரும் : வணிகமும் அது போல்தான். நடைமுறை பழக்கம் என்ன? வணிகம் செய்யும் முறை என்ன? என்பதை முறையாக வழிமுறைப்படுத்தினால் தான் வளம் பெற முடியும். அதுபோல வாழ்வியலும் வாழ்க்கை வெற்றி பெற வேண்டுமானால் நமது முன்னோர் நடைமுறைப்படுத்தி வந்த காரண காரியங்களையும் சம்பிரதாய சடங்குகளையும் கடைப்பிடிக்க வேண்டும். காலம் வேகமாக இருக்கிறது. நேரமில்லை என நாம் செய்யும்

வணிகத்தை செய்ய வேண்டிய நடை முறைகளை விடுத்து, வேகமாக வியாபாரம் செய்ய வேண்டும் என நடத்தினால், பல தவறுகள் ஏற்படும், நம் மூலதனம் குறையும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யாமல் அவர்களை இழக்க நேரிடும். ஆக "வேகம்" காரணமாக ஒரு வணிகத்தை எவ்வாறு செயலிலிழக்கச் செய்து விடுகிறதோ அதுபோல்தான் வாழ்க்கையும். எனவே வாழ்வியல் சடங்குமுறைகளை நாம் "காலம் நேரம்" எடுத்து வழிமுறையாக செய்வித்தாலே நம் சமூக பண்புடைய பண்டைய நிலைகளுக்கு உயரலாம், அனைத்து செல்வங்களையும் பெறலாம் எனும் சீரிய சிந்தனையில் உதயமானது தான் இந்நூல்.

இந்நூலின் ஒரு சொல்லையும், சடங்கு சம்பிரதாய முறைகளையும் நடைமுறைப் படுத்த வேண்டி பல இடங்களில் சொன்னதையே, சொல்லியிருப்போம் : காரணம் நம்மவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் எனும் நோக்கம். சிறந்தவற்றை விட்டுவிட்டோம் என வருத்தம். ஆகவேதான் அந்த சொல்லை திரும்ப, திரும்ப வலியுறுத்தி கூறியுள்ளதின் "நோக்கம்". தெரியாத மூல முறைகளை தெரிந்து நடைமுறைப்படுத்தி நம் சமூகம் சிறக்கவேண்டும் என்பதுதான் நூல் முகம்.



# வெற்றி

இதுநாள் வரையிலும் பண்டைய வாழ்வியல்
சடங்கு முறைகள் தெரியாமலும், தெரிந்தும்
கடைப்பிடிக்க முடியாமல் இருந்த நிலை
கண்டு வேதனையடைகிறோம்.....

பண்டைய கால சடங்குகள், நடைமுறைகள் என்பது ; அன்றாட வாழ்வியலில் எதார்த்தமான நிலையில், நடைமுறைகளில் உள்ள பழக்க, வழக்கங்களே !

விழித்து எழுந்தது முதல் இரவு துயிலும் வரை நமக்காக நாம் செய்துகொண்டும், பிறர்க்கு உதவும் முகமாகவோ ; உண்ணும் முறையாகவோ, உடுக்கும் முறையாகவோ, வழிபாட்டு முறையாகவோ, நாம் செய்கின்ற நற்பண்பு செயல்முறையை ஒன்றன்பின் ஒன்றாக செய்கிற அனைத்துமே, சம்பிரதாய, விஞ்ஞான பூர்வமான நிகழ்வுகளே ஆகும்.

இவ்வாறு நடைமுறையை இந்து மதம் வாழ்வியல் சடங்குகளாக, அல்லது சம்பிரதாய செயலாக கடைப்பிடிக்கச் சொல்லி வலியுறுத்தி வருகிறது.

இவ்வாறு வலியுறுத்தி வருகின்ற சடங்கு வழிமுறைகள், சரியானதுதானா? என இன்றைய அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்தபொழுது இவைகள் அனைத்துமே விஞ்ஞான பூர்வமான உண்மையான, கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளே என ஆராய்ந்து ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மையிலும் உண்மை.....

அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ள இந்த வழிமுறைகள் நமது குடும்ப விழாக்களில் மிகவும் விரும்பி கடைப்பிடிக்கவேண்டும் என்பதும் அவ்வாறு நடைமுறைப்படுத்துவதால் நிகழ்கின்ற நிகழ்வுகளினாலும், சீர்முறைகளாலும், உறவின்முறை, உணர்வுமுறை, இறைவழிபாட்டுமுறை, ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும்மாண்பு, மகிழ்ச்சிமிகுதியானஉறவின்முறை விளையாட்டுக்கள் போன்ற நற்பண்பு செயல் சிறக்கவும், வளம் கூட்டவும், நலம் பெருக்கவும் மூதாதையர்களை நினைவுகூறவும், குலதெய்வவழிபாடு தொடரவும் சடங்குகள் பெரிதும் உறுதுணை புரிகின்றன.

இவ்வாறு உறுதுணையாக உள்ள வாழ்க்கை முறையை நாம் கடைப்பிடிப்பதால் நமது இளைய தலைமுறையை நற்பண்பாளர்களாக உருவாக்கும் என்பதை நகரத்தார்கள் உணரவேண்டும்.

இவ்வாறு உணர்ந்து இதுநாள்வரை தெரியாமல் நடைமுறைப்படுத்த முடியாமல், விட்டுப்போன நன்மை தரும் நற்சடங்கு முறைகளை தொகுத்து நூலாக வழங்கியுள்ளோம்.

இச்சிறப்புமிகு நூலில் தொகுத்து தந்துள்ள சடங்கு முறைகளை ஒவ்வொரு நகரத்தாரும் நடைமுறைப்படுத்தி வளமும் நலமும் கூடிய பதினாறு பேறுகளையும் பெற்று வாழ்வீர்களேயானால் அதுவே வெற்றி..... ●

## வளமான வாழ்வும் பதினாறு பேறுகளும் பெற

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்

சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலை ஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே !
ஆதிகடவூரின் வாழ்வே !
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

சகல செல்வங்களும்தரும் இமய கிரிராச
தனயை மாதேவி நின்னைச்
சத்தியமாய் நித்தம் உள்ளத்தில் துதிக்கும்
உத்தமருக்கு இரங்கி மிகவும்
**அகிலமதில் நோய் இன்மை, கல்வி, தனம் தானியம்,**
**அழகு, புகழ், பெருமை, இளமை**
**அறிவு, சந்தானம், வலி, துணிவு, வாழ்நாள், வெற்றி**
**ஆகு நல் ஊழ், நுகர்ச்சி**
தொகை தரும் **பதினாறு பேறும்** தந்தருளநீ
சுகானந்த வாழ்வு அளிப்பாய்.
சுகிர்த குணசாலி ! பரிபாலி ! அனுகூலி !
திரிசூலி ! மங்கள விசாலி !
மகவு நான், நீதாய், அளிக்கொணாதோ மகிமை
வளர் திருக்கடவூரில் வாழ்
வாமி ! சுபநேமி ! புகழ்நாமி ! சிவசாமி மகிழ்
வாமி ! அபிராமி உமையே !



## நகரத்தார் வரலாற்று வாழ்வியல் அளவுகோல்

அன்பையும், மகிழ்ச்சியையும், அருள்நெறியையும், நன்னடத்தையும், உயரிய பண்புகளையும் அறிவு தாகத்தையும், வளமான வாழ்க்கையும், தலைசிறந்த தனவணிகத்தையும், மன்னனுக்கு இணையான அருள் மேன்மையும், பொருளாதார மேன்மையும் நிறைவாகப் பெற்று வாழ்ந்து வந்தது வரலாற்று அளவுகோல்.

நகரத்தார், தன வணிகர்களாக வாழ்ந்த காலத்தில், கற்பின் மேன்மை காத்து, தெய்வமாகி வாழ்ந்த வரலாற்றை தமிழகத்தின் ஐம்பெரும் காப்பியத்துள் ஒன்றாக படைத்தது மற்றுமொரு வரலாற்று அளவுகோல்.

நன்நெறி வழுவாத தன வணிகர்களாக ஒரு நாட்டில் வாழ்வதால், மாதம் மும்மாரி பெய்து நாடு வளம் பெறக் காரணமாகயிருந்ததால், அண்டை நாட்டு மன்னனும் தன் நாட்டிற்கும் நற்குடி நான்காயிரம் வேண்டும் எனக்கேட்டு தனவணிகர்களை, அவர்களின் மதிப்பிற்கும், மரியாதைக்கும் யாதொரு பங்கமிலாது பார்த்துக்கொள்கிறேன் என உறுதி கூறி அழைத்து வந்து, வந்த நாடு சிறப்புற்று மும்மாரி பெய்து வளம் பெற்றதும் தனவணிகமுறை சிறப்பாய் நடந்ததும் வரலாற்று அளவுகோல்.

இவ்வாறு வாழும் காலத்தில் தனவணிக குலம் மேலும் தழைத்தோங்க இறைவனே, பொன்மாரிபொழிந்து அருள் பெறச் செய்தது நம் வாழ்வியல் வரலாற்று அளவுகோல்.

நம்குல பெருமையை மன்னன் களங்கம் செய்தபொழுது, எதிர்த்து வாதாடியதும், கலாச்சாரம், பண்பாடு தான் பெரிது என மன்னனை எதிர்த்த இந்நிலையில் அவன் கொடுத்த நாடு, நகரத்தையும், வீடு, செல்வங்களையும் விட்டு தமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் மட்டுமே ! "மூலதனமாக" எடுத்துக்கொண்டு வாழத் துவங்கிய சமூகம் தான் ; நம் சமூகம் என்பது வாழ்வியல் அளவுகோலாக நம் கண்முன் காட்சியாக நிற்கிறது.

கலாச்சாரம், பண்பாடு, அறநெறி இவைகளையே மூலதனமாகக் கொண்டு நமது முன்னோர்கள் கிராமங்களில் வாழ்வை தொடங்கி இன்றுவரை போற்றப்படுபவர்களாகவும், முதன்மைநிலையுள்ளவர்களாகவும், நேர்மையின் இலக்கணமாக வாழ்பவர்களாகவும் இருந்து வருகிறோம் என்றால், அதற்கு காரணம் நமது கலாச்சார, பண்பாடு மாறாத அறநெறி வாழ்க்கையே எனில் அது மிகையாகாது.

ஆனால் சில காலங்களாக நமது முன்னோர்கள் கடைப்பிடித்து வாழ்ந்து வந்த சடங்கு, சம்பிரதாய பழக்க வழக்கங்களின் மூலாதாரத்தைக் கடைப்பிடிக்காது நமது குடும்ப விழாக்களை நடத்தி வருகிறோம்.

“மூலாதாரம் தான் ஒரு மனிதனின் ஜீவனாகும்” அதுபோல் தான் நமது குலத்தின் (ஜீவாதார) மூலாதாரமான முறைகளாக பண்டைய சடங்குகள், சம்பிரதாயமும் இருந்து வந்திருக்கின்றது.

இந்த மூலாதார முறைகளை இந்நாளில் விரிவாக மூன்று நான்கு நாட்களில் செய்ய முடியாமல் போனாலும் சுருக்கமாக “அள்ளிக் கொடுக்கும் இடத்தில் கிள்ளிக் கொடுப்பது போல்” ஒரே நாளில் செய்து வருங்காலத்தில் நம் சந்ததியினர் வாழ்க்கையில் ஒளிதீபம் ஏற்றுவோம்.

தமிழகத்தில் உள்ள ஏனைய மாற்று சமூகத்தினர் அனைவரும் இம்முறைகளை விடாது குடும்ப நிகழ்வுகளில் கடைப்பிடித்து பெருமைபெற்று சிறப்படைகிறார்கள். மரபு மாறாது வழிமுறைகளை தொடரும் சமூகம் வாழ்வியலில் சகல நன்மைகளையும் பெற்று வாழ்வதும், எல்லா துறை சார்ந்த நிலையிலும் முதன்மை பெற்று இருப்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டிய ஓர் அளவுகோல்.

இந்நிலையில் நாமனைவரும் மரபு சார்ந்த வழிமுறைகளைக் கடைப்பிடித்து இனிவரும், வளரும், தலைமுறைக்கு அளவுகோலாக திகழ்வோம், வாழ்வியல் பெருமை சேர்ப்போமாக......





# இறைவன் தந்த வரம் சடங்குகள்

உலகத்தில் ஒன்று மற்றொன்றை அடைய வேண்டுமானால் ஒரு முயற்சி, ஒரு வழிமுறை, என குறிக்கோளுடன் செயல்பட்டால் தான் வெற்றிகாண முடிகிறது. நாம் விரும்பும் நிலையை அடைய முடிகிறது. அதுபோல்தான் நமது குடும்ப வாழ்வியல் நடைமுறை விழாக்களில் முயற்சி, சடங்கு எனும் வழிமுறைகளை அமைத்துக்கொண்டு கடமையை செய்வோமேயானால் வெற்றியடைகிறோம்.

வெற்றிக்கு வழிவகை செய்யும் குணங்கள், செயல்கள் இவைகளை மனிதனுக்கு இயற்கையாக இறைவன் வரமாக தந்து மனிதனை மேன்மையடையச் செய்கிறான். இதுதான் உலக நிகழ்வாக காண்கிறோம். ஆகையால் இறைவன் மனித குலத்தை ஒவ்வொரு செயலிலும் மேன்மை அடையச் செய்வதற்காக பல வழிமுறைகளை (சடங்குகளை) அளித்துள்ளான் என்பதை நாம் அறிவோமாக.

## சடங்குகள் ஊன்றுகோல் அல்லது வழிமுறை

சகதி நிறைந்த இடத்தில் நடப்பது கட்டாயமாகும்போதும், முள்ளிருக்கும் பாதையில் நடக்க வேண்டியபோதும், வழுக்கலான இடத்தில் போகும்போதும், மலையேறும் போதும் ஒவ்வொரு விதமான கவனம் அல்லது மாற்று ஏற்பாடு அல்லது ஊன்றுகோல் என பயன்படுத்தி நிலையை சரிசெய்து அடைகிறோம்.

இம்முறையாக, நடைமுறை வாழ்க்கையிலுள்ள இயல்புகள், இயற்கைக்கு மாறானதல்ல, எதிரானதும் அல்ல, எனவே அவற்றை நாம் சமாளிக்க வெற்றிகாண, அடைய, ஏதோ ஒரு வழிமுறையைப் பயன்படுத்தி வெற்றி காண்கிறோம். அதுபோல்தான் நம் குடும்ப விழாக்கள் சிறப்பாக நடைபெற சுற்றம் சூழ, நண்பர்கள் குழுமமாக அழைக்கிறோம். வந்திருக்கும் அனைவரும் சரி, அப்பகுதியில் விழாவின் அலங்கார, ஆடம்பர நிகழ்வுகளை காணும் பொதுமக்களும் சரி, அப்பகுதியில் நடைபெறும் மாற்று நிகழ்வுகளும் சரி நமது விழாவின் மீது வாழ்த்தும் முகமாகவே அமையும் என்று சொல்ல இயலாது, ஏனெனில் ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொருவிதமான எண்ண அலைகள் தோன்றி அவையே காற்றில் கலந்து எங்கும் பரவும். அந்நிலையில் விழா மங்கலகரமான நிகழ்வுக்குரியவர்களை பாதிப்பு ஏற்படாத வண்ணம் இருக்கும் முகமாக சில சடங்குகள், வாழ்த்துக்களை மட்டுமே நிறைந்திருக்கச் செய்யும் சடங்குகள் என இயற்கையான, இறைவன் தந்த வரப்பிரசாத சக்தியுள்ள பொருள்களை நமது மூதாதையர் தேர்ந்தெடுத்து அவற்றைப் பயன்படுத்தி நிகழ்ச்சிகளை பரிபூரணமாக வெற்றியடையச் செய்து வாழ்வாங்கு வாழ்ந்திருக்கிறார்கள். இந்நிலை என்பது

"வண்ணங்கள் வெளிறிப் போகும்
கோவில் இடிந்து போகலாம்
சாம்ராஜ்யங்கள் சரிந்து போகலாம்"

ஆனால் இவற்றை எல்லாம் மீண்டும் மறுமலர்ச்சியடையச் செய்வதும், புதுப்பிக்கச் செய்வதும், வண்ணங்களை மீண்டும் மிளிரச் செய்வதும், தெளிவுடைய பொருள்செறிவுடைய பழக்க வழக்கங்கள் தான் என்பது கால காலம்தொட்டு, புராண, இதிகாச காலங்களிலிருந்து இன்றுவரை மனிதகுலம் தொடர்ந்து நடத்தி வருகின்ற குடும்ப, ஊர், கிராமங்கள், நாடு, தேசம் என நடைபெறுகின்ற அனைத்து கொண்டாட்டங்களும், விழாக்களுமேயாகும். அவை நடைபெறுகின்ற பொழுது இவை, இவை இந்த நேரத்தில் செய்ய வேண்டும், இப்பொருள் கொண்டு செய்ய வேண்டும், எல்லோரும் இப்படிப் பெற்ற நினைவுகளில் அந்த நேரத்தில் இருக்கவேண்டும் என்ற நிலையைத்தான் சடங்குகள் என்று கூறுகிறோம். இப்படியாகவுள்ள வழிமுறையை இறைவன் தந்த வரமாகத்தான் நாம் நினைவுகூற வேண்டும்.

## அறிவுசார்ந்த சடங்குகள்

உயிர்களை தொல்காப்பியம் (மரபியல்) ஆறு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறது. அஃதே இவைகளாக

*ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே"
ஆறாவது அறிவை பகுத்தறிவு எனச் சொல்கிறோம்.*

இப்பகுத்தறிவு இருவேறு நிலைகளின் இணைவு நிலை எனச் சொல்லலாம், அதுவே அறிவின் நிலை, மனத்தின் நிலை இவை இரண்டும் இணைந்து சொல்லும்போது பிறக்கும் அறிவார்ந்த வழித்தடங்களே, உலகில் வெற்றியடைகிறது. அதுபோல் விழாக்காலங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளுக்கு சடங்குகள், பொருட்கள் எனும் இரண்டு பொருள் பதிந்த சம்பிரதாய வாழ்க்கை நெறிமுறைகளாக முறைப்படுத்தி வெற்றிகாண வேண்டும். இவ்வாறு மங்கலம் நிறைந்த சடங்குமுறை, இயற்கையான பொருட்கள் இவை இரண்டுமே இறைவனையும் மனித குலத்தையும் மகிழ்ச்சியடையச் செய்யும். இவ்வாறு மகிழ்ச்சியே நிறைந்து மங்கலமே நிறையும்பொழுது விழா வெற்றியடைகிறது.



உ
அருள்தரு மங்கை நாயகர்துணை
தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !


T. ராமமூர்த்தி

கல்பனா மெடிக்கல்ஸ்
147, காந்திபார்க் ரவுண்டானா எதிரில்
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 4367866, 98942 16825


T. வெங்கடாச்சலம்

கார்த்திக் மெடிக்கல்ஸ்
சுக்கிரவார்பேட்டை, கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 2300527, 98944 38681

ஸ்ரீ ராம் மெடிக்கல்ஸ்
165. நேதாஜீவீதி, உடையாம்பாளையம்,
கோயமுத்தூர் – 641 028
தொலைபேசி : 2321326, 98948 37620

அரசு மெடிக்கல்ஸ்
No1, வீரமாருதி வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர்
0421 - 2474626. Cell 98941 18215

தியாகு மெடிக்கல்ஸ்
87-A, சுப்பிரமணியம் ரோடு
R.S. புரம், கோயமுத்தூர் – 641 002
போன் : 4367792 984216626

உ

அருள்தரு மங்கை நாயகர்துணை

தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !



R. ராமச்சந்திரன்

நல்ல சமூதாயப்பணிகள் தொடர வேண்டும். நம் சமூகம், நம் மக்கள். நலம் வளம் பெற வேண்டும், நம் சமூகம், நம் சமூகமாக தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். நம் முன்னோர்கள்வழிநடக்க வேண்டும். நம் இனவழிமுறைகள் நெறிமுறைகளை ஒருங்கிணைத்து தொகுத்து நூலாக வடிவமைத்த இந்த அரிய, பெரிய, நல்ல சமுதாயப் பணிக்கு எனது பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள் !

**ஸ்ரீ கண்ணன் மெடிக்கல்**

ராம் நகர், கோயமுத்தூர் – 641 009

உ

அருள்தரு மங்கை நாயகர்துணை



S. கணேசன்

வளமான சமூகமாக நலமான நகரத்தார்களாக சரித்திரம்
போற்றும் சந்ததியினமாக – வாழ சடங்குகளையும்,
சம்பிரதாயத்தை போற்றுவோம்.

**ஸ்ரீ வெங்கடேஸ்வரா பார்மஸி**

53, மெயின் ரோடு, அன்னூர், கோயமுத்தூர் – 641 653

**ஸ்ரீ வெங்கடேஸ்வரா நாவல்டி**

50 மெயின் ரோடு, அன்னூர் – கோயமுத்தூர் – 641 653

Gift, Mobile & Novelty Centre


இப்பிரபஞ்சத்தில் முழுவதுமாகப் பரவி நின்று எல்லாவற்றையும், இயற்கையின் வழியே, இயக்கி நிற்கும் இறையருளை மறப்பதென்பதும், மறைப்பதென்பதும், மறுப்பதென்பதும், இயற்கைக்கு மாறான செயல்களே !

*"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி*
*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்*
*கோனாகி யானெனதென்ற வரவரைக் கூத்தாட்டு*
*வானாகி நின்றா(ன்).....*

இவ்வாறு இயற்கையாகிய இறைவன் தன்னருளால், இப்பிரபஞ்சத்தில் படைத்த பொருள்களைக் கொண்டு, இறைவனுக்கே படைத்து பரிபூரண அருள் நிறைந்த விழாவாக நடத்தவேண்டிய நிகழ்வு முறைகளே, சடங்குகளாகும்.

அத்தகை இயற்கைப் பொருட்களே மங்கலப் பொருள்களாக நாம் எடுத்துக்கொண்டு, விழா நடத்துகிறோம். அவைகளே, வாழைமரம், மாவிலை, மஞ்சள், குங்குமம் தேங்காய், வெற்றிலை, மங்கலவாத்தியம், சங்குஒலி, ஆகியவையும் பஞ்சபூதங்களாக, மண்யிட்டு (மண்) மணவரையமைத்து, நிறைவாக நீர் நிறைந்த குடம் (நீர்) அமைத்து, அக்னி வளர்த்து (நெருப்பு) மங்கல இசை இசைக்க (காற்று) எங்கும் நிறைந்த ஆகாயம் (ஆகாயம்) மேலிருக்க அதிலிருந்து தேவர்கள் வாழ்த்த விழா நடைபெறுகிறது.

இந்நிலையில் இயற்கையான இறைவனே பொருட்களாகவும், பஞ்ச பூதங்களாகவும் நிறைந்திருக்க, அவனுடைய பரிபூரண அருளாசியுடன் நடைபெறும் வழிமுறைச் சடங்குகள், இம்முறையை கற்கால மனிதனாக தோன்றிய காலம் முதல் இயற்கையை வழிபட்டு, காலத்திற்கேற்ப திருத்தங்கள் செய்து அவ்வாறு மாற்றியமைத்து, வந்துள்ளோமே தவிர அவற்றை விட்டுவிடவில்லை, ஆனால் இன்று நாம் முழுமையாக மறப்பதென்பது, மறைப்பதென்பது, மறுப்பதென்பது வேதனை தரும் செயலாகும்.

இன்று வளர்ந்துவிட்ட விஞ்ஞானம், மெய்ஞானத்தால் உணராத, இயற்கைக்கு மாறான ஒன்றை கண்டுபிடித்ததாக நிகழ்வுகள் இல்லை, விஞ்ஞானமும் இயற்கை எதுவோ, மூலம் எதுவோ, அவற்றை பயன்படுத்தி மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது தான் நாம் கண்டுகொண்டுள்ள உண்மை....

எனவே உண்மை எதுவோ, இயற்கை எதுவோ, மூலம் எதுவோ, அதுவே இறைவன் தந்த வரமாக நினைத்து சடங்கு முறைகளாக முறைப்படுத்தி எல்லா நலமும் பெற்று வாழ்வோமாக !

நலமே விளைக !
நன்மையே பெருக !
தொன்மையே தூய நெறியாகுக !!!



# திருமண வாழ்த்து

இருமனமும் ஒருமனதாய் கூடி வாழ்க !

இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வாழ்க !

பெருமையுடன் பலர் போற்ற நீடு வாழ்க !

பேறுபதினாறும் பெற்று வாழ்க !

குருவருளும், திருவருளும் கூடியே வாழ்க !

குலம் பெருமை, தமிழ் பெருமை காத்து வாழ்க ! நீவீர்

அறுபதொடு, எண்பதும் நூறும் காண இந்நாளில்

மங்கை நாயகரை வணங்கி வாழ்வாங்கு வாழ்க என

வாழ்த்துகிறோம்.





# திருமண நிகழ்ச்சிகள்



மனித வாழ்க்கையில் திருமணம் செய்த மனிதன் முழுமையடைகின்றான். பருவத்தே பயிர் செய் என்பது போல் பருவத்தில் திருமணம் செய்ய வேண்டும். அது ஆண்களுக்கு 25 வயது பெண்களுக்கு 21 வயது என்பது தகுதியான வயது எனலாம். அந்த காலக்கட்டத்தில் பெற்றோர் திருமண ஏற்பாடு செய்யலாம்.

மற்ற சமூகங்களில் இல்லாத பெருமைப்பெறத்தக்க சிறப்பான நடைமுறை, நம் சமூகத்தில் வரதட்சணை என்ற பெயரில் சீர், சீராட்டு இவ்வளவு செய்யவேண்டும் என்று பேசிக்கொள்வது இல்லை என்ற மரபு இதுவரை கடைப்பிடித்து வருவது அனைத்து சமூகத்தாரிலும் நமக்கு உயர்வான தோற்றத்தை, மதிப்பை உண்டாக்கும் உன்னதமான நற்பண்பு ஆகும்.

**பெண்தேடுதல் :**

மகனுக்கு பெண் பார்க்க நினைத்து தன்னுடைய குடிப்பட்டம் அல்லாத வேறுகுடிப்பட்டத்தில் உள்ள தங்களுக்கேற்ற மணமகளை உறவினர்களைக் கலந்து தக்கவர்களைக் கொண்டு பெண் கேட்கவேண்டும். இது முறைப்படி பெண் கேட்பதாகும்.

பெண் பார்க்க நினைத்தால் உறவினர் இல்லங்களில் நிகழும் திருமணம் முதலான நிகழ்ச்சிகளில் பார்ப்பது, திருவிழாக் காலங்கள் உலகன்பட்டி ஞானியார் மடம் தைப்பூசத் திருவிழா, கொன்னையூர் முத்துமாரியம்மன் திருவிழா, பொன்னமராவதி பட்டமரத்தான் பூச்சொரிதல், பிரான்மலை ஆறாம் திருவிழா, தைப்பூசத்திருவிழா, சிறுகுடி சாத்தரை, சொக்கம்பட்டி சாத்தரை, புரவிஎடுப்பு முதலிய விசேட நிகழ்ச்சிகளில் பார்த்து இருந்திருக்கிறார்கள்.

பெண்வீட்டார் மணமகனின் விவரம் அறிந்து திருமணம் செய்ய சம்மதம் தெரிவித்த பின் மணமகனின் ஜாதகக் குறிப்பைப் பெண் வீட்டாருக்குக் கொடுக்கவேண்டும்.

பெண்வீட்டார் பெண்ணுடைய ஜாதகத்துடன் பிள்ளையின் ஜாதகப் பொருத்தம் பார்த்து சரி என்றால் சம்மதம் தெரிவித்து பெண் ஜாதகத்தைக் கொடுப்பார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுடைய ஜாதகத்தை வாங்கிப் பொருத்தம் பார்த்து சரி என்றால் சம்மதம் சொல்லி திருமணம் செய்து கொள்ளலாம் எனப் பேசி முடிவு செய்து கொள்ளலாம். மாப்பிள்ளை வீட்டார் பெண் கேட்டு வந்ததும்

பெண் வீட்டார் தாய்மாமன்மார்களைக் கலந்து பேசி சம்மதம் தெரிவிப்பார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் தாய்மாமன்மார்களைக் கலந்து பேசி முடிவு செய்வார்கள்.

சம்மதம் என்று இரு வீட்டாரும் தெரிவிக்கும் முன் தற்காலத்தில் பெண்வீட்டில் பெண் பார்த்தல் என்ற நிகழ்ச்சியும் நடைபெறுவதுண்டு.

**நாள் குறித்தல் :**

இரு வீட்டாரின் சம்மதத்திற்குபின் உறவினர்கள் கலந்துபேசி ஒரு ஜோதிடரிடம் சென்று திருமண நாள், நேரம், கோவிலுக்குச் செல்வது, பட்டுக்கொண்டு செல்ல, மண்டபத்திற்கு பெண், பிள்ளை அழைக்க, திருப்பூட்டும் நேரம், குடி அழைக்க ; வீடு அறிய முதலான நிகழ்ச்சிகளுக்கு நேரம் குறித்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

**நிச்சயதார்த்தம் :**

திருமண நிகழ்ச்சி குறித்து எழுதி வாங்கியதும் திருமணத்தை உறுதி செய்து கொள்வது அவசியம். அதற்கு திருமணத்திற்கு முன் ஒரு நன்னாளில் பெண்ணின் தாய்மாமன்மார், பங்காளிகள், உறவினர்கள், மாப்பிள்ளையின் தாய்மாமன்மார், பங்காளிகள், உறவினர்கள் மற்றும் சான்றோர், பெரியவர்கள் சகிதம் கூடி நிச்சயதார்த்தம் செய்துகொள்ளவேண்டும்.

மணமகன் வீட்டில் பெண் வீட்டிற்கு நிச்சயதார்த்தத்திற்கு கொண்டு போகவேண்டிய பொருட்களை நடுவீட்டில் வைத்து விளக்கு ஏற்றி வீட்டு தெய்வம், குல தெய்வத்தை வணங்கி மஞ்சள் துணியில் குலதெய்வத்தை நினைத்து பணம் முடிந்து புறப்படவேண்டும்.

முன்னாளில் முகூர்த்தப்பட்டு எடுப்பது இல்லை. இப்பொழுது பலர் பட்டுச்சேலை கொண்டு செல்லும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

அதிலும் இன்றும் சில குடும்பங்களில் முகூர்த்தப் பட்டுச்சேலை கொண்டு செல்வதுமில்லை, பெற்றுக்கொள்வதுமில்லை என்னும் பழக்கம் உள்ளது.

மஞ்சள், குங்குமம், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு சந்தனம், இனிப்பு, பூ முதலியன ஒற்றைப்பட எண்ணிக்கையில் மரவை அல்லது தாம்பாளத்தில் வைத்துக்கொண்டு செல்ல வேண்டும்.

பெண்வீட்டிற்கு நாதஸ்வர இசையுடனோ அல்லது சங்கு ஊதியோ செல்லவேண்டும்.

அங்கு நடுவீட்டில் விளக்கு ஏற்றிவைத்து மணப்பெண்ணை அலங்கரித்து இருக்கச்செய்து மங்கலப் பொருட்களடங்கிய மரவை அல்லது தாம்பாளங்களை பரப்பி வைக்கவேண்டும்.



திருமணம் குறித்து எழுதி வைத்துள்ளதை மாமன்மார், பங்காளிகள் மற்றும் உறவினர்கள் கூடி அமர்ந்திருக்கும் சபையில் வேதியரை படித்துக் காண்பிக்கச் சொல்லவேண்டும்.

அதில் மணமகன் ஊர், பெற்றோர் பெயர், குடிப்பட்டம் இன்னார் மகன் இன்னாருக்கும் மணப்பெண் ஊர், குடிப்பட்டம் இன்னார் மகள் இன்னாருக்கும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நற்பொழுதில் குறிப்பிட்ட இடத்தில் திருமணம் செய்ய உத்தமம், மற்ற காரியங்களும் குறித்து வைத்தபடி வேதியர் படித்துக் காட்டவேண்டும்.

மணமகன் பெண் வீட்டிற்கு புறப்படும்நேரம் அல்லது மணமகன், மணமகள் திருமண மண்டபத்திற்கு அழைக்கும்நேரம் மணமகன் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் நேரம், மணமகள் வீட்டிற்கு அல்லது அறைக்கு உப்பு ஓலைப்பெட்டி, பட்டு கொண்டு செல்லும் நேரம், திருப்பூட்டும் நேரம், குடி அழைக்கும் நேரம் முதலிய விவரங்கள் அன்று படித்துச் சொல்லவேண்டும்.

மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளையின் தகப்பனார், மாமன் முதலான உறவினர்களும் பெண்ணின் தகப்பனார், மாமன்மார் மற்றும் உறவினர்களும் விபூதி பூசி வாழ்த்த வேண்டும்.

கொண்டுவந்துள்ள தேங்காய், பழங்களை முதலில் மாப்பிள்ளை மாமன்மார் மைத்துனர்களுக்கும் பெண்ணின் மாமன்மார், மைத்துனர்களுக்கும் மற்றும் வந்திருக்கும் அனைத்து உறவினர்களுக்கும் கொடுத்து மரியாதை செய்யவேண்டும்.

மற்ற திருமண வேலைகள் செய்வது பற்றியும் கலந்து பேசிக் கொள்ளவேண்டும்.

திருமணப் பத்திரிக்கை அச்சடிப்பது, கோவிலுக்கு பத்திரிக்கை வைப்பது மாமன் மைத்துனர்களுக்கு வைப்பது, பெண்வீட்டாருக்கும் பெண் வீட்டு உறவினர்களுக்கு பிள்ளை வீட்டார் சொல்லவேண்டிய விவரமும், பிள்ளை வீட்டாருக்கும் பிள்ளை வீட்டு மாமன் மைத்துனர் மற்றும் உறவினர்களுக்கு பெண் வீட்டார் சொல்லவேண்டிய விவரமும் விவரங்களை கலந்து பேசி எழுதி வாங்கிக்கொள்ள வேண்டும்.

திருமணம் எங்கு எப்படிச் செய்வது, யார் பொறுப்பாகச் செய்வது என இருவீட்டார்களும் சேர்ந்து செய்வது என்பதைக் கலந்து முடிவு செய்து கொள்ளவேண்டும்.

**குறிப்பு :**

1. நிச்சயதார்த்தம் திருமணத்திற்கு முன் ஓரிரு மாதங்கள் முன்பாகவோ சில தினங்கள் முன்பாகவோ வைத்துக்கொள்ளலாம்.

2. உறவினர் வர, போக சௌகரியம் என நினைத்து திருமணத்திற்கு முதல் நாள் இரவு சிலர் வைத்துக் கொள்கிறார்கள்.

3. நிச்சயதார்த்தம் என்றால்தான் பெண்ணை உட்காரவைத்து பட்டுக்கொண்டு போய் எல்லோரும் விபூதி பூசும் பழக்கம் உள்ளது. பேசி முடித்துக்கொள்வது என்றால் இதைச் செய்வதில்லை.

4. திருமண நாளுக்கு முன் மணமகனுக்கும் மணமகளுக்கும் மாமன்வீடு, பங்காளிகள் வீடு, மாப்பிள்ளை விருந்து பெண் விருந்து என விருந்து ஆக்குவார்கள்.

*திருமணப் பத்திரிக்கை :*

இரு வீட்டாரும் அவரவர் விருப்பப்படி ஊர், குடிப்பட்டம் படிப்பு விவரங்களுடன் நாள், நேரம், குறிப்பிட்டு திருமணப் பத்திரிக்கை அச்சடித்துக் கொள்ளலாம்.

நல்ல நாளில் மணமகன் வீட்டார் பிரான்மலையில் அருள்மிகு தேனம்மை உடனிருக்கும் மங்கை நாயகரை வழிபட்டு அர்ச்சனை செய்து பத்திரிக்கை வைத்து வணங்கி வரவேண்டும்.

பாண்டி நாட்டாசான் குருக்கள் ஐயா அவர்களுக்கும் வைக்க வேண்டும்.

மாமன்மார், மைத்துனர்கள், உறவினர்களுக்கு நல்ல நாள் பார்த்து நேரில் போய் வெற்றிலை, பாக்கு, பணம், வைத்து பத்திரிக்கை வைத்து அழைக்கவேண்டும்.

மாமன், மைத்துனர்களுக்கு 5 பணமும் மற்றவர்களுக்கு 3 பணமும் வைத்து அழைக்கும் பழக்கம் இருந்தது. தற்பொழுது மாமன் மைத்துனர்களுக்கு மட்டும் 5 பணம் என்பதற்குப் பதிலாக ரூ.1.25 வைத்து அழைக்கும் வழக்கம் உள்ளது. பங்காளிகளுக்கு பணம் வைப்பது இல்லை.

பணம் வைத்து அழைத்த மரியாதையை ஏற்றுக்கொண்டு திருமணத்திற்கு வந்து வாழ்த்தி மகிழ்ந்தவர்கள் ஒரு பணம் ஒட்டிக் கொடுக்கின்றார்கள். ரூ.1.25 1 பணத்திற்குப் பதில் 0.25 பைசா சேர்த்து 1.50 திருப்பிக்கொடுக்கின்றார்கள். பங்காளிகள் 1 பணம் கொடுப்பார்கள்.

## முன்னோர்கள் நடத்திய பகவான, ஒருதலைக் கல்யாண முறைகள்

திருமணம் முன் தலைமுறைக் காலங்களில் பகவானக் கல்யாணம், ஒருத்தலைக் கல்யாணம் என்று ஒருவாரம் பத்து நாட்களில் சிறப்பாக நடந்திருக்கின்றன. விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



*பகவானக் கல்யாணம் :*

மாப்பிள்ளை வீட்டில் முகூர்த்தக் கால் ஊன்றி, சங்கூதி ஊருணி சென்று மண் எடுத்துவந்து, மணமேடை அமைத்து, அரசாணிக்கால் வைத்து, பொங்கல் வைத்து, முகூர்த்த நெல் வைத்து, கும்பிட்டுக்காட்டி, விநாயகர் வழிபாடு செய்து, பெண் வீட்டிற்கு உறவினர்களுடன் சென்று மணமுடித்து, பெண் வீட்டு உறவினர்களை அழைத்துவந்து விருந்து முடிப்பது என்பது பகவானக் கல்யாணத்தின் முக்கிய நிகழ்ச்சிகள்.

*ஒருத்தலைக் கல்யாணம் :*

மணமகன் வீட்டில் முன்கூறிய எல்லாம் செய்து பெண் வீட்டு ஊரில் மணமகன் வீட்டார் விடுதி ஏற்பாடு செய்து எல்லாப் பொருட்களையும் கொண்டு சென்று விருந்து முதலியவற்றை அவர்களே ஏற்பாடு செய்து மணமுடித்து வருவார்கள்.

அவரவர் உறவினர் விருந்து அவரவர் பொறுப்பு.

மணமகனும் மாப்பிள்ளைத் தோழன் மட்டும் பெண் வீட்டில் விருந்தோம்பல்.

*மாப்பிள்ளை அலங்காரம் :*

பஞ்சகச்சம் வேட்டி கட்டி, இடுப்பில் சிகப்பு பட்டு துண்டுகட்டி, மார்பு, கைகள் எல்லாம் சந்தனம் பூசி வகிர்ந்து, விபூதி பூசி, பொட்டு வைத்து, சிட்டு குத்தி, வண்டிக் கடுக்கன் போட்டு, மாணிக்கத் தலைப்பாகை அணிந்து சட்டையை சட்டை செய்யாமல் மாப்பிள்ளைத் தோழன் கைப்பிடித்து வர கம்பீரமாக வருவார்.

பெண் பட்டுக்கட்டி நெற்றிச்சுட்டி பொட்டு, வைத்து விபூதி பூசி, திலகமிட்டு நகையணிந்து, ஒட்டியாணம் அணிந்து, சடை நாகம் பூ அலங்காரித்து அன்னநடை பின்னிவர ஒயிலாக நடந்து வருவார்.

★★★★★★★★★★★★★★★

முகூர்த்தக்கால் ஊன்றுதல்

திருமண வேளையில் முகூர்த்தக்கால் நல்ல நேரத்தில் ஊன்றி கொட்டகை போட்டு வேலை ஆரம்பிக்கப்படும்.

நல்ல நாளில் கொட்டகைக்காரர் வந்து வீட்டின் வாசலில் ஈசான்ய (வடகிழக்கு) மூலையில் மஞ்சள் குங்குமம் தடவிய ஒரு மூங்கில் கம்பின் முனையில் மா இலை கட்டி ஊன்றி வைப்பார். அதற்குத் தேங்காய் உடைத்து கற்பூரம் தீபம் காட்டி நல்ல முறையில் நடந்தேற வேண்டும் என்று வழிபட்டு ஆரம்பிக்கவேண்டும். இது இரு வீட்டிலும் நடைபெற வேண்டிய நிகழ்ச்சி. தட்சணை கொடுப்பதுண்டு.

சுவாமிக்கு பணம் முடிவது :

அவரவர் குல தெய்வங்களுக்கும், வீட்டு தெய்வத்திற்கும் பணம் எடுத்துவைத்து மஞ்சள் துணியில் முடிந்து வைத்து திருமண நிகழ்ச்சிகள் நல்லவிதமாக நடத்தி முடிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வார்கள்.

சமையல் ஆரம்பம் :

சங்கு ஊதி உலையில் அரிசி போட்டு சமையல் ஆரம்பிக்க வேண்டும்.

மணவறை அமைத்தல் :

மணவறைக்கு மண் எடுக்க சுமங்கலிப் பெண்கள் ஏழுபேர் சங்கு ஊதிக்கொண்டு சென்று ஊருணியில் மண் எடுத்து வருவார்கள்.

மண் சேர்த்து மணமேடை அமைப்பார்கள்.

அரசாணிக்கால் :

மணமேடைக்கு நேர் எதிராக கல்யாணக் கிலுவை மரக்கம்பை பள்ளம் தோண்டி, மண் வைத்து, பால் ஊற்றி, கிலுவைப்பாலைக் குச்சியை ஊன்றிக் கட்டி வைப்பார்கள்.

கிலுவையை ஊனாங்கொடியைக் கொண்டு கீழிருந்து மேலாக இடைவெளி இல்லாமல் சுற்றிக்கொண்டுபோய் மேல் நுனியில் முடிப்பார்கள். அரசங்கொப்பு, மாங்கொப்பு, தர்ப்பைப்புல் எல்லாம் சேர்த்துச் சொருகிவைக்க வேண்டும்.

பட்டுத்துணிவைத்துக் கட்டி நகை போடவேண்டும்.

அரசாணி விளக்கு வைத்துக் கட்டி எண்ணெய் ஊற்றி திரிபோட்டு, ஏற்றி வைக்கவேண்டும்.

ஆயிரங்கால் விளக்கு :

சொம்பில் நிறைய விளக்கெண்ணெய் ஊற்றி, பெரிய திரிபோட்டு திரி உள்ளே இறங்கிவிடாமல் இருக்க சிறுசெங்கல் வைத்து ஏற்றிவைப்பார்கள்.

மர உரலில் சிவப்பு மண் பட்டை அடித்து அதன் மேல் வைப்பதும் உண்டு. இது ஆயிரங்கால் விளக்கு எனப்படும்.

முகூர்த்த நெல் அவித்தல் :

மணமேடைக்கு எதிரில் பெரிய மண்பானை, மஞ்சள் நூல் கட்டி வைக்கோல் பிரிமனை மேல் விபூதி பூசி வைக்கவேண்டும்.

16 படி நெல் கடகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

சொம்பில் பால், தண்ணீர் கலந்து வைத்திருக்க வேண்டும்.



சொம்பில் இருக்கும் பாலை இருகைகளால் பானையில் ஊற்றி, இருகை நிறைய நெல் அள்ளிப்போடுவார்கள். வந்திருக்கும் உறவினர்கள் அனைவரும் செய்வார்கள். பானை நிறைந்தால் நெல்லை சிறிது அள்ளி எடுத்து வைத்துக்கொண்டு மறுபடியும் அள்ளிப்போடுவார்கள். அனைவருக்கும் வெற்றிலை பாக்கு கொடுக்கப்படும்.

மிஞ்சி அணிவித்தல் :

திருமணத்திற்கு முதல் நாள் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் வெள்ளி மிஞ்சி அணிவிப்பார்கள்.

முளைப்பாரி வைத்தல் :

அரசாணிக்காலுக்குக் கீழே முளைப்பாரி வைப்பார்கள். கம்பு, கேப்பை, நெல், பாசிப்பயறு, தட்டப்பயிறு, மொச்சை முதலிய பயறு வகைகளை ஊறவைத்து முளைப்பாரியில் மண்வைத்து பரவிவிடுவது. தண்ணீர் தெளிக்கவேண்டும். மூன்று நாட்களில் நன்று வளர்ந்து பசுமையாக இருக்கும்.

கொழுமேளம் :

திருமணத்திற்கு முதல் நாள் மேளகாரர்கள் வந்ததும் சங்கூதி திருமண வேலைகளை தொடங்கும் (கொழுகும்) விதமாக மேளம் வாசிப்பார்கள். கொழுகுவதால் கொழுமேளம்.

நாளிடுதல் :

நகை அணிவித்தல்

பெண் கழுத்தில் இருக்கும் பவளம், மணியை தகப்பனார் பெருக்கி பெருமணி போடுவார். இதற்கு நாளிடுதல் எனப் பெயர்.

மாப்பிள்ளைக்கு போடுவது வண்டிக்கடுக்கன் எனப்படும்.

விநாயகர் வழிபாடு :

மாப்பிள்ளை மாமன்மார், மைத்துனர்மார், பங்காளிகள் மற்றும் உறவினர்களுடன் விநாயகர் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வரவேண்டும்.

மணமகன், மணமகள் இருவருக்குரிய பூமாலைகள், கைச்செண்டு 4, விநாயகருக்கு மாலை, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, தீப்பெட்டி முதலான பொருட்களை ஒற்றைப்படை எண் 7, 9 என தாம்பாளங்களில் வைத்து, நாதசுரம் மேளம் முழங்க சங்கு ஊதிக்கொண்டு மாப்பிள்ளை, தொப்பி வைத்துக்கொண்டு குதிரையில் ஏறிச்சென்று விநாயகரை வழிபாடு செய்யவேண்டும். குதிரைக்குப் பதில் அலங்கார கார் வைப்பதும் உண்டு.

அங்கு வழிபட்டதும் அர்ச்சகர் மணமகனுக்கு விபூதி பூசி மணமகனுக்குரிய மாலையை அணிவிப்பார். வலம் வந்து சிதறுகாய் உடைத்து திருமண மண்டபம் திரும்பவேண்டும்.

திரும்ப வரும்பொழுது வாணவேடிக்கைகள் வைப்பதுண்டு.

(வீடு) திருமணமண்டபம் வந்ததும் மாப்பிள்ளையின் சகோதரிகள் ஆராத்தி எடுக்கவேண்டும். மணமகன் வெற்றிலை பாக்குடன் பணம் வைத்துக்கொடுத்து மரியாதை செய்வார்.

### பகவானைப் பொங்கல் :

மாப்பிள்ளை கோவிலுக்குப் போகும் பொழுது பெண்ணின் தாயார், பங்காளிகள் அரசாணிக்கால் முன் வெண்பொங்கல் வைத்துப் படைப்புப் போட்டு வழிபாடு செய்வார்கள்.

### பட்டுக்கொண்டு போகுதல் :

சின்னபடிக்கு 16 படி உப்பு அளந்து மாப்பிள்ளை சகோதரிகள் 3 சிட்டியில் உப்பு அதன் மேல் பனை ஓலை வைத்து தாலிகட்டுப்பட்டு கொண்டு வரும்பொழுது எடுத்து வருவார்கள். மாப்பிள்ளையின் சகோதரிகள் பொங்கலுடன் மஞ்சள் சேர்த்து மூன்று உருண்டைகள் மரவையில் வைத்து குச்சியில் துணி சுற்றி உருண்டைகள் மேல் விளக்கு ஏற்றுவார்கள். பெண் அறைக்கு கொண்டு சென்று பெண்ணின் முன் வைத்து பெண்ணிற்கு விபூதி பூசுவார்கள். பிறகு வீதியில் விடுவார்கள்.

இதுபோல் மணப்பெண்ணின் சகோதரிகள் மாப்பிள்ளை முன் வைத்து மாப்பிள்ளைக்கு விபூதி பூசுவார்கள். இதற்கு ஆராத்தி என்று பெயர் ஆகும்.

மணமகளுக்குரிய பூமாலை, கைச்செண்டு, மஞ்சள், குங்குமம், மணமகனின் தாயார் கொண்டு செல்ல வேண்டும்.

சீர்கூடை, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பொன்னிடு மஞ்சள் மாப்பிள்ளைக்கு பங்காளிகள் கொண்டுபோக வேண்டும்.

பட்டு மாப்பிள்ளைக்குத் தாயார் எடுத்துச் செல்வார்.

உப்பு, நெய் மாப்பிள்ளைக்குச் சகோதரி கொண்டு போக வேண்டும்.

### மாப்பிள்ளை அழைப்பு :

பெண்ணின் சகோதரர் தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு வைத்து 5 பணம் தற்சமயம் ரூ.1.25 வைத்து அழைக்கவேண்டும்.

முகூர்த்த நேரத்தில் மணமகனின் மாமன் மாலை அணிவித்து விபூதி பூசி மணமகனை மணமேடைக்கு அழைத்து வருவார். அப்பொழுது பெண்ணின் சகோதரி ஆரத்தி எடுப்பார். மணமகன் பாக்கு வெற்றிலையுடன் பணம் வைத்து முறை செய்வார். மணமகன் மண மேடையை வலம் வந்து மேடையின் பின்புறம் வந்து மேடையில் வலது கால் வைத்து மேலே ஏறி நின்று சபையோரை வணங்கி மேடையின் வலதுபுறம் அமரவேண்டும்.



மணப்பெண்ணின் தாய்மாமன் மணமகளுக்கு மாலை அணிவித்து விபூதி பூசி மணமேடைக்கு அழைத்து வரவேண்டும். மேடையை வலம் வந்து மேடையின் பின்புறம் வந்து மேடையின் இடதுபுறம் மேடை மேல் வலது கால் வைத்து மேலே ஏறி சபையோரை வணங்கி மணமகனின் இடதுபுறம் அமரவேண்டும்.

### கும்பிட்டுக்காட்டுதல் :

மணமகன், மணமகள் இருவர் வீட்டிலும் வந்திருக்கும் உறவினர்களிடம் கும்பிட்டு ஆசி பெறுவார்கள். உறவினர்கள் அமர்ந்திருக்கும் சபையில் மாப்பிள்ளைத் தோழன் கையில் இருக்கும் தேங்காயை ஒவ்வொருவரிடமும் கொடுப்பார். அவர்கள் வாழ்த்திக் கும்பிட்டு வெற்றிலை பாக்குடன் கொடுக்க மாப்பிள்ளை அவர்களை வணங்கிக் கும்பிட்டு தேங்காயைப் பெற்றுக்கொள்வார். அது சமயம் அன்பளிப்புகள் வழங்குவதாக இருந்தாலும் குவிந்த கைகள் தேங்காய்க்குள் இருப்பது தெரியாமல் வைத்துக் கொடுப்பார்கள். பணம் வைக்காமலும் வாழ்த்தித் தேங்காயைக் கொடுப்பதும் உண்டு. இதன் மூலம் அடுத்தவருக்குத் தெரியாமல் மறைபொருளாக அந்தரங்கம் பாதுகாக்கப்படும். இம்முறை கும்பிட்டுக்காட்டுதல் எனப்படும். இதே முறை பெண்ணின் தோழி தேங்காயைக் கொடுக்க பெண் வணங்கிக் கும்பிட்டு வாங்கிக் கொள்வார்.

### தாலி கட்டும் நிகழ்ச்சிகள் :

### காப்புக் கட்டுதல் :

மணமக்களுக்குக் காப்புக் கட்ட மணமகனும் மணமகளும் மரவையிலிருக்கும் பச்சரிசியை இருகைகளிலும் சேர்த்து அள்ளி வைத்துக் கொண்டு அதன் மேல் தேங்காய் வைத்திருக்க அவரவர் மாமன்மார்கள் முன் தயாரித்து வைத்துள்ள மஞ்சளில் நனைத்து வைத்துள்ள கயறை கெட்டி மேளம் கொட்ட சங்கு ஒலிக்க மணமகனின் வலது கையிலும் மணமகளின் இடது கையிலும் கட்டுவார்கள். விபூதி பூச வேண்டும். மணமிடவேண்டும்.

மணமகனின் மாமன் மாப்பிள்ளைக்குப் பூசியதும் பெண்ணுக்கும் பெண்ணின் மாமன் பெண்ணுக்கு பூசியதும் மாப்பிள்ளைக்கும் மணமிட்டு விபூதி பூசி வாழ்த்த வேண்டும்.

மணமகனின் முன்பும் மணமகளின் முன்பும் முக்காலியில் முறிச்சட்டி வைத்து அதில் பால் ஊற்றி தண்ணீர் ஊற்றி பூக்களைப்போட்டு வைக்கவேண்டும். அந்தப் பூக்களை எடுத்துத்தான் மணமிடுவது.

### ஓமம் வளர்த்தல் :

வாழை இலை விரித்து வைத்து பச்சரிசியை பரப்பிவைக்க வேண்டும். மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைக்கவேண்டும்.

அய்யர் கும்பம் வைத்து ஓமம் வளர்ப்பார். கும்பத்திற்கு மா இலை வைத்து, பாக்கு, வெற்றிலை, 2 பழம் வைத்து நெய்வேத்யம் செய்யப்படும். தாம்பாளத்தில்

மஞ்சள் கயறு கோர்த்த மாங்கல்யத்திதற்கு பூஜை உரு ஏற்றப்படும். அக்னியைத் தொட்டுக் காட்டி உரு ஏற்றப்படும். மூன்று முறை செய்ய வேண்டும்.

**திருப்பூட்டுதல் :**

தாம்பாளத்தில் சிகப்புப் பட்டுத்துணியை மடித்து வைத்து தாலிக்கயிறை பதமாக வைத்து மஞ்சள், பூ வைத்து அட்சதைபோட்டு வழிபாடு செய்யவேண்டும்.

மாப்பிள்ளையின் சகோதரன் தாம்பாளத்தை பெரியவர்களிடமும் உறவினர்களிடமும் காட்டி ஆசிபெற்று வரவேண்டும்.

தாம்பாளத்தில் இருக்கும் தாலிக்கயிற்றின் இருமுனைகளையும் தன் இரு கட்டை விரலால் கவனமாக அழுத்திப் பிடித்துக்கொண்டு காட்டிவரவேண்டும்.

பங்காளி அட்சதையும் உதிரிப் பூக்களையும் எல்லோருக்கும் கொடுத்து வரவேண்டும்.

தாம்பாளத்தில் இருக்கும் பாக்கு, மஞ்சளை மணமகள் இருகைகளிலும் அள்ளி வைத்துக்கொண்டு தேங்காயையும் அதன்மேல் வைத்துக் கொள்ளவேண்டும்.

தாலியை மாப்பிள்ளையின் தகப்பனார் எடுத்து மணமகனின் இரு கைகளிலும் தாலி கட்டுவதற்குத் தோதாக இருமுனைகளையும் இருகைகளிலும் கொடுக்கவேண்டும்.

மணமகன் பெற்று நாதசுரக் கெட்டிமேளம் முழங்க சங்கு ஒலிக்க மணமகள் கழுத்தில் கட்டி மூன்று முடிச்சு போட்டு தாலியிலும் மூன்று முடிச்சிலும் சந்தனம், குங்குமம் பொட்டு வைத்து வாழ்த்த வேண்டும்.

உறவினர்கள் அனைவரும் அட்சதையையும் பூக்களையும் மணமக்கள் மேல் தூவி ஆசீர்வதிக்க வேண்டும்.

திருப்பூட்டியதும் மணமகன் வீட்டு மாப்பிள்ளை மங்கல வாழ்த்துப் பாடலை மூன்று முறை வாசிக்க வேண்டும்.

**மணமிடுதல் :**

பெரியோர்கள் தலைப்பாகையாக துண்டை கட்டிக்கொண்டு மணமிட வேண்டும்.

முதலில் மணமகனின் தகப்பனார், பெண்ணின் தகப்பனார், மணமகனின் மாமன், பெண்ணின் மாமன், அப்படியே பங்காளிகள், மாமன் மைத்துனர் அனைவரும் மணமிட்டு விபூதி பூசி ஆசீர்வதிக்க வேண்டும்.

முக்காலியில் இருக்கும் பாத்திரத்தில் பாலில் மிதக்கும் பூக்களை எடுத்து மணமக்களுக்கு கை, தோள், தலை என மூன்று இடங்களில் தொட்டு பதினாறு பேரும் பெற்று பெருவாழ்வு வாழ்க, என மூன்று முறை வாழ்த்தி ஆசீர்வதிக்க



வேண்டும். மணமிடும் முன்பு மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் விபூதி பூச வேண்டும்.

அனைவருக்கும் இனிப்பு வழங்க வேண்டும்.

**தாரை வார்த்தல் :**

மாப்பிள்ளை கையில் வெற்றிலை பாக்கு வைத்து பெண் மாவிலையால் தண்ணீர் தொட்டு வைத்துக் கொடுப்பார்.

பெண்ணின் கையில் வெற்றிலை பாக்கு வைத்து பெண்ணின் தகப்பனார் தண்ணீர் தொட்டு வைத்துக்கொடுத்து பெண்ணை தாரை வார்த்துக் கொடுப்பார்.

**ஆண்பிள்ளை :**

சிறுவயது ஆண் குழந்தையை மணமகனின் தகப்பனார் மணமக்களின் மடிகளில் வைத்து ஆண்பிள்ளை, ஆண்பிள்ளை என்று மூன்றுமுறை சொல்லி மூன்று முறை வைத்து எடுக்கவேண்டும். முதலில் ஆண் குழந்தை பிறக்கவேண்டும் என்பதற்கு இது ஒரு சடங்காகும்.

**கையடை செய்தல் :**

பெண்ணின் தகப்பனார் பெண்ணின் வலது கையை மாப்பிள்ளையின் இடது கைமேல் வைத்து என் மகளை அடைக்கலம் என்று உங்களிடம் ஒப்படைத்தேன் என்பதாக சிவப்பு பட்டுத்துண்டால் சுற்றிக் கட்டி, மூடி மணமகள் அறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

**கைவிடப்பணம் :**

பெண்ணின் சகோதரர் வெற்றிலை, பாக்கு பணம் 1.25 மாப்பிள்ளைக்கு வைத்து கைவிடவேண்டுவார். இது கைவிடப் பணம் எனப்படும்.

மணமக்கள் பாலும் பழமும் சாப்பிட்டு மறுபடி மணமேடைக்கு வரவேண்டும்.

**இசைவு பொன்னோலை :**

மணமேடைக்கு அழைத்து வந்ததும் மணமகள் வீட்டு மருமகன் இசைவு பொன்னோலை எழுதியதை வாசித்துக் கையொழுத்துப் போடவேண்டும்.

இசைவு பொன்னோலையில் மணமகனின் தகப்பனாரும் மணமகளின் தகப்பனாரும் கையெழுத்துப் போடவேண்டும்.

கையெழுத்துப் போட்டதை நடுவில் பேப்பர் வைத்து ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள வேண்டும்.

**காப்பு நூல் அவிழ்த்தல் :**

தாய்மாமன்கள் மணமக்கள் கைகளில் பச்சரிசியையும், தேங்காயையும்

வைத்திருக்க காப்பு நூலை அவிழ்த்து பால், பூ இருக்கும் முறிச்சட்டியில் விட்டு விபூதி பூச வேண்டும்.

இதற்கு நானாளச் சாத்திரம் எனப் பெயர்.

**மாமியார், கொழுந்தியார் பணம் :**

மணமக்கள் மேடையில் இருக்கும்பொழுது மாமியார் நெய்ப் பணம் என்று இன்ன ஊர் பெரிய மாமியார் நெய்ப்பணம் என்று வழங்குவார்கள்.

அதேபோல் இன்ன ஊர் கொழுந்தியார் நெய்ப் பணம் என்று வழங்குவார்கள்.

மாமியார், கொழுந்தியார்களை அறிமுகம் செய்வதற்காக இந்தச் சடங்கு ஏற்பட்டிருக்கலாம்.

பெண் வீட்டார் மாப்பிள்ளைப் பணம் என்று மாப்பிள்ளைக்கும், மூத்த மாப்பிள்ளைக்கும் பணம் வைத்துக்கொடுத்து மரியாதை செய்வார்கள்.

**குருதட்சணை :**

மாப்பிள்ளை வீட்டார் 5 உம் பெண்வீட்டார் 2.50 ம் கொடுத்து சேர்த்து நகரத்திற்கு 5 கொடுத்துவிட்டு 2.50 குருக்களய்யாவிற்கு கொடுப்பது என்று முன்பு பழக்கம்.

பின்னர் ரூ.10-00 பெண்வீட்டில் 5-00 உம் வாங்கி நகரத்திற்கு 10-00 ம் குருக்களய்யாவிற்கு 5-00 ம் கொடுக்கும் பழக்கம் இருந்தது.

நகரத்திற்கு கொடுப்பது புள்ளியாக பதிவு செய்ததாகக் கொள்ளப்பட்டது.

பட்டு விரிப்பில் பணம் அள்ளிவைத்து மூன்று இடத்தில் மூன்று முறை செய்வார்கள். அதற்கு பல்லாங்குழி விளையாடுதல் என்று பெயர்.

**மடிச்சீலைப் பணம் :**

பட்டுத்துணி விரித்து அதில் சில்லரை போட்டு மாப்பிள்ளையும் பெண்ணும் பசவும் பாண்டி என மூன்று தரம் கலக்குவார்கள். பட்டுப்பையில் சில்லரையைப் போட்டு பெண் முந்தானையில் முடிவார்கள். இதற்கு மடிச்சீலைப் பணம் எனப் பெயர். சபையைக் கும்பிட்டுக் காட்டுவார்கள். கையடை செய்து பெண், மாப்பிள்ளையை வீட்டிற்குள் அழைத்துவிடுவார்கள்.

**கதவடிப்பணம் :**

பெண்ணின் சகோதரர் வெற்றிலை, பாக்கு ஒரு பணம் வைத்து மாப்பிள்ளை கையில் கொடுப்பார். மாப்பிள்ளை கையை விடுவார். இதற்கு கதவடிப் பணம் என்று பெயர்.

**பூதக்கலப் பனியாரம் :**

வீட்டிற்குள் மாப்பிள்ளை முன் முக்காலி வைத்து அதன்மேல் முறிச்சட்டி



வைத்து நெய்யால் சுட்ட முப்பது கல்யாணப் பனியாரம் பெண் கையால் போடுவார்கள்.

பெண்ணின் சகோதரர் வெற்றிலை பாக்கு ஒரு பணம் மாப்பிள்ளைக்கு கொடுத்தபின் மாப்பிள்ளை பனியாரத்தின் மேல் மூன்று முறை கையை வைத்து எடுப்பார். இதற்கு பூதக்கலப்பணியாரம் எனப் பெயர்.

**சம்பந்தப் பனியாரம் :**

பெண்ணின் தாயார் நெய்யில் சுட்ட முப்பது பனியாரம் முறிச்சட்டியில் போட்டு மாப்பிள்ளை வீட்டிற்குக் கொண்டுபோய் மாப்பிள்ளை முன் வைத்து விபூதி பூசிவருவார்கள். இதற்கு சம்பந்தப் பனியாரம் என்று பெயர்.

திருமணத்திற்கு வந்திருப்பவர்களுக்கு புள்ளிக்கு நான்கு பனியாரம் மூன்று கைப்பிடி பாக்கு கொடுப்பார்கள்.

**குடி அழைப்பு :**

மணமகளின் வீட்டிலிருந்து மணமகன் வீட்டிற்கு அழைப்பது.

மணவறையில் கிழக்கு முகமாக மணமக்கள் நிற்கவேண்டும்.

மணமகளின் பெற்றோர் மணமகனின் பெற்றோர் மாமன்மார், மைத்துனர்மார்கள், பங்காளிகள், உறவினர்கள் அனைவரும் மணமக்களுக்கு விபூதி பூசி வாழ்த்தி அனுப்பிவைக்க வேண்டும்.

மணமகளின் பெற்றோர் உடன் செல்லும் வழக்கம் இல்லை.

குத்துவிளக்கு, சருவம், தேங்காய், பழம், பூ, சட்டியில் சீனி போட்டுக்கொண்டு செல்ல வேண்டும். சீர் சாமான்கள் பின்னர் அனுப்பலாம்.

மணமகன் வீட்டில் மணமகனின் தாய் ஆரத்தி எடுக்கவேண்டும். வெற்றிலை, பாக்கு, பணம் வைத்து மரியாதை செய்யவேண்டும்.

மணமகள் நடுவீட்டில் விளக்கேற்றி வழிபடவேண்டும்.

சங்கு ஊதிக்கொண்டு போய் சருவத்தில் தண்ணீர் எடுத்துவரவேண்டும்.

சருவத்தில் சங்கு, எழுத்தாணி போட்டு மணமக்களை எடுக்கச் சொல்லவேண்டும்.

மாப்பிள்ளை எழுத்தாணியும் பெண் சங்கும் எடுப்பார்கள்.

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அவரவருக்குரியதை எடுப்பார்கள்.

மாப்பிள்ளை வெற்றி, பெண் சமத்தி என்று சொல்வார்கள். மூன்று முறை செய்வார்கள்.

பெண்ணை நிலைக்கதவு, உரி, அரிசிப்பானை, உப்புப்பானை முதலியவற்றைத் தொட்டு வணங்கச் சொல்வார்கள்.

**குடியழைப்புப் பொங்கல் :**

அரசாணிக்கால் முன் பொங்கல் பானை வைத்து வெண்பொங்கல்

வைப்பார்கள். படைப்புப்போட்டு சாமி கும்பிடுவது. குடியழைப்புப் பொங்கல் எனப்படும்.

மாப்பிள்ளை சொம்பில் பால் கொண்டு பெண் கையில் கொடுப்பார்.

பெண் வாங்கி நடுவீட்டில் வைத்து சாமி கும்பிட்டு விபூதி பூசிக்கொள்ளச் சொல்வார்கள்.

சங்கு ஊதி அரசாணி பிரித்து கடகத்தில் அள்ளி முளைப்பாரி எல்லாம் ஊருணியில் விடுவார்கள். மணவறை பிரித்து கிலுவைக்கால் தோட்டத்தில் ஊன்றிவைப்பார்கள்.

முதல் உறவு :

திருமணம் முடிந்ததும் இரவு உணவு அருந்திய பின் மணமக்களுக்குள் ஏற்படும் முதல் உறவு.

நல்ல நேரம் பார்த்து மணமக்கள் உறவு தொடங்கும் நேரம்.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
பாலும் பழமும் உடலுக்குறுதி
வேலும் மயிலும் உயிருக்குறுதி

என்பதற்கிணங்க பரபரப்பு ஒய்ந்து அமைதியான சூழ்நிலையில் நல் உறவைத் தொடங்குவார்கள்.

பால் பழம் சாப்பிட்டு ஒருவரை ஒருவர் உணர்ந்து அறிந்து கருத்தொருமித்து ஈருடல் ஓருயிராய் கலந்து உறவாடி மகிழ்ந்திருப்பார்கள்.

இல்லறம் எனும் பிறவிப் பெருங்கடல் நீந்த வாழ்க்கைப் படகில் பயணம் மேற்கொள்வார்கள்.

இரவில் தொடங்குவதால் முதல் இரவு என்று கூறியிருக்கலாம்.

மஞ்சள் நீராடுதல் :

மணமக்கள் இருவருக்கும் மஞ்சள் அரைத்து தலை, முகம், கை எல்லாம் தடவி தண்ணீர் ஊற்றுவார்கள். இதற்கு மஞ்சள் நீராடுதல் என்று பெயர்.

வாசல் தெளித்தல் :

அதிகாலையில் மணப்பெண் எழுந்து வாசலில் சாணி கரைத்து வாசல் தெளித்து அரிசிக்கோலம் போட்டு தலைக்குளித்து விளக்கேற்றி வழிபட்டு அன்றாடப் பணியைத் தொடங்குவார்.

வீடு அறிதல் :

பெண்ணின் பெற்றோர், மாமன், மைத்துனர், பங்காளிகள் உறவினர்களுடன்



மணமகன் வீட்டிற்கு நல்ல நாள் பார்த்துச் செல்லுதல் வீடு அறிதல் எனப்படும்.

நெய், தேங்காய், பழம், பூ இனிப்பு முதலியன எடுத்துச்செல்ல வேண்டும்.

பெண் ஆரத்தி எடுப்பார். வெற்றிலை, பாக்கு பணம் வைத்து மரியாதை செய்யவேண்டும்.

மணமகன் பெற்றோர் வரவேற்று பெண்வீட்டாருக்கு விருந்துவைத்து உபசரிப்பார்கள்.

மறுவழி :

பிறகு ஒரு நல்ல நாளில் மணமக்களை மறுவழி என அழைத்து வரவேண்டும். மாப்பிள்ளைக்கு 1.25 பணம் வைத்து அழைக்கவேண்டும்.

திரும்பிப் போகும்பொழுது இனிப்பு, பலகாரம், துவரம் பருப்பு, நெய், சீனி, தேங்காய், பழம் கொடுத்து கொண்டுபோய் விட்டுவரவேண்டும்.

ஆடிவேவு :

ஆடிவேவிற்கு மாப்பிள்ளைக்கு பணம் ரூ.1.25 வைத்து அழைத்துப் போகவேண்டும். ஒருமாதம் இருந்து வெங்காய வத்தல் போட்டு வைத்துக் கொடுத்து அழைத்துவிட்டு வரவேண்டும்.

தற்காலத்தில் ஒரு மாதம் சாத்தியம் இல்லை என்பதால் அவரவர் தோதுபோல் வைத்துக்கொள்கிறார்கள்.

தீபாவளி :

தீபாவளிக்கு மாப்பிள்ளைக்கு பணம் வைத்து அழைத்து வேட்டி, சட்டை, சேலை, சட்டை எடுத்துக்கொடுத்து விருந்து வைத்து பலகாரம் செய்து மணமக்களைக் கொண்டுபோய் விட்டுவரவேண்டும்.

சிலர் மூன்று வருடங்களுக்கு அழைக்கிறார்கள். உடைகள் எடுத்துக்கொடுக்கிறார்கள்.

சிலர் தொடர்ந்து கொடுக்கிறார்கள். சிலர் பெண்ணுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். பணமாகக் கொடுக்கிறார்கள்.

கார்த்திகை வேவு :

கார்த்திகை வேவிற்கு பணம் வைத்து மாப்பிள்ளையை அழைத்து வரவேண்டும். அவல், நெய், வெல்லம், தேங்காய் கொடுத்து மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துப்போய்விட்டு வரவேண்டும்.

★★★

அருள்மிகு மங்கை நாயகர் துணை



# இசைவு பொன்னோலை

.................... ஆண்டு ........................ த்திங்கள் .................. ஆம் நாள் (  –  – 200  )

அருவியூரான குலசேகரப் பட்டணத்து *குடிப்பட்டம் மணமகன் தகப்பனார் பெயர்* மகன் *மணமகன் பெயர்* கல்வாச நாட்டு சுந்தர பாண்டியபுரத்து குடிப்பட்டம் *மணமகள் தகப்பனார் பெயர்* மகள் *மணப்பெண் பெயர்* பாணிக்கிரகணம் பண்ணிக் கொள்கையில் மணவாளப்பிள்ளை பெண்பிள்ளைக்கு பூஷணமாக இடும்பொன் 'எண்' மாற்று, பதின்மூன்று பணவிடை தூக்கம் பொன்னிடை பொன் பதின்முக்கழஞ்சு ; இதுவும் பிதாக்கள் பெண்பிள்ளைக்கு பூஷணமாக கொடுக்கும் பொன் முக்கழஞ்சு ; வெள்ளி பதின்கழஞ்சு ; வெண்கலம் பலம் முப்பது ; இலவசப் பணம் பதினைந்து, இதிற் பிரிவு எட்டு நாளையில் இலவசத்துக்குப் பணம் ஆறு ; ஞானதீட்சைக்குப் பணம் ஒன்று ; வெள்ளாட்டிக்குப் பணம் இரண்டு ; கட்டில், மெத்தை, தோணிப்பாய், பாக்கு வெட்டி, கரண்டாகத்திற்குப் பணம் நான்கு ; ஆடி, கார்த்திகை வேவு, பணியாரம், மற்றுமுள்ள பல சீர் சீராட்டுக்குப் பணம் இரண்டு ; பட்டுபவளம் தாயார் தகப்பனார் பொருந்தச் செய்விக்கவும். இந்த இருதலைப் பூஷணமும் நானாளைப் பந்தலில் பெண்பிள்ளை காதிலும், கழுத்திலும் கழற்றாப் பணியாய் தரித்திருக்கவும். இந்த உடைமை பெண்பிள்ளை தகப்பனார் வீட்டில் இருப்பு. ஆண், பெண் பெற்றவுடன் மணவாளப் பிள்ளை கையிலும் பெண்பிள்ளை கையிலும் நிரந்து கொடுக்கவும், ராஜீய தெய்வீக அவரவர் பண்டத்தொப்பம்.

**இந்த இசைவு பொன்னோலை எழுதினேன்.**

*குடிப்பட்டம் தகப்பனார் பெயர் சேர்த்தும் மணமகன் வீட்டு மாப்பிள்ளை கையெழுத்தும்*
*மணமகன் தகப்பனார் குடிப்பட்டத்துடன் தகப்பனார் பெயர் சேர்த்து*
*கையெழுத்தும் போடவேண்டும்*

*மணமகளின் தகப்பனார் குடிப்பட்டத்துடன் தகப்பனார் பெயர் சேர்த்து*
*கையெழுத்தும் போடவேண்டும்*

இடம் :

வழங்கியோர் :

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்
கோயமுத்தூர்



உ

அருள்மிகு மங்கை நாயகர் துணை

# மங்கல வாழ்த்து

மணமகன் : மணமகள் :

ஆண்டு த்திங்கள் ஆம் நாள்

*வெண்பா*

செந்திருவைச் சேரலாஞ் செந்தமிழைப் பாடலாம்
இந்திரனைப் போல்வாழ்ந் திருக்கலாம் – மந்திரஞ்சேர்
வெற்பகத்தை யூடறுத்த வேலவர்க்கு முன்பிறந்த
கற்பகத்தைக் கைதொழுதக் கால்

(மங்கைநாயகர் துணை)

*விருத்தம்*

திருவளரு நல்லமங்கை பாகர் காக்கச்
சிவகுருவாம் பாண்டிநாட் டாசான் காக்கப்
பெருகுபுக ழருவிநகர் விளங்க வந்த
பெருமைதரு *குடிப்பட்டம்* னென்போன்
தருநிகராம் *(...........ன்) தகப்பனார் பெயர்* தவத்தால் வந்த
சவுந்தர்ய *மணமகன் பெயர்* மணத்தின் மீதே
மருவுகுழல் மடமயிலை மணமே செய்து
மைந்தர்பதி னாறுபெற்று வாழி தானே.

(மங்கைநாயகர் துணை)

*கலித்துறை*

ஞாலமெல்லாம் பரவித் தொழுதேத்து நவமணிசேர்
கோலமெல்லாங் கொண்ட மங்கலநாட்டுடன் கோட்டுமுல்லைத்
தூலமெல்லாங் கொண்ட திண்டோளழகிய சொக்கருள்ள
காலமெல்லாம் நின்று நீடுழிவாழுங் கயற்கண்ணியே.

(மங்கைநாயகர் துணை)

இவ்வாறு மூன்று முறை வாழ்த்தி வாசிக்கவேண்டும்.

*வழங்கியோர் :*

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்

கோயமுத்தூர்

# உங்கள் சிந்தனைக்கு

உங்களின் மேலான சிந்தனைக்கு ஓரிரு விநாடிகள் ஒதுக்க வேண்டுகிறேன். நம் முன்னோர்கள் எவ்வளவு அறிவுசார்ந்த தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சடங்குமுறைகளை கடைப்பிடித்திருக்கின்றார்கள் என்று வியக்கத் தோன்றுகிறது.

**மங்கல வாழ்த்து :**

எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் நிகழ்ச்சி முடிந்ததும் வாழ்த்தும் முறை ஏற்படுத்தப்பெற்றது. அந்த முறையில் முதலில் விநாயகரை வழிபடும் முறை அமைந்துள்ளது.

அடுத்து நல்ல மங்கைபாகர், பாண்டிநாட்டாசான் இருவருக்கும் வணக்கம் செய்து மணமக்கள் பதினாறும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

தொடர்ந்து சொக்கருள்ள காலமெல்லாம் நின்று வாழும் கயற்கண்ணியே என்று வாழ்த்துகிறோம். இடை இடையே மங்கை நாயகர் துணை என மூன்றுமுறை வேண்டுகிறோம்.

**இசைவு பொன்னோலை :**

இசைவு பொன்னோலை எவ்வளவு பொருள் பொதிந்த காரணப் பெயர். மணமக்களின் பெற்றோர் இசைவு கொண்டு எழுதும் ஓலை. சிறப்பு மிகுந்ததால் பொன்னோலை எனக் கூறப்படுகிறது. இன்று திருமணப் பதிவு கட்டாயமாக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எவ்வளவு தீர்க்கதரிசனமாக, தொலைநோக்குப் சிந்தனையுடன் பதிவு செய்திருக்கிறார்கள் என்று பெருமைப்படவேண்டும்.

வாழ்க்கை ஒப்பந்த உடன்படிக்கை என்று கூறுவதுபோல மணமகனின் தகப்பனார், மணமகளின் தகப்பனார், மாமன் மைத்துனர் கையெழுத்துச் செய்து சபையில் மாற்றிவைத்துக்கொள்ள வேண்டும் என்று நடைமுறைப்படுத்தி யிருக்கிறோம். இப்படி அர்த்தமுள்ள நடைமுறையை இசைவு பொன்னோலை கையெழுத்துச் செய்து சபையில் படித்ததை மணமேடையிலேயே சிலர் விளம்பர அறிவிக்கை போல விட்டுவிடுகிறார்கள். கவனமாக பத்திரமாகப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம் அது.



உ

சடங்குகளும், சம்பிரதாயமும் தொகுப்புநூல் காலத்தின் பொக்கிஷம்
இவற்றை நடைமுறைப்படுத்தி மேன்மைபெறுவோம்
வாழ்வில் உயர்வோம் ! என வாழ்த்தும்


மா. சுவாமிநாதன்


K. M. கண்ணன்

## தங்கம் மெடிக்கல்

2211, திருச்சி மெயின் ரோடு
சிங்காநல்லூர், கோயமுத்தூர் – 641 005
தொலைபேசி 2570108


N. அன்புராணி

N. அன்புராணி
ஒன்றிய கவுன்சிலர் சிறுகுடி,
திண்டுக்கல் மாவட்டம்
போன் : 04544 – 267733

உ

நகரத்தார் சம்பிரதாய, சடங்குகளை கடைப்பிடித்து வளமுடன்
வாழ வாழ்த்தும் நெஞ்சங்கள்



கை ரவீந்திரன், ர. வாசுகி, ர. காமராஜ், ர. சுமதி ஸ்ரீ

## சக்தி அக்குபஞ்சர் கிளினிக்

செல்வி Dr. R. சுமதி ஸ்ரீ MD(ACU)
கணபதி, கோயமுத்தூர், அலைபேசி : 93448 78967

பண்பாடு , கலாச்சாரம் மாறாத சமூகமாக நகரத்தார் எல்லா நலமும்,
வளமும் பெற்று வாழ, வாழ்த்தும் இனியவர்கள்



ரா. ராமன், ரா. மங்கையர்கரசி, செல்வன் ரா. சரவணன்
கணபதி, கோயமுத்தூர் – 641 006.

உ

வாழ்க வளமுடன் வாழ்த்துக்கள் வாழ்க வையகம்

அனைவரும் ஐந்தொழுக்க பண்பாட்டை கடைப்பிடித்து
வாழ்வில் சிறக்க வேண்டுகிறோம்

1. எனது உழைப்பின் மூலமே வாழ்க்கை நடத்துவேன்
2. பிறருடைய மனதையும், உடலையும், எவ்வகையிலும் வருத்தமாட்டேன்
3. பிற உயிர்களை உணவுக்காக கொல்லமாட்டேன்.
4. பிறருடைய வாழும் சுதந்திரத்தையும், பொருளையும் பறிக்கமாட்டேன்
5. என்னால் முடிந்த வரை பிறர் துன்பம் போக்க தொண்டு செய்வேன்.



சு. சோலைராஜன்

## அன்பு மருந்தகம்

No 2. முத்துசாமி காலனி
செல்வபுரம், கோயமுத்தூர் – 641 026



சு. சிவமணி

## விநாயகர் அன்கோ

380/1 பேரூர் மெயின் ரோடு
செல்வபுரம், கோயமுத்தூர் – 641 026



TMRS சிவக்குமார்

## விநாயகர் அன்கோ

80/1 KNK காம்ப்ளக்ஸ்,
N.S.R. ரோடு சாயிபாபாகாலனி
கோயமுத்தூர் – 641 011

## நியூ அன்பு அன் கோ

1363, தாடகம் ரோடு
கோயமுத்தூர் – 641 002
தொலைபேசி – 4365628

## நியூ அன்பு அன் கோ

No 3. பொன்னைய ராஜபுரம்
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி – 2478775

உ

அருள்தரு மங்கை நாயகர் துணை
தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !



சொ. சுப்பையா, சு. ஜெயலெட்சுமி

சாந்தி எலெக்ட்ரிக்கல்

292, கடைவீதி, சத்தியமங்கலம் 638 401
போன் : 220430

சு. பாலமுருகன், பா. உஷா தேவி

சாந்தி எலெக்ட்ரிக்கல் ஏஜென்ஸி

299, கடைவீதி சத்தியமங்கலம் 638 401
தொ.பே.எண் : 220765

சு. சொக்கலிங்கம், சொ. காமாட்சி,
சொ. அபிராமி. சொ. ஐஸ்வர்யா

சாந்தி மெடிக்கல்

64 / 176, கோகலே வீதி
ராம் நகர், கோயமுத்தூர் – 641 009
தொ. பே. எண் : 2235107

உ

அருள்தரு மங்கை நாயகர் துணை
தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !

உயிர் வாழ நீர் ஆதாரம் உறவுகள் வாழ சடங்குகள் ஆதாரம்



ம.தி.சி மணிக்காளைசெட்டியார்
ம. சரஸ்வதி ஆச்சி, சிறுகுடி
திண்டுக்கல் மாவட்டம்

ம. சரவணன்
துணைச் செயலாளர், அ.வ. நகரத்தார் சங்கம்
கோயமுத்தூர்.

உ

அருள்தரு மங்கை நாயகர் துணை
தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !

ஸ்ரீ மீனாட்சி மெடிக்கல்ஸ்

80, A மணியம் வேலப்ப வீதி
கே.கே. புதூர், கோயமுத்தூர் – 641 038
Ph : 2436545. 2438238



M. ஜெகநாதன்

இதில் குறிப்பிடப்படும் செய்திகளைக் கவனித்துப் பாருங்கள். ஒவ்வொரு வார்த்தையும் பொருள் பொதிந்தவை. சீர் சீராட்டு, பொன், வெள்ளி, பித்தளைப் பொருட்களின் எடை, (கழுஞ்சு வாய்ப்பாடு புத்தகத்தில் காண்க) கட்டில், மெத்தை, தோணிப்பாய் முதலியவற்றிற்கு பணம் நான்கு சீர் சீராட்டுக்களை பொட்டுப்போல பிரச்சனை இல்லாமல் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதன் சிறப்பை விவரம் அறிந்தவர்கள், சிந்தனையாளர்கள், அறிஞர்கள் ஆய்ந்தறிந்து விளக்கமாக கல்வி வளர்ச்சிக்கழக வெள்ளிவிழா மலருக்கு எழுதி அனுப்பி வெளியிடச் செய்ய வேண்டுகிறோம்.

இசைவு பொன்னோலை, மங்கல வாழ்த்தில் இரண்டு வகை இருப்பதாகத் தெரிகின்றது. அருவியூரான குலசேகரப்பட்டணத்து என்றும் கல்வாச நாட்டு சுந்தரபாண்டியபுரத்து என்றும் தொடங்குகிறது. இதில் மேலூருடையார், அரும்பாக்கிளையார், ஆமலூருடையார், பூண்டிலூருடையார், உளுந்தூருடையார் முதலியோர் அருவியூரான குலசேகரப்பட்டணத்து என்றும் கமுகக்கூருடையார், பாக்குழூருடையார், பணப்பாக்குழூருடையார், நன்னெறி பூண்டிலூருடையார் முதலியோர் கல்வாச நாட்டு சுந்தரபாண்டியபுரத்து என்றும் தொடங்கி எழுதி வந்திருக்கிறார்கள் என்றும் அறிய முடிகிறது. மற்ற குடிப்பட்டங்களுக்கு தேடிக்கண்டு பிடித்து அறிய முயல வேண்டும்.

மங்கல வாழ்த்தில் விருத்தம் பாடலில் திருவளரும் என்று ஒன்றும் திங்களணி என்று ஒன்றும் தொடங்கும் வாழ்த்து ஆக இரண்டு வகை உள்ளது.

*திங்களணி நல்லமங்கை பாகர்காக்கச்*
*சிவகுருவாம் பாண்டிநாட்டாசான் காக்கப்*

*பொங்கு புகழருவிநகர் விளங்கவந்த*
*பெருமைதரு குடிப்பட்டம் னென்போன்*

*தங்கநிகர் மணமகன் தகப்பனார் தவத்தால் வந்த*
*சவந்தர்ய மணமகன் மணத்தின் மீதே*

*மங்கை யெனும் மடமயிலை மணமே செய்து*
*மைந்தர் பதினாறு பெற்று வாழிதானே !*
*மங்கை நாயகர் துணை*

## திருமண நிகழ்ச்சிக்கு மணமேடைக்குச் சேகரிக்க வேண்டிய பொருட்கள்

1. விரலிமஞ்சள் 250 கிராம்
2. மஞ்சள் பொடி 100 கிராம்
3. வாழை இலை 4
4. கும்பத்திற்கு சொம்பு
5. தேங்காய் – 4 (மஞ்சள் தடவியது – 3)
6. நெய் 100 கிராம்
7. கும்பத்திற்கு வாழைப்பழம் – 2
8. மா இலை
9. இரண்டு மரவையில் பச்சரிசி காப்பு நூல் கட்ட
10. கும்பம் இலையில் பரப்ப பச்சரிசி 1 படி (3 கிலோ)
11. ஹோமம் வளர்க்க ஹோமக் குண்டம், மணல்
12. அரச சமித்து – 27
13. சூடம் பாக்கெட் – 1
14. சாம்பிராணி
15. ஊதுபத்தி பாக்கெட் – 1
16. தீப்பெட்டி – 1
17. குத்துவிளக்கு – இரண்டு
18. திரிநூல்
19. தாம்பாளம் – 7
20. மாங்கல்யம் வைத்து ஆசீர்வாதம் வாங்க சிகப்பு பட்டுத்துண்டு
21. மணமிட முறிச்சட்டி – 2
22. முக்காலி – 2
23. பசும்பால் 1 லிட்டர்
24. காப்புநூல் கட்ட நூல் சேர்த்தது மஞ்சள் தடவி உள்ளபடி – 2
25. மாங்கல்யத்திற்கு 21 நூல் சேர்த்து மஞ்சள் நீரில் நனைத்தது தாலியில் கோர்த்து தனியாக பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும்.
26. உதிரிப்பூக்கள்
27. விபூதி பாக்கெட் – 1
28. சந்தனம்
29. குங்குமம்
30. வெற்றிலை
31. பாக்கு
32. முளைப்பாரி
33. தானியங்கள், கம்பு, கேப்பை, நெல், பாசிப்பயறு, தட்டப்பயறு, மொச்சை
34. மணவரைக்கு இரத்தினக் கம்பளம், சொக்கட்டாம்பாய்
35. மாணிக்கத் தலைப்பாகை



36. இசைவு பொன்னோலை – 2
37. மங்கல வாழ்த்து – 1
38. திரி நூல்
39. கும்பத்திற்கு சுற்ற நூல்கண்டு – 2
40. மணவரைப் பலகை
41. அரசாணிக்கால்
42. ஊனாங்கொடி தர்ப்பைப்புல், மா இலைக்கொப்பு
43. அரசாணி விளக்கு
44. பட்டுத்துண்டு
45. ஆயிரங்கால் விளக்கிற்கு சொம்பு
46. பெரியதிரி
47. சிறிய செங்கல்
48. முகூர்த்த நெல் வைக்க பெரியபானை
49. பால் 2 லிட்டர்
50. ஆரத்திக்கு குடம்
51. விளக்கு
52. சங்கு
53. நெல் 16 படி
54. கடகம்

★★★

## மாப்பிள்ளை விநாயகர் கோவிலுக்குச் செல்லும்பொழுது சேகரித்து எடுத்துக்கொண்டு போகவேண்டிய பொருட்கள்

1. அர்ச்சனைக்குத் தேங்காய் – 3
2. சிதறு தேங்காய் – 1
3. மணமக்களுக்குரிய மாலைகள், பூச்செண்டு 4 முதலியன
4. விநாயகருக்கு மாலை
5. உதிரிப்பூக்கள்
6. நெய் – 100 கிராம்
7. சூடம் – 10
8. சந்தனம்
9. சந்தனப்பேலா
10. விபூதி, தாம்பாளம்
11. குங்குமம், சிமிள்
12. ஊதுபத்தி பாக்கெட் – 1
13. தீப்பெட்டி – 1
14. வெற்றிலை
15. பாக்கு
16. வாழைப்பழம் – 10
17. இரவு நேரமாக இருந்தால் பெட்ரோமாக்ஸ் லைட் (3)

★★★



# குருவழி அமைத்து குறைவிலாது வாழ்வேராம்.......



*உருவாய், அருவாய் உளதாய் இலதாய்*
*மருவாய் மலராய் மணியாய், ஒளியாய்*
*கருவாய் உயிராய் கதியாய் விதியாய்*
*குருவாய், அருள்வாய்..... என*

தமிழ்க் கடவுளை வணங்கி மகிழ்ந்தார்கள். ஞானவள்ளல்கள், அவ்வாறு குரு வழியாய் இறைவனைக்கண்டு மகிழ்ந்த காரணத்தால் தான் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளவரை நீங்காத நினைவில் வணங்கி மகிழும் குருவாய் நம்மில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

இதிகாசங்களிலும் சரி, புராணங்களிலும் சரி இன்றைய நடைமுறை வாழ்க்கையிலும் சரி குரு வழிபாடு என்பதும், குரு வழி என்பதும் போற்றத் தகுந்த மரபு வழி சம்பிரதாய சடங்குகளாகும். இராமாயணத்தில் இராமனுக்கு குல குருவாக வசிஷ்டரும், வாழ்க்கை குருவாக விசுவாமித்திரரும், வந்திருந்து எம்பெருமாள் நாராயண அவதாரமாகிய ராமனுக்கே மனிதர்கள் குருவாய் வாழ்ந்ததும், மகாபாரதத்தில் எம்பெருமாளே, மனிதராக அவதரித்து எம்பெருமாளாக காட்சி தந்து குருவாய் நின்று கீதாச்சாரம் மொழிந்தும்,

திருவாசகம் எனும் தேன்தமிழை உலகத்தில் தித்திக்க செய்ய மாணிக்கவாசகரை தடுத்தாட்கொண்டு உபதேசித்ததும், சங்கரரை, ஆதிசங்கரராக மாற்றி நான்கு வேதங்களை நல்க செய்ததும், பல பகுதிகளிலும் வேதங்களும், சாஸ்திரங்களும் மேன்மை பெற பல மடங்களை நிறுவியதும், பரம்பொருள் குருவாக வந்திருந்து சம்பிரதாய முறைப்படுத்தி உபதேசம் செய்ததும்,

திருப்புகழ்பாட அருணகிரிநாதரை மரணத்திலிருந்து தடுத்ததும், கச்சியப்ப சிவாச்சாரியரை எழுதுக என சொல்லி தானே முன்னிருந்து கேட்டு திருத்தி கந்தபுராணம் தந்ததும் குருவழி தான் என்பதை நாம் அறிவோம்.

எனவே குருவழி என்பது இறைவனே மனிதனாக அவதரித்தாலும் வேண்டும். ஒரு ஆன்மா மனிதனாக பிறந்தாலும் மகத்தான நிலைய அடைய குரு வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

இந்நிலையில் இந்து மதத்தை தவிர ஏனைய மதங்கள் அனைத்துமே, குருவழியில் நின்றே தன்னை வளர்த்துக்கொண்டும், தன் மதம் சார்ந்த மக்களையும் போற்றி வளர்த்துக்கொண்டே இருக்கிறது. அந்த மக்களும் குரு கூறும், கூறிய வழிமுறைகளை தவறாது கடைபிடிப்பதன் மூலம் அந்த சமூகம் ஒற்றுமையின் நிலையில் உயர்ந்தே வாழ்கிறது. இன்று உலகத்தையே தன் வசப்படுத்தவும் நினைக்கிறது இவை எல்லாம் குருவழி ஏற்படுத்தும் சிறப்பே ஆகும்.



மேலும் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் மேதைகளும் குரு மொழி அறிந்து அவர் மொழிந்த கருத்துக்களை முறைப்படுத்தி வாழ்வதால்தான் மேன்மையடைந்துள்ளார்கள்.

இன்று இந்து மதத்தின் தத்துவங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பல மகான்கள் வழிமுறைப்படுத்தி பெரிய அளவில் தமது சீடர்களையும், வழிமுறைகளையும் உருவாக்கி வந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்நிலையை அறிந்த நம் முன்னோர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே குருபீடம் அமைத்து, அவர் கூறும் அறிவுரை, ஆன்மீக வழிமுறை சடங்குகள், சம்பிரதாய வழிமுறைகளை கடைப்பிடித்து மேன்மை பெற்றதாக வரலாறு உள்ளது. சோழ நாட்டில் ஒரு காலத்தில் மன்னனின் அநீதியால் நமது இனமக்கள் துறவு மேற்கொண்டு, இருக்கும் காலத்தில் பெண்வாரிசுகள் இல்லா நிலையாகிவிட, இந்நிலையில் மன்னனுக்கு முடிசூட்ட திருமணம் செய்யப் பெற்றவர்கள் வேண்டிய நிலையில் மன்னவன் வேண்ட நமது இன மக்கள் குருவை நாடி அவரும் சாஸ்திர, சம்பிரதாயங்களை அறிந்து வழிமுறைகண்டு மீண்டும் அனைவரும் திருமணம் செய்து வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது.

இவ்வாறாக குருமகா சன்னிதானத்தை நாம் பாண்டிய நாடு வந்த பொழுதும் கூடவே அழைத்து வந்து அவர்களுக்கு உரிய அந்தஸ்தை அளித்து வாழ்ந்து வந்துள்ளோம் என்பதும் வரலாறு "குரு" என்பது ஆயிரமாயிரம் எண்ண அலைகளை கொண்ட மக்களை ஒருமுகப்படுத்தும் ஒருவழியாகவும், அனைத்து மக்களும் ஒற்றுமையாக "குரு" மொழிகேட்டு வாழும் நிலை ஏற்படவும், மக்களின் இன்ப துன்பங்களை கேட்டு அவர்கள் நலம்பெற, வளம்பெற வழிமுறை கூறியும், இறைவனிடம் அவர்களுக்காக பிராத்தனை செய்யவும் சர்வகாலமும், மக்களின் நலன்களை இறைவனிடம் வேண்டிய இருப்பவராகவும் திகழ்பவர்தான்.

பண்டைய காலங்களில் "குரு குலக்கல்வி" முறையாகயிருந்து சிறுவயது முதலாக அங்கே சென்று கற்று, வில்வித்தை, போரிடும் முறை முதல் சங்கீதம், நடனம், ஆராய்ச்சி திறன், மேன்மையான குணங்கள், என ஒவ்வொரு செயலுக்கும் குருவழிமுறை சொல்லி அதனை வழிப்படுத்தி வாழ்ந்த மகான்கள் முதல் மன்னர்கள் வரையிலும் சாதாரண மக்களும் சிறப்புற்றார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்.

**இவ்வாறு அனைவருக்கும் தெரிந்த நன்மையை ஏற்படுத்தியுள்ள ஒரு குருபீடத்தை நமக்கு இருந்தும் இன்றைய நிலையில் அது இல்லாது இருப்பது நமது இனத்தின் மேன்மையையும், புகழையும், பெயரையும், வளர்ச்சியையும் பாதிப்பதாக உணர்கிறோம். பண்பாடு மிகுந்த கலாச்சாரத்தை கடைப்பிடிக்கும். சமூகமாக திகழ வேண்டும் எனும் நோக்கில் தான் இந்த தொகுப்பு நூலை தொகுத்து வழங்கியுள்ளோம். சடங்குகளும், சம்பிரதாயமும் குருமொழி கேட்டு நடத்தல் என்பது மிகவும் சாலச்சிறந்த முறையாகும். இதுவும் ஒரு சம்பிரதாய முறையாகும். எனவே குரு வழியை மீண்டும் அமைத்து நகரத்தார் குறைவிலாது வாழ்வோமே........** ●

# புதையல்

புதையல் என்பது மறைந்திருக்கும் அல்லது மறைத்து வைக்கப்பட்ட பொருள். என்ன எவ்வளவு என்பது தெரியாது. தோண்ட தோண்ட கிடைக்கும். அது நமது பழக்க வழக்கங்களில் சடங்குகளில் என்ன காரணம் என்ன, பலன் என்ன அர்த்தம் என்பது முழுமையாகத் தெரியாது. அறிந்த வரையில் விளக்கியுள்ளோம். இன்னும் தெரியலாம். தோண்டிப் பார்ப்போம்.

1. *கல்யாண கிலுவை :*

திருமணத்தில் அரசாணிக்கால் நிறுத்த கிலுவை மரக்கால் நடுவது உண்டு. கிலுவைக் குச்சியை வெட்டிக் கீழே போட்டாலும் மறுநாள் தழைத்திருக்கும். கிலுவை தழைத்தாற்போல குடும்பம் தழைக்கும் என்று கருதி கிலுவையை நட்டார்கள் போலும்.

அன்றே வீட்டிற்கு ஒரு மரம் வேண்டும் என மர நடுவிழா நடத்தினார்கள் போலும்.

2. *முளைப்பாரி :*

கம்பு, கேப்பை, நெல், பாசிப்பயறு, தட்டப்பயறு, மொச்சை முதலியவற்றை முளைப்பாரியில் தண்ணீர் தெளித்து ஊறவைத்தால் முளைத்து பொலிவு பெறும்.

பொலிவு பெறும் பயிர் போல் குடும்பம் பொலிவு பெறும் என்ற நம்பிக்கையில் செய்யப்பெற்றது.

3. *மடிச்சீலைப்பணம் :*

இந்தச் சடங்கால் கொடுத்த பொருளை முடிந்து வைத்து பத்திரமாய் வைத்திருந்து குடும்பத்தைப் பொறுப்பாய் வைத்திருக்கும்படி பழக்கம் உண்டாகும் என்று செய்தனர்.

4. *கையில் அரிசி வைத்துக்கொள்வது :*

காப்பு நூல் கட்டும்பொழுது மணமக்கள் கைநிறைய அரிசி வைத்துக்கொள்வதும் தாலிகட்டும்பொழுது பெண் கை நிறைய மஞ்சள், பாக்கு வைத்துக் கொள்வதும் வெறுங்கையாக இல்லாமல் மங்கலப் பொருட்கள் நிறைந்து நிறைகுடமாக இருப்பதற்காக ஏற்பட்ட பழக்கம்.

5. *உப்பு கொண்டு செல்வது :*

உப்பு விரைவில் எதிலும் கலக்கக்கூடியது.

உப்புக் குவியலைப் போல் செல்வம் குவிய வேண்டும் என்ற கருத்தில் கொண்டு செல்கின்றனர்.



உப்பு, மஞ்சள், எலுமிச்சம்பழம் முதலியவை இருக்குமிடத்தை தெய்வாம்சம் நிறைந்ததாக ஆக்கும் வல்லமை உடையவை. வாஸ்து குறைகளை நீக்கும் வல்லமை படைத்தவை.

6. *மா இலை :*

மா. பெரிய மா இலை. பெரிய இலை. முக்கனிகளில் ஒன்றைத்தரும் மரத்தின் இலை.

பால் சுரக்கும் மரவகைகள் தெய்வாம்சம், மருத்துவ குணங்கள் உள்ளவை. இலட்சுமி வாசம் செய்யும் மரம் மா மரம். அதனால் நற்காரியங்களுக்கு வரவேற்க மா இலைத் தோரணங்கள் கட்டுகிறோம். இது பிரம்ம ஹத்தி தோஷத்தைக்கூட நீக்கக்கூடியது. நுண் கிருமிகளை அழிக்கவல்லது, நன்மையே விளையும், நன்மையே பெருகும் என்று மா இலைத் தோரணம் கட்டுகிறோம்.

7. *காப்புக் கட்டுதல் :*

கோவில்களில் திருவிழாவிற்குக் காப்புக் கட்டுவது போல் திருமணத்திற்கு புனிதமான நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்கு காப்பு நூல் கட்டுகிறோம்.

இதை கங்கணம் கட்டுதல் என்றும் கூறுவர்.

மணிக்கட்டில் கட்டுவதால் கங்கணம் என்று பெயர் வந்தது.

ஒரு காரியத்தை முடித்தே தீருவது என்று முனைப்பாக செயல்படுவதாலும் கங்கணம் கட்டுவது என்று சொல்லப்படுகிறது.

மணமக்களுக்கு மணமக்களின் மாமன்மார்கள் என்றும் காப்பாக இருப்பார்கள் என்ற கருத்திலும் காப்பு நூல் கட்டுவதாகச் சொல்லப்படுவதுண்டு.

8. *மணமிடுதல் :*

ஆன்மாவின் நல்லெண்ண வாழ்த்துக்களைக் கொண்டு சேர்க்கும் சக்தி, பால், தண்ணீர், பூக்களுக்கு உண்டு. முக்காலியில் முறிச்சட்டியில் பால் ஊற்றி தண்ணீர் கலந்து பூக்களை வைத்து எடுத்து மணமக்களின் கைகள், தோள்கள், தலையைத் தொட்டு பதினாறு பேறும் பெற்று பெருவாழ்வு வாழ்க ! என மூன்று முறை வாழ்த்துவது அதனால்தான்.

முற்பிறவி, இப்பிறவி, அடுத்தபிறவி மேலும் முக்காலமும் சிறப்பாக அமையவாழ்த்துகிறோம்.

மனம், வாக்கு, காயம் முக்கரணங்களாலும் வாழ்த்துவதாக மூன்று முறை வாழ்த்துகிறோம்.

9. ஆரத்தி :

சுண்ணாம்பு, மஞ்சள் தண்ணீரில் கரைத்ததும் சிவப்பாக மாறிவிடும், வெற்றிலையைக் கிள்ளிப்போட்டுவிட வேண்டும்.

இது ஒரு கிருமி நாசினியாக மாறி நுண்கிருமிகளிலிருந்து பாதுகாப்பளிக்கின்றது. பார்வை, கண் திருஷ்டியைத் தவிர்க்கவும் ஆரத்தி எடுக்கப்படுகிறது.

10. மாத்துக்கட்டுதல் :

சலவைத் தொழிலாளியை மணமேடைக்கு மேல் உள்ள விட்டத்தில் மாத்துக் கட்டச் சொல்லவேண்டும்.

(மணமக்கள் மீது பல்லியோ பூச்சிகளோ விழுந்துவிடாமல் பாதுகாப்பதற்காகத்தான்) : அதன்மேல் பூக்கள் அலங்காரம் செய்கிறோம்.

11. மஞ்சள் நீராடுதல் :

உடல் ஆரோக்கியத்திற்காகவும், கிருமி நாசினியாகவும் பயன்படு மென்பதால் இந்தச் சடங்கு நிகழ்த்தப்பெற்றது.

12. இரவு திருமணம் :

முன்பு இரவில் தான் திருமணம் நடந்தது.
இரவு திருமணம் தேவர் மணம் ஆகும்.
பகல் திருமணம் காந்தர்வ மணம் ஆகும்.

திருமணம், பெண்ணைப் பொறுத்துத்தான் சிறப்படையும். பெண் சந்திரன் அம்சம் ஆகும்.

நல்ல நாள் நட்சத்திரம் பார்த்து நல்லது செய்கின்றோம். நட்சத்திரம் இரவில்தான் பிரகாசிக்கும். சக்தி கூடுதல் உண்டு.

பார்வை, திருஷ்டி இரவில் இருக்காது.
ராகுகாலம், எமகண்டம் இரவில் இல்லை
இக்காரணங்களால் இரவில் நடத்தியிருக்கலாம்.

வெய்யிலின் உஷ்ணம் குறைந்து, இருளின் குளுமை நிறைந்து, ஆர்ப்பரிக்கும் அலை அடங்கிய கடலின் அமைதியான, பரபரப்பு குறைந்த ரம்மியமான சூழலில் பிறவிப்பெருங்கடலில், வாழ்க்கைப்படகில் ஆனந்தமாக பயணம் தொடங்கலாம் என்று இரவில் திருமணம் நடத்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.



13. கையடை செய்தல் :

திருமணம் முடிந்ததும் கையடை செய்யும்பொழுது மணமகனின் இடது கை சுண்டு விரலில் மணமகளின் வலதுகை சுண்டுவிரலை கொக்கிபோல் சேர்த்து சிலர் செய்கிறார்கள். பிள்ளைகள் விளையாடும் பொழுது டு விடுவது போல் குறி உள்ளது. மன வேற்றுமைகள் உண்டாகலாம்.

மணமகனின் இடதுகை மேல் பெண்ணின் வலது கையை வைத்து அடைக்கலம் என்று சொல்வது சிறப்பாக இருக்கும். அதனால் இதற்கு கையடை என்று பெயர் வைத்துள்ளார்கள்.

பாணிக்கிரஹனம் என்று இசைவு பொன்னோலையில் வருகிறது. பாணி என்பது கை. கைத்தலம் பற்றுதல் என்றும் இதைக் கூறலாம்.

14. எண்ணெய்க்குளியல் :

திருமண நிகழ்வுகள் நிறைவடைந்ததும் எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகுதான் வெளியில் செல்லும் பழக்கம் இருந்தது. பூவாடை போக்க அந்த முறை இருந்தது.

15. விநாயகர் வழிபாடு :

எல்லா நிகழ்வுகளுக்கும் மூலம் மூல விநாயகர் ஆகும். கணங்களுக்கு அதிபதி, கணபதி, விக்னம் வராமல் காப்பவர் விக்னேஸ்வரர், இடர்களைச் சிதறடிப்பவர். அதனால் விநாயகரை வழிபடுகிறோம். சிதறுகாயின் நோக்கம் இடர்களைப் போக்கி நல்வழிகூட்ட விநாயகரை வேண்டுவதாகும்.

16. காதுகுத்தல் :

ஒலியின் உள்வாங்குமிடம் காது. அதில் ஒட்டை போட்டு கடுக்கன் போடுவது கேட்கும் திறனை அதிகரிக்கும்.

கண்பார்வைத் திறனுக்கும் மூளையின் செயல்பாட்டிற்கும் காதுகுத்துதல் மூலம் கூடுதல் பயன் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

ஓங்காரத்தின் உருவகமாக காதின் அமைப்பு உள்ளது. காதுகுத்துவதன் மூலம் மெய்யெழுத்து முழுமையடைகிறது.

17. குதிரை ஏறிவருதல் :

மன்னருக்கு இணையாக வாழ்ந்தவர்கள். அதிகாரத் தோரணையையும் செல்வச் செழிப்பையும் உணர்த்துவதாக இருக்கலாம்.

18. *அரசாணிக்கால் :*

அரசாணிக்காலில் ஊனாங்கொடி, மாங்கொப்பு, தர்ப்பைப்புல் இடைவெளி இல்லாமல் கீழிலிருந்து மேலாகச் சுற்றி கட்டுவது.

கொம்பைப் பற்றி கொடி படர்வது போன்று கணவனும் மனைவியும் மனக்கருத்து வேற்றுமையின்றி பின்னிப்பிணைந்து ஈருடல் ஒருயிர்போல் வாழ்வார்கள் என உணர்த்தும் சடங்காகும்.

19. *மிஞ்சி அணிதல் :*

மிஞ்சி அணிதல், மிஞ்சிப் போகக்கூடாது என்பதைக் குறிப்பதாகும். தாலி அணிவதுபோல் திருமணம் ஆனவர் என்பதை உணர்த்தவும் அணியப் பெற்றது. காலின் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் வெள்ளி மிஞ்சி அணிவித்தல் ஆகும். கால் கட்டை விரலுக்கும் அடுத்த விரலுக்கும், வெள்ளிக்கும் அக்குபிரஸர் உடற்கூறுயியலில் பாலுணர்வுக்கு வலுக்கூட்டும் திறன் உண்டு என்று நம்பினார்கள்.

20. வலம் வருதல் :

இயற்கையை ஒட்டி வாழ்க்கை அமைகிறது. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரிய வட்டப்பாதையில் சுற்றுகிறது. நீரில் எதிர் நீச்சல் போடுவது சிரமம். அதன் போக்கில் செல்வது போல் வலம் வரும் வழக்கம் உள்ளது. வலம்புரிச்சங்கு, வலம்புரி விநாயகர் சிறப்பாக சொல்வது அதனால்தான்.

மூச்சுக் காற்று வலது நாசியில் ஓடினால் சூரிய கலை. சூரிய கலையில் நல்ல காரியங்கள் செய்தால் சிறப்பாகும்.

அதுதான் வலது கால் வைத்து நுழைகிறோம்.

21. *விபூதி :*

சாணம் எரித்தால் மிஞ்சுவது. மற்றவை எரித்தால் கரியாகும்.

ஞாபக மறதிவந்தால் நெற்றியைச் சுருக்கி சிந்தித்தால் நினைவு வந்துவிடும். ஒன்பது துவாரமுள்ள உடலில் தொடர்பு கொள்ளக்கூடிய இடம் நெற்றி புருவமத்தி.

வீட்டில் FUSE போய் விட்டால் Main Switch–சை சரி செய்கிறோம். அதன் Main இடம் வேர்வைக் கிருமிகளால் பாதிப்படையாமல் இருக்க அவரைச் செடிக்கு சாம்பல் போடுவது போல் நினைத்து பூசலாம்.

மெஞ்ஞானம் என்றால் விபூதி பூசலாம்.

விஞ்ஞானம் என்றால் சாம்பல் என்று பூசலாம்.



இரும்புக் கோட்டையின் ஒன்பது வாயில்களையும் தொடர்பு கொண்டு (செயற்பொறிகள் மெய், வாய், கண், மூக்கு முதலியன) செயல்திறனும் கூட்டும் இடம்.

ஞானக் கண்ணுக்கு உரு ஏற்றுமிடம் என்பதையும் உணர்ந்து விபூதி பூசவேண்டும்.

22. *அக்னி உயர்ந்த லட்சியங்களின் சின்னம்*

அக்னி உயர்ந்த லட்சியங்களின் சின்னமாக அமைந்துள்ளது. அக்னி எப்பொழுதும் மேல்நோக்கியே வளர்கிறது. அக்னியில் எதை இட்டாலும் அதை ஏற்றுக்கொண்டு தன்னிலை மாறாமல் வளர்கிறது. நமது வாழ்வும் இத்தகையதாக இருக்கவேண்டும். எப்போதும் உயர்ந்த இலட்சியங்களை நோக்கிச் செல்ல முன்னேற வேண்டும். வாழ்வின் பாதையில் நேரிடக்கூடிய இன்ப துன்பங்கள், நன்மை தீமைகள் ஆகியவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு வளரவேண்டும் என்பதை அக்னி உணர்த்துகிறது.

இயற்கையான பொருட்களை அக்னியில் போடும்போது அக்னியின் வளர்ச்சி தடைபடுகிறது. ஆனால் பக்குவப்படுத்தி தயாரித்த நெய்யை ஊற்றினால் அக்னி ஓங்கி வளருகிறது.

அக்னியில் காட்டப்படும் பொருள் குறைகள் நீங்கி புனிதமடைந்து முழுமை பெறுகிறது.

23. வாசல் தெளித்தல் :

அதிகாலைப் பொழுதில் வாசல் தெளித்தல் மிக அருமையான பாதுகாப்பான செயல். இரவில் உஷ்ணநிலை குறைவு. சுற்றுச்சூழலில் நுண் கிருமிகள் இருக்கலாம், சாணத்தை தண்ணீரில் கரைத்துத் தெளிப்பது மிகுந்த பாதுகாப்பளிக்கும்.

கோலம் போடுவது அரிசிமாவால் போடுவது வழக்கம். எறும்பு போன்ற சிற்றுயிர்களுக்கு உணவாகப் பயன்படுகிறது.

நுண்கிருமிகள் இரையை உண்டுவிட்டு வீட்டிற்குள் வருவதைத் தடுப்பதற்கும் வழி காணப்பெற்றது.

வாழ்வு வளம் பெற பஞ்சபூதங்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை. அந்த வழியில் பூமாதேவியை நீராட்டி குளிர்வித்து தரையை மெழுகி கோலமிட்டு வழிபட்டு இந்த மனை இடத்தில் எங்களுக்கு சகல நன்மைகளும் கிடைக்க அருள்பெற வேண்டும் சடங்கு ஆகும்.

24. நெறிகள் :

கேள்வி : சாஸ்திரநெறிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வகுக்கப்பட்டது. அவற்றைக் காலத்திற்கேற்ப மாற்றிக்கொள்ளலாமே?

பதில் : எத்தனை காலம் ஆனாலும் கடைப்பிடிக்கத் தகுந்தவையே நமது சாஸ்திரம். ஒருவருக்கு வேண்டாம் என்று தோன்றுவது மற்றவருக்கு முக்கியமாகப்படலாம். வாழ்க்கை முறையை எளிமைப்படுத்திக் கொள்ளவே சாஸ்திரங்கள் உதவுகின்றன. எனவே வாழ்வின் தேடல் பொருள் அல்ல – நிம்மதி, அதை அடைய சாஸ்திரங்கள் உதவுகின்றன.

25. *ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும்:*

ஊரார் பிள்ளை தங்கள் மருமகள் கர்ப்பமாக இருக்கும் பொழுது அன்பும், அரவணைப்பும், பண்பும், பாசமும் கலந்து மகிழ்ச்சியாக இருக்கவைக்கவேண்டும். சத்துள்ள, பிரியமுள்ள உணவு வகைகள், பாசத்தை ஊட்டி வளர்த்தால் கருவில் இருக்கும் தன் பிள்ளை தானாக வளரும் என்பது பழமொழியின் உட்கருத்து.

## கதிர்வீச்சைத் தடுக்கும் எலுமிச்சம்பழம்

அணுக்கதிர் வீச்சு, மின்காந்தக் கதிர் வீச்சு ஆகியன இன்றைய உலகில் தவிர்க்க இயலாத அம்சங்கள் ஆகிவிட்டன. செயற்கை முறையிலான கதிர் வீச்சுகளை குறைக்க முடியும் என்றாலும் இயற்கையிலேயே இந்த கதிர் வீச்சுகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

இத்தகைய கதிர்வீச்சுகள் தவிர்க்க முடியாதவை என்று ஆகிவிட்டபடியால் இவற்றால் ஏற்படும் விளைவுகளில் இருந்து நம்மை எவ்வாறு தற்காத்துக் கொள்வது? என்ற ரீதியில் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

வாழிடத்தில் ஏற்படும் கட்டட அமைப்புகள், நாம் சாப்பிடும் உணவுப் பொருள்கள், அணியும் உடைகள் ஆகியவற்றின் மூலமாக கதிர்வீச்சின் பாதிப்பை தடுத்து நிறுத்தவும் விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

எலுமிச்சம்பழத்தில் அதன் தோல் எப்போதும் கழிவுப் பொருளாகவோ குப்பையில் போடப்படுகின்றது. இதன் தோலில் கால்சியம் பாஸ்பனேட் என்ற வேதிப்பொருள் உள்ளது. இந்த வேதிப்பொருள் நமது ரத்தக் குழாய்களை கதிர்வீச்சின் தன்மையில் இருந்து பாதுகாக்கும் தன்மை உடையது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுவரை எலுமிச்சம்பழத் தோலில் இருந்து திடவடிவிலான சிட்ரிக் அமில படிகங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்தன. இனி கதிர்வீச்சின் விளைவுகளைத் தடுக்கும் மருந்தும் தயாரிக்கப்படும்.



# பிறந்த குழந்தைக்கு நடத்தப்படுகின்ற காப்புக்கட்டு சடங்கு நிகழ்ச்சிகள்

1. தலைப்பிள்ளை பிரசவத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன் நல்ல நாள் பார்த்து பெண்ணின் பெற்றோர், மாமன்மார், பங்காளிகள் பிள்ளை வீட்டில் வந்து காய்ச்சி ஊற்றிக் கூட்டிக்கொண்டு போகவேண்டும்.
காய்ச்சி ஊற்றுவதற்குப் பதிலாக அரிசி, பருப்பு முதலான பலசரக்குச் சாமான்கள் கொண்டு வருவார்கள்.
விபூதி பூசி பெண்ணையும், மருமகனையும் அழைத்துச் செல்லவேண்டும்.
2. குழந்தை பிறந்ததும் மாப்பிள்ளை வீட்டார் நெய், இனிப்பு, தேங்காய், பழம், பூ கொண்டுபோய் குழந்தையைப் பார்ப்பது என்று போய் பார்த்து வரவேண்டும்.
3. பதினாறாம் நாள் வேதியரைக் கூட்டிவந்து கும்பம் வைத்து தம்பதியரை, உட்கார வைத்து மந்திரங்கள் சொல்லி ஓமம் செய்து வீட்டைப் புனித நீர்தெளித்து தூய்மைப்படுத்தவேண்டும்.
4. ஒரு மாதம் கழித்துச் சட்டி பானை கழிப்பது என்று வீட்டைச் சுத்தப்படுத்தி வீடு வாசல் கழுவிவிட்டு வெள்ளை அடித்து புதுப்பிக்க வேண்டும்.
சட்டி பானை எல்லாம் இன்று உபயோகிப்பது இல்லை, எனவே கழிப்பது இல்லை. சில்வர் சாமான்களை கழுவி வைத்துக் கொள்வார்கள்.
ஒரு மாதத்தில் பிள்ளை முருக்கி அழுதால் மாமன் கயறு போடுவார்.
5. நல்லநாள் பார்த்து காப்புக்கட்டும் நேரத்தில் நடுவீட்டில் களகில் பட்டுத்துணி விரித்து பிள்ளையை வைத்து சாமியை வழிபட்டு பணம் முடிக்கவேண்டும்.
6. அப்பா வழி அய்யா முதலில் நகை அணிவித்து பின் அம்மா வழி அய்யா நகை அணிவிக்க வேண்டும். விபூதி பூச வேண்டும்.
7. அத்தை காப்புபோட வேண்டும்.
அப்பாவழி அய்யா இடுப்பில் நகை போடுவது என்றும் அம்மா வழி அய்யா கழுத்து நகை போடுவது என்றும் கலந்து பேசிக்கொள்வது வழக்கம்.
8. தண்டை, வெள்ளி, செம்பு, இரும்பு என்று கம்பிகளையும் இணைத்து முருக்குத் தண்டை என்று போடுவது வழக்கம்.
குழந்தையின் உடல் சீராக இருக்க உஷ்ணம் உண்டாக்க வெள்ளி, உஷ்ணம் கூடினால் குறைக்க செம்பு, சமச்சீரடைய இரும்பு என்று பயன்படுத்தியிருக்கிறார்கள்.
9. நகைபோடும்பொழுது கீழிருந்து மேலாக அணிவிக்கவேண்டும். காலில் தண்டை, கால்சங்கிலி, இடுப்பில் அரைஞாண்கயிறு, கையில் காப்பு, வளையல், மோதிரம், சங்கிலி என்று போடவேண்டும்.
10. கழுத்தில் ஔவையார் பாசி போடவேண்டும்.
(செல்வம் மென்மேலும் உயரும் வளரும் ஆயுள் வளரும் என்ற நம்பிக்கையில் இது செய்யப்பெறுகிறது)

11. உள்வீட்டில் நகை அணிவித்ததும் குழந்தையின் அத்தை சுளகைத் தூக்கிச் சுற்றி வலதுபுறமாக அழகு நிறைஞ்சாப்போல சொளகு நிறையணும் சொளகு நிறைஞ்சாப்போல அழகு நிறையணும் என்று மூன்று முறை சொல்லிச் சுற்றவேண்டும்.

12. வீட்டில் வெளி முற்றத்தில் உறவினர்கள் அமர்ந்திருக்கும் சபையில் வந்து அப்படியே மூன்று முறை சுற்றவேண்டும்.
பின் உறவினர்கள் அனைவரும் வாழ்த்தி விபூதி பூசுவதும் அன்பளிப்புகள் வழங்குவதும் நடக்கவேண்டும்.

13. அனைவருக்கும் காப்பு அரிசி கலந்து வழங்க வேண்டும். தற்காலத்தில் ரொட்டி, மிட்டாய் அல்லது இனிப்பு பூந்தி வழங்குகிறார்கள். காப்பு அரிசியே சிறந்தது. இதில் இயற்கைப் பொருட்களே கலந்து இருப்பதால் பிறந்த குழந்தை இயற்கையோடு ஒத்துவாழவும். காப்பு அரிசியிலுள்ள இனிப்பு சுவைக்கச் சுவைக்கத் தித்திக்கும், அதுபோல் குழந்தையின் வாழ்க்கையும் தித்திப்பாக அமையும் என்ற காரண காரியங்கள் உண்டு.

★ ★ ★

## பிள்ளைப்பேறு விசேடத்தில்



கருவுற்றிருக்கும் பெண்ணிற்கு மருந்து கொடுக்கும் பழக்கம் உண்டு. ஐந்தாவது அல்லது ஏழாவது மாதம் நல்ல நாள் பார்த்துக் கொடுக்க வேண்டும். பெண்ணின் பெற்றோருக்கு சொல்லி அனுப்ப வேண்டும். பெண்ணின் பெற்றோர் வரவேண்டும்.

பூவரசு மரத்தின் பூ, இலை, பழுப்பு, காய், பட்டை என ஐந்தையும் எடுத்து உரலில் இடித்து தண்ணீர் ஊற்றி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பெண் தாலிகட்டுப் பட்டும், பிள்ளை தாலிகட்டு வேட்டியும் அணிந்துகொள்ள வேண்டும். வீட்டுத் தெய்வத்தை வணங்கி வழிபாடு செய்து விபூதி பூசி பிள்ளையின் பெற்றோர் மருந்தைக் கொடுக்கவேண்டும். அனைவரும் விபூதி பூச வேண்டும்.

இந்த மருந்து தடுப்பூசி போட்டது போல் பயன்தரும். எந்த நோயும் வராது.

சிலர் புண்ணிய நதிகளின் தீர்த்தங்களை கொடுக்கின்றார்கள்.

### நோய்த் தடுப்பு முறை

1. குழந்தை பிறந்த ஏழு நாளில் பசுமாட்டின் கோமயத்தை பிடித்துவந்ததும் சூட்டோடு ஏழு முறை வடிகட்டி குழந்தைக்கு சங்கால் ஊற்ற வேண்டும். பிள்ளைக்கு வயிற்றால் போகும்.
சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்தது. பேர் சொல்லாதது என்பது வராது.
2. குழந்தை கால் ஊன்றுவதற்கு முன் நம்மடியில் ஊன்றக்கூடிய அளவு வளர்ச்சி அடைந்த நிலையில் நிலைப்படியில் நடுவில் பானையில் தண்ணீர் நிறைய வைத்துக்கொண்டு குழந்தையை தண்ணீருக்குள் கால் ஊன்ற வைத்து காலை தேய்த்து உருவிவிட்டு தண்ணீரை வீதியில் ஊற்றிவிட வேண்டும்.

இப்படிச் செய்தால் கால்கள் வலுவடையும்.
காக்கரணை என்ற நோய் வராது.



# பெண் பிள்ளை பூப்பெய்தியதும் நடத்தப்படுகின்ற மங்கல நீராட்டு விழா சடங்கு முறைகள்

உலகில் உயிர்கள் தோன்றி உருவாகும் வளர்ச்சிப் பருவத்தில் ஒவ்வொரு நிலையும் கடந்து முதிர்ச்சி அடைகின்றது. மரம், செடி, கொடி முதலியனவும் தோன்றி வளர்ந்து பூத்து, காய்த்து, கனிந்து, விதை கொடுத்து உலக இயக்கம் நடந்து வருகின்றது. தென்னை மரம் பாலைவிட்டால் பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றோம்.

அந்த வகையில் மனிதன் வளர்ச்சியில் பல படித்தரங்கள் உண்டு. குழந்தை பிறத்தல், பிறந்ததும் அழுதல், குப்புவித்தல், தவழ்தல், நடத்தல், பல்முளைத்தல், மீசை முளைத்தல், நரைத்தல் என பருவ முதிர்ச்சி அடைகின்றோம். குப்புவித்தால் வயிற்றினால் போகும் என்றும் சொல்குறி உண்டு.

உயிர்ப்பிக்கும் உருவகமாக ஆறுகள், மலைகள் முதலியவற்றை பெண்ணாக குறிப்பிடுகின்றோம். இல்லறத்தைச் சிறக்க கொடி போன்ற பெண் கொம்பு போன்றுள்ள ஆணை பின்னிப் படர்ந்து வளர வேண்டும் என்று உணர்த்துவதுண்டு.

கொடி போன்று பெண் வயதிற்கு வருவதை, பருவமடைவதை, அந்தப் படித்தரத்தில் இல்லறவாயிலில் அடி எடுத்து வைப்பதை (சமைப்பது, சமைவதை) பூப்பெய்துதல் என்று குறிப்பிட்டு மகிழ்கிறோம்.

பூவாகி, காயாகி, கனிந்து, விதைகளை உருவாக்கும் பெரும் பணியில் தொடங்கி முழுமையடைகிறாள். அந்த நல்ல தொடக்க நிகழ்வை மாமன், மைத்துனர், பங்காளிகள், உறவினர் அனைவருக்கும் சொல்லி அழைத்து நீராட்டி, புத்தாடை அணிவித்து விருந்து வைத்து மகிழ்கிறோம். அதில் உள்ள சில நடைமுறைப்பழக்கவழக்கங்களை அறிந்தவரை இங்கு குறிப்பிடுகின்றோம்.

1. பெண்பிள்ளை பருவமடைந்தவுடன் உள்ளூர் உறவினர்களுக்கு தகவல் சொல்லி அனுப்ப வேண்டும்.

2. நல்ல நேரம் பார்த்து உறவினர்கள் அனைவரும் தண்ணீர் ஊற்றி பெண்ணை நீராட்டி குளிக்க வைக்க வேண்டும்.
(நீராகாரம், நல்லெண்ணெய், கருப்பட்டி கலந்தது) பால் ஊற்றிக் குடிக்கக் கொடுக்க வேண்டும். (பால் என்பது நீராகரம் ஆகும்)
(தற்பொழுது கீரை விதையும் சிலர் சேர்க்கிறார்கள்)

3. உறவினர்களுக்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள், சர்க்கரை கொடுத்து மரியாதை செய்யவேண்டும்.

4. பெண்பிள்ளைக்கு கத்தரிக்காய் பொரித்த பருப்பு கடைந்து உணவு அளிக்க வேண்டும்.

*பாராயம் :*

மறுநாளோ மூன்றாம் நாளோ மாமன் வீட்டிற்கு வண்ணானை அனுப்பி தகவல் சொல்ல வேண்டும். இதற்கு பாராயம் என்று பெயர்.

மாமன் வீட்டார் வண்ணானுக்கு விருந்து வைத்து வேட்டி கொடுப்பார்கள்.

குறிப்பு : இந்த நடைமுறை தற்காலம் இல்லை.

பருவமடைந்ததும் முதல் தகவலே மாமன் வீட்டிற்குத்தான் அனுப்புவது. அவர்கள் வரும் தோதை அனுசரித்துத்தான் பால் ஊற்றிக் கொடுக்கும் பழக்கம் உள்ளது. வர தாமதமானால் பிள்ளைக்கு சோறு போடாமல் பலகாரமாக சாப்பிடும் பழக்கம் உள்ளது.

5. பின்னர் மாமன் வீட்டிற்கு தாயார், தகப்பனார் போய் கலந்து பேசி சடங்கு தேதி குறித்து வருவார்கள். மறு சடங்கு ஆவதற்குள் சடங்கு வைக்கவேண்டும்.

தற்காலத்தில் பிள்ளை பள்ளிக்குச் செல்ல வேண்டி இருக்கிறது என்றும் மற்றும் பல காரணங்களாலும் பள்ளி ஆண்டு விடுமுறைக் காலங்களிலும் சிலர் வைத்துக் கொள்கிறார்கள்.

6. *மாமன்சீர் :*

மாமன் வீட்டார், சேலை, சட்டை, தேங்காய், பழம், அரிசி, சீப்பு, கண்ணாடி, பொம்மை, குங்குமம் மற்றும் பொருட்களைத் தாம்பாளத்தில் வைத்துக்கொண்டு வரவேண்டும். விருந்திற்கு ஆகும் சாமான்களை ஓரளவு கொண்டு வருவார்கள்.

பெண்ணின் தாய் ஆரத்தி எடுக்கவேண்டும். பாக்குவெற்றிலை பணம் வைத்து மரியாதை செய்யவேண்டும். மாமன் மனைவி சங்கு ஊதி களி அரிசி ஊறவைக்கவேண்டும்.

*சடங்கு சுற்றுவது :*

பெண்ணைப் பல்லாங்குழிமேல் பட்டுத்துணி விரித்து நிற்க வைத்து மாமன் மகள் அல்லது அத்தை மகள் சடங்கு சுற்றவேண்டும்.

முதலில் பாதங்களில் ரொட்டி வைக்கவேண்டும். அடுத்து உள்ளங்கைகளில் வைக்கவேண்டும். பிறகு இரண்டு தோள்களில் வைக்கவேண்டும். அடுத்து உச்சந்தலையில் வைக்கவேண்டும். கம்பந்தட்டையால் முதலில் தலையில் தட்டி அடுத்து தோளில் தட்டி, பிறகு காலில் தட்டி உதறவேண்டும். இப்படியே மூன்று முறை செய்யவேண்டும்.



விளக்குக் கொண்டு பிள்ளையை மூன்று முறை சுற்றவேண்டும். கும்பாவில் சாதம், பருப்பு, நெய் ஊற்றி மூன்று முறை சுற்ற வேண்டும்.

பெண் கையில் வெற்றிலை பாக்குக் கொடுத்து தண்ணீர் ஊற்றி மூன்று முறை சுற்ற வேண்டும். இது உள்சடங்கு.

*வெளிச்சடங்கு :*

உச்சியில் இருந்து பாதம் வரை ரொட்டி வைத்து இறக்கி முன் உள்ளே செய்ததுபோல் செய்யவேண்டும். இதுபோல் மூன்றுமுறை செய்யவேண்டும்.

பெண் கையில் (பொம்மையை) ஆண் குழந்தையைக் கொடுத்து தொட்டியில் போட்டு தாலாட்டச் சொல்ல வேண்டும்.

சங்கு ஊதி பெண்ணை கங்கைக்கு துறை ஏறி குளிக்கக் கூட்டிபோய் கூட்டிவரவேண்டும். இது மூன்று நாட்கள் நடக்கும். (இந்த வழக்கம் தற்காலத்தில் இல்லை)

*களி ஆனம் :*

விருந்தில் களி, ஆனம், கருப்பட்டிப்பாகு முதலியன பரிமாரப்படும். பாயாசம், போடுங்க பருப்பு போடுங்க என்பது போல் களி ஆனம் வையுங்க கல்யாணம் வையுங்க என சொல் நல்வாக்கு பரிமாறப்படும், சிறப்பு உண்டு.

*குறிப்பு :*

பால் ஊற்றிக் கொடுப்பது என்பதில் நீராகாரம் கலந்தது என்றுதான் உள்ளது. பசும்பால் என நினைக்கவேண்டாம். முன்பு பசும்பால் கொடுக்கமாட்டார்கள். அன்று மட்டும் அல்ல மாதாந்திர நாட்களிலும் கூட பால், காப்பி சாப்பிட கொடுக்கமாட்டார்கள். சாமி கோபித்துக் கொள்ளும் மாடு பால் கறக்காது என்று தடை செய்திருக்கிறார்கள்.

மருத்துவ ரீதியாகவும் சித்த மருத்துவர் வார்ப்பட்டு திரு. சுந்தரம் செட்டியார் அவர்கள் "அந்த நாட்களில் குடல் புண்ணாக இருக்கும், பால் புளிப்பு சேர்த்தால் காய்ச்சல் முதலான உடல் கோளாறுகள் ஏற்படும், என்பதை தெய்வத்தின் பெயரால் தடை செய்திருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார்.

கம்பந்தட்டையால் தட்டுவது என்பது பொறைக்குத் தட்டுவது போன்றது. கம்பந்தட்டைக்கு மருத்துவ குணம் உண்டு. அந்நாட்களில் உடல் பலம் குறைந்து நரம்புத் தளர்ச்சி, மனத்தளர்ச்சி, பயம் இருக்கும். அதைச் சரிசெய்ய கம்பந்தட்டைக்கு மருத்துவ குணம் உண்டு.

ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளும் கேலிச் சடங்காக நினைக்காமல் தெய்வச்சடங்காக நினைத்துச் செய்து பயன்பெற வேண்டும்.

# அறுபதாம் ஆண்டு மணி விழா

## நிகழ்ச்சி முறைகள்

நம் முன்னோர்கள் சூரியன் உதித்து சகல உயிர்களுக்கும் உயிர் ஆற்றல் கொடுத்து ஒடுங்குவதை கவனித்துக் கணித்தார்கள். பகலும் இரவும் மாறி மாறி வருவதிலும் பருவ நிலையிலும் ஒரு ஒழுங்குப்பாடு இருப்பதை உணர்ந்தார்கள். பகுத்து, வகுத்துப் பாகுபடுத்திப் பார்த்ததில் தினசரி, வாரம், மாதம், வருடம் என ஒழுங்குப்பாடுடைய நியதி இருப்பதைக் குறித்தார்கள். அந்த அறிவு நிலையில் வானவியலை வகுத்தார்கள். தமிழ் வருடத்தை அறுபதாண்டாகப் பகுத்தார்கள். அறுபதாண்டுகளுக்குப் பின் அதே நிலை வருவதாகக் கண்டார்கள். ஒரு சுற்று முடிந்ததும் ஒன்றிலிருந்து மறு சுழற்சி தொடங்குவதால் வழிபடும் சடங்காக கொண்டாடினார்கள்.

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பருவ அரங்கேற்றத்திற்கும் சடங்கு நடத்தி இறைவழிபாடு செய்து வருகிறோம். அந்த வரிசையில் அறுபதாம் ஆண்டு நிறைந்து முதல் ஆண்டு தொடங்குவதைக் கொண்டாடுகிறோம். வாழ்வியல் கடமைகளை முடித்து பேரன் பேத்திகளைக் கண்டு மனம் அமைதியடைந்து இன்பமாக இருப்பதைநினைந்து மேலும் நல்லவிதமாக அமைய மூத்தவர்களிடம் ஆசிபெறவும் இளையவர்களுக்கு வாழ்த்துக்கூறும் விதமாகவும் கொண்டாடி மகிழ்கிறோம்.

நவக்கிரகங்களின் அமைப்பு ராசிக்கட்டம் அறுபது ஆண்டுகளுக்கு முன் பிறந்த நேரத்தில் இருந்ததைப் போல அதே அமைப்பில் இருக்கும்.

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா சாந்தி என்பது அனைவரும் செய்து கொள்ளத்தான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

அவரவர் விருப்பம் பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்து செய்துகொள்ள வேண்டிய நிகழ்ச்சி.

சாந்தி செய்வதென்றால் ஐம்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவு நாளன்று சிவாலயம் சென்று ஆயுள் ஹோமம் செய்துகொள்ளலாம். அர்ச்சனை செய்து வழிபாடு செய்யலாம். வீட்டிலும் செய்யலாம்.

அர்ச்சனை பஞ்ச மூர்த்தி சுவாமி, அம்மன், பிள்ளையார், சண்டிகேசுவரர், வைரவர் சுவாமிகளுக்கு அர்ச்சனை செய்யவேண்டும்.

**அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி முறைகள் :**

கணவருக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு நாள் விழா வரும் நட்சத்திரம் பகல் 2–00 மணிவரை இருக்கும்போது செய்வது சிறப்பு.

இரண்டு நாளாக நிர்ணயம் செய்து இரண்டு காலம் ஜெபம், ஒரு காலம் ஹோமம் என்று செய்யவேண்டும்.



தோதுபோல் 61 கலசம் வைத்தும் 16 கலசம் வைத்தும் செய்யலாம். ஐந்து கலசம் வைத்து ஆயுள் ஹோமம் செய்து கொள்ளலாம்.

முதல் நாள் மதியம் நாந்தி என்று பரிகாரம் செய்ய வேண்டும்.

ஆறு பிராமணர்களை வைத்து இலையில் அரிசி வைத்து வேட்டி துண்டு கொடுத்து செய்ய வேண்டும்.

அபிஷேகம் செய்வதற்கு முன் மாமன் சீர் எடுத்து வரவேண்டும்.

இந்த தேவையில் முடிந்தவரை மாமன் சீர் எடுத்து முறைசெய்ய வேண்டும். மாமன் முறை சாந்தியில் மனைவியின் அப்பா, அண்ணன் தம்பிகள்.

மாமனுக்கு ஆரத்தி எடுத்து மரியாதை செய்ய வேண்டும்.

மாமன் முறை செய்ததும் அபிஷேகம் செய்ய வேண்டும்.
எண்ணெய் சட்டி தானம் செய்ய வேண்டும்.

அபிஷேகம் செய்யும்பொழுது சதாபிஷேகம் செய்துகொண்டவர்கள், வயதில் மூத்தவர்கள், சாந்தி செய்துகொண்டவர்கள் என மூத்தவர்கள் அபிஷேகம் செய்யவேண்டும்.

அடுத்து உறவினர்கள் எல்லோரும் அபிஷேகம் செய்ய வேண்டும்.

மக்கள் கடைசியாக அபிஷேகம் செய்து மூத்த மகன் அபிஷேகம் செய்து நிறைவு செய்ய வேண்டும்.

புதிய ஆடைகளை உடுத்திக்கொண்டு மணவறையில் அமரவேண்டும்.

மாமன் சீர் கொண்டுவந்த மாலையை மாமன் கையால் எடுத்து அணிவிக்க வேண்டும்.

தம்பதியர் பூசை என்று பரிகாரம் செய்ய வேண்டும். அதற்கு பிராமனாள் தம்பதிகளாக வரவழைத்து புது ஆடை ஆபரணம் கொடுத்து உடுத்திக்கொண்டு வரச்செய்து மணவரையில் அமரச்செய்து திருமாங்கல்யம் கொடுத்து திருமணம் செய்துவைக்கவேண்டும்.

தம்பதியரை வாசல்வரை சென்று வழி அனுப்பிவைத்து வரவேண்டும்.
பிறகு தம்பதியர் மணவரையில் அமர்ந்து திருப்பூட்ட வேண்டும்.
முடிந்ததும் மூத்தவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவேண்டும்.
பின்னர் இளையவர்களுக்கு ஆசி வழங்கி வாழ்த்துக் கூற வேண்டும்.
மாலை தம்பதியராகச் சென்று சிவாலயத்தில் தரிசனம் செய்து வழிபாடு செய்து வரவேண்டும்.

**சதாபிஷேகம் :** எண்பது வயதைக் கடந்தவர் ஆயிரம் பிறை கண்டதாக சதாபிஷேகம் செய்து கொள்வது. இதை முறையில் தோதுபோல் செய்துகொள்ளலாம்.

★ ★ ★

# அம்மானை

வரலாறு என்பது நாட்டுக்கும் மக்களுக்கும் தன்முன் பெருமைகளை நிகழ்வுகளை வழித்தோன்றல்களுக்கு நினைவுபடுத்தி தன்னை உணர்ந்து மேலும் பெருமையடைய கூறுவது. அந்த வகையில் பாரம்பரியமிக்க நமது இன வரலாறு செவி வழிச்செய்தியாக பலவகையாகக் கூறிவருகிறோம். எழுத்து வடிவமாக இருப்பதாகத் தெரியவில்லை. மற்றவர்கள் கூறுவதை நாமும் பங்காளிகள்தான் என்று கூறித் திருப்தி அடைகிறோம். நமக்கென்று அருவியூரம்மானை என்று ஒலைச்சுவடியில் உள்ளது. அதிலுள்ள சில வரிகளை கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

1. பைந்தமிழ் சேர் காவேரிப் பூம்பட்டணந்தனிலே
வன்மையுடன் வாழ்கின்ற வணிகேசர் தன்பெருமை
உண்மையெல்லா மின்று உரைக்கவே பாரதனிலே
தெம்பான பாரதத்தை சென்றுவரை மீதுலொத்தை
கொம்பாலெழுதுகின்ற குஞ்சரத்தை போற்றி செய்வோம்

பைந்தமிழும் சேர்ந்து பெருமையுடைய நகரமாக திகழும் காவேரிப் பூம்பட்டணத்தில், வளமும், பெருமை ஒருங்கே நிறைந்து வாழ்கின்ற தன வணிகர்கள் சிறப்பை இந்த நாட்டிற்கு எடுத்துரைக்க, மகாபாரதத்தை இந்த உலகிற்கு தன் கொம்பை முறித்து எழுதிய மூலமுதல் கணபதியை போற்றி வணங்குவோம்.

2. வணிகேசர் தன்பெருமை வளமை சொல்ல கேளுமினி
வஞ்சகமும் பொய்யும் மனதிலே நினையார்தான்
தஞ்சமென்ற பேரை தாபரிக்கும் மாதவத்தோர்
மாதவத் தோரென்றும் மனைதொரும் பொன் கதவும்
போதமதாக பொன்நிலையும் சூலியலும்
தங்கக் குடங்கள் கொண்டு தண்ணீரெடுப்பதுவும்
எங்கும் பிரச்சித்தியா யிருந்தவர்கள் வாழ்வதாய்

தனவணிகர் பெருமையும், வளமையும் சொல்வதற்கு முன் இந்த வணிகர்கள் வஞ்சகமும், பொய்யும் மனதிலே நினைக்கமாட்டார்கள். தஞ்சம்



உ
அருள்தரு மங்கை நாயகர்துணை
தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !


RM.A. கண்ணன்

ஸ்ரீ தனலெட்சுமி மெடிக்கல்
16, ராஜவீதி, கணபதி, கோயமுத்தூர் – 641 006
தொலைபேசி : 2333293


S. கணேசன்

ஸ்ரீ மீனாட்சி மெடிக்கல்
302, சத்தி ரோடு, கணபதி
கோயமுத்தூர் – 641 006


கை. ரவீந்திரன்

ஸ்ரீ மீனாட்சி மெடிக்கல் (கிளை)
39, கட்டபொம்மன் வீதி, கணபதி,
கோயமுத்தூர் – 641 006
தொலைபேசி : 5588129


RM. A. கிருஷ்ணன்

ஸ்ரீ மீனாட்சி மெடிக்கல் 'C'
52 பா. நா. பாளையம் ரோடு
ஆவாரம்பாளையம், ரயில்வே கேட் அருகில்
கணபதி, கோயமுத்தூர் – 641 006
தொலைபேசி : 2534918

உ

அருள்தரு மங்கை நாயகர்துணை
தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !



அரசு ஜுவல்லர்ஸ்
&
அய்யப்பா பைனான்ஸ்



TMR.M மணிகண்டன்

1275, ரங்கே கவுடர் வீதி, பூமார்க்கெட், கோயமுத்தூர் – 1
போன் : 4369560, 98426 60305

22CT, தங்க நகைகள், 916, KDM
நகைகள் மற்றும் வெள்ளி நகைகள் வாங்க
கைராசியான ஸ்தாபனம்



We Serve



**Lion G. Subramaniam** B.Com
V-President - CBE Nilgiri's Chemist & Druggist Association
V President - CBE AVN Sangam
President Lions Club of Ondipudur
Real Vision

Ph : 5543121
Ph : 5543122
Ph : 5543123
Ph : 2272728

**Somasundaram & Co. (Medicals), The Somasundara Medical**
**Somu Medicals "A", Somu Tours 98426 50109**
**Sumangali Fancy**

Car, Sumo A/c, Traveller, Mazda, Indica, Lancer, EsteemQualis, all Deluxe A/c, Non A/c, Vechicles available for rent
2339-A, Trichy Road, Onidipudur, Coimbatore - 641 016 ,Phone : 2270547, 2272346, Resi : 5543124, 2270687

செய்வோம் கண்தானம்    கொடுப்போம் கண் பார்வை


என்று வந்தவர்களை ஆதரிக்க கூடிய மாதவம் செய்தவர்கள். இவ்வாறு அறநெறி ஆன்மநேயத்தில் சிறந்து விளக்கும் இவர்கள் தாங்கள் வீடுகளுக்கு பொன் (தங்கத்திலான) கதவுகளையிட்டும், பேதமையறியாத தக, தகவென ஜொலிக்கும் சூரிய ஒளியைப் போன்றுடைய தங்கக் குடங்களில் தண்ணீர் எடுப்பவர்களாகவும், எங்கும் பிரசித்திப்பெற்று இருப்பவர்களாக யிருந்துள்ளார்கள்.

3. கப்பலுமே வியாபாரம் கண்டு சொல்லமாட்டுவரோ
தூரம் தொலை வியாபாரம் துணிந்து செல்ல மாட்டுவரோ
வண்ண லட்சம் பொதி மிளகு மலையாளம் கொள்கிறதும்
வண்ட வணிகேசர் மனை வந்து சேர்வதும்
காசி முதலதற்கப்புறம் போய் கனசெட்டுப் பண்ணுவதும்
பொதிமாடு வியாபாரம் சொல்லவொண்ணாப் போகாது
கோடானுகோடி கப்பல் குடையர் பெரியோர்கள்
கோடானுகோடி கப்பல் கொள்ளும் முதலாளியர்கள்

கப்பலில் சென்று தூரம் தொலைவுள்ள நாடுகளில் துணிந்து வணிகம் செய்ய வல்லவராகவும், மலையாளத்தில் (கேரளம்) விளைகின்ற மிளகு, லட்ச லட்ச மூட்டைகளாக தமது வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தும் இவ்வாறு கொண்டு வந்தவற்றை காசி போன்ற **நாடுகளிலும்** அதற்கு அப்பால் உள்ள **நாடுகளிலும்** லாபம் வைத்து விற்கக்கூடியவர்களாகவும் பொதிமாடுகளில் தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களை ஏற்றி மட்டும் செல்லாது, கோடான கோடி ரூபாய்களில் கப்பலில் பொருள்களை ஏற்றியும் கப்பல்களை தாங்களுக்கு சொத்தாக வாங்கும் வசதியுடைய பெரிய வணிகர்களாக வாழ்ந்ததாகவும்

4. பூசை மிகுந்தவர்கள் பொன்கதவு பூட்டுவார்கள்
ஆபரண மெத்த அழகாய் அணிபவர்கள்
வேந்தர்களுக்கிட்டாத விருது அவர் கழுத்தில்
மங்கலத்தில் முத்துக்கால் வகுப்பனந்தம் நாட்டுவார்கள்
பவளக்கால் மெத்த பலதிசையும் நாட்டுவார்கள்
தார்வேந்தர்க்கெட்டாத தங்கம் பெருத்தவர்கள்
மூவுலகுக் கெட்டாத முத்துப் பெருத்தவர்கள்

இவ்வாறு வாழ்ந்த தன வணிகர்கள் பூசை, பக்தி, தெய்வநம்பிக்கை, தர்மகாரியங்கள், நிறைந்தவர்களாகவும் பொன் கதவுகளையுடைய வீடுகளில் வாழ்ந்ததாகவும் பொன் ஆபரணங்களை மிகு அதிகமாக அணியக்கூடியவர்களாகவும், மன்னர்களுக்கே கிடைக்காத உயரிய விருதுகளை பெற்று அணித்துகொண்டு வாழ்ந்தும், மங்கலம் நிறைந்த நாட்களில் முத்துகளால் அலங்கரிக்கப்பெற்ற பவளங்களால் அழகு செய்யப்பெற்ற கால்களை நட்டு விழாக்களை கொண்டாடக் கூடியவர்களாகவும், மன்னனுக்கு கிடைக்காத, மன்னனிடம் இல்லா தங்கங்களை எல்லாம் தங்கள் வசம் மிக கூடுதலாக வைத்தும், மூன்று உலகத்திற்கு போதுமான "முத்து" களை வைத்திருந்தார்கள்.

5 மேதினியெல்லாம் புரக்கும் வேங்கடேசர் தமக்கு
மாதவமுமே புரக்க மண்டபமும் உண்டு பண்ணி
சுற்றும் மடப்பளியும் தலங்குகின்ற கோபுரமும்
முடித்தார் மான் விளங்குந் திருப்பணியும்
மாடம்மொரு கூடரம் வளரும் திருமதிலும்
ஆடுகின்ற ரம்பையரும் அதற்கேற்ற சோடனையும்
சந்திரரும் சூரியரும் தாரகையும் உள்ளளவும்
இந்தப் புவியை இனி ஆண்டிரும் எனவே
கன பொருளைத்தான் சேர்த்து கட்டிவைத்த சொல்வணிகர்

உலகமே போற்றுகின்ற நாராயணப் பெருமாளாகிய வேங்கடேசர்க்கு கோயில் கட்டியும், அந்த கோயிலை சுற்றி மண்டபமும், மடப்பள்ளியும் (சுவாமிக்கு நெய்வேத்தியம்) ராஜகோபுரமும் அதில் சிற்ப வேலைகள் கூடியதாகவும், அதைச்சுற்றி மதில்சுவரும் மண்டபத்தில் கூத்தாடுகிற நிலையில் அழகான அரங்கமும், அதில் ரம்பை, மேனகை போன்ற அழகான நாட்டிய பெண்கள் ஆடி மகிழ தேவையான வசதிகளும் அழகான சோடனை அலங்காரமும், இவ்வாறு அமைக்கப்பெற்ற சிறப்புமிகு செயல்களை இன்றுள்ள மன்னனும் சரி, இனி இம்மண்ணை ஆட்சி செய்கின்ற மன்னனும் சரிகட்ட முடியாத அளவிற்கு கட்டி இந்த உலகமும் சந்திரரும், சூரியரும் உள்ளளவும் இருந்து சிறப்பு பெறக்கூடியதாக அமைத்தவர்கள் செல்வம் மிகுந்த வணிகர்கள்.



6 வஞ்சகமும் பொய்யும் மனதில் நினையாதார்
நாற்றிசையிலுள்ள நாவாணர் தங்கள் கலி
மாற்றிட வந்த வணிகேசரம்மானை

இப்படியாகவுள்ள வணிகர்கள் வஞ்சனையும், பொய்யை நினைக்காதவர் களாகவும், நான்குதிசையிலுள்ள புலவர்கள், அறிஞர்கள், ஆகியோரை மகிழ்வித்தும் வந்தவர்கள் வணிகர்கள் என அம்மானை கூறுகிறது. இரத்தின கற்களையும் சரியான விலை மதிப்பீடு செய்யக்கூடிய வல்லவராகவும் வாழ்ந்துள்ளார்கள்.

7 இரத்தினங்கள் தன்னை நிசமாய் விலை மதிப்போர்
திருமண நிகழ்ச்சிகளை
மங்களமும் செய்யவென்று மன்னியர்கள் அந்நேரம்
பொங்கமிகு பாக்குமிட்டு பொருந்தவே தேதி வைத்து
தேசமிகு மன்னியர்கள் சேர்க்கும் அறிக்கை செய்து
வாசமுடனே மங்களக்கால் தான் நிறுத்தி
கால் நிறுத்தியே பவளக்காலும் நிறுத்தினரே
சீலநெறியுடைய சீமான வணிகருட
பந்தல் தனிலே பரிவாய் மேல்கட்டி
அந்தமுடனே அலங்கரித்தாரம்மானை

திருமண நிகழ்ச்சி - அந்நாளில்

மங்கலகரமான இந்நிகழ்ச்சி நடத்த தீர்மானம் செய்கின்ற தனவணிகர்கள் (மன்னனுக்கு நிகரானவர்கள்) பாக்கு வைத்து, தேதி குறித்து தேசம் எங்கும் மன்னர்களை அழைக்கும் முகமாக, அறிவிப்பு செய்வித்து வாசனை திரவியம் சாத்தி பவளத்தால் செய்யப்பெற்ற மங்கலகாலாக நிறுத்தி, சிறந்த நெறிகளை கடைப்பிடிக்கும் சீமானாய் வாழ்ந்த வணிகர்கள் இவ்வாறு பந்தல் அமைத்தார்கள் என அலங்காரம் செய்கிறது அம்மானையில்

8 முத்துப்பவள முழுநீல ரத்தினமும்
சுற்றும் அலங்காரத் தோரணமும் வீதி எல்லாம்
கட்டி நிறைத்து காவனங்கள் உண்டு பண்ணி

சட்டமுடன் வீதி எல்லாம் தானே கண்ணாடிகளும்
ஆரத்தின் போல் அலங்காரம் தட்டாமல்
தோரணங்கள் பொன்னாலே தூக்கி நிறைந்தார்கள்
பவளக்கால் தன்னுடைய பார் வணிகேசர்
அவனி தனிலுள்ள அரசர் வந்து தான் இருக்க
மாடமொரு கூடம் வாகன மண்டபமும்
தேட அரிய ரெத்தின சிம்மாசனம் சமைத்து
வைத்த அலங்காரம் வரிசை என சொல்லும் இனி
மெத்தக் கைலாசம் என மேதினியில் உண்டு பண்ணி
தங்கள் கல்யாணம் தான் முடித்தாரம்மானை
என்று திருமண ஏற்பாடுகளைக் குறிக்கின்றது.

முத்து, பவளம், முழுநீல ரத்தினங்களால் தங்கத்தால் தோரணம் அலங்கரித்து, வீதிகளில் எல்லாம் கட்டி நிறைவு செய்து இவைகள் எல்லாம் மேலும் அழகாக தெரிவதற்கு சட்டத்துடன் (பிரேம் செய்த) கூடிய கண்ணாடிகளை மேலே கட்டியும் தோரணங்கள் தொங்கி தட்டாமலிருக்க பொன்னாலே செய்ய பெற்ற சங்கிலியில் தூக்கி நிறுத்தியும், பவளக் காலில் பந்தலிட்ட இப்படி பெருமைமிகு பார் போற்றும் வணிகர் விழாவிற்கு வருகை தரும் அரசர்கள் தங்குமிடமாக மாடம் வைத்த கூடமும் அவர்களுடைய வாகனங்கள் நிறுத்த இடமும், அவர்கள் உட்கார ரெத்தின சிம்மாசனமும், அவற்றை வரிசையாக வைத்து அலங்காரம் செய்தும் இன்னொரு சொர்க்கம் என அனைவரும் போற்றி புகழும்படியாக தங்களுடைய திருமண நிகழ்ச்சிகளை அமைத்ததாக அம்மாணை கூறுகிறது.

9 அரசன் யானையை நிறுத்தி எடை சொல்லச் சொன்னது
குஞ்சரத்தை தாநிறுத்தி கொள்ள வணிகேசர் தம்மை
உசிதமாய் நிறுத்தி ஒப்புவிக்கச் சொல்லுமென்றார்

10. வளர்ந்த புகழுடைய வணிகேசரந்நேரம்
யானை நிழலையளந்து நிதானங்குறித்து
தானமுடன் பின்கால தன்னடியை வட்டமிட்டு



வட்டமிட்டு முன்காலை வாகடியை தான் குறித்து
சட்டமுடன் கணக்கைத்தான் பார்த்தார் கேளுமினி
அடிக்கும் நிழலுக்கும் அளந்த கணக்கைக்கேளும்
இருநூறும் எட்டும் இதினிலரைக்கால் முந்திரி
ஒரு நூறு வட்டம் உகந்தடிக்கும் பின்னடிக்கு
எட்டுமொரு நாலும் இதனை கணக்கு வைத்து
திட்டமுடன் கணக்கை சேர்த்து தொகைப்படுத்தி
பார்த்து வரும்முன்னே பதறசேரன் பாண்டியனும்
ஏற்றமுடனே இதவான பஞ்சதனை
அப்போது நிறுத்து அரசாிருவருந்தான்
பஞ்சுப் பொதியை நிறுக்காமல் எடை சொல்லச் சொன்னார்.

11 செயமேலும் பஞ்சதனை திருக்கண்ணால் தான் பார்த்து
அன்று நிதானித்து அவதானித்து தான் குறித்து
முப்பத்து ரெண்டரை முக்கால் துலா மிஞ்சுகின்ற
ஒப்பாவதாக உகந்த பலம் பதிமூன்று
ஒரு முக்காணி உயர முந்திரி பலக்காண்
பருவமுடன் இவ்வளவு பாரமிருக்கும் என்றான்.

## 9/10/11 - வணிகப் பெருமை

மன்னர்கள் நம்மவரை சோதனை செய்யும் முகமாக யானையை நிறுத்தி அதனுடைய எடை எவ்வளவு என வினவியபொழுது கணக்கில் சிறந்த தனவணிகர் யானையின் நிழலை அளந்தும், யானையைச் சுற்றி தன்னுடைய கால் அடி அளவை கணக்கிட்டும் இவற்றை முறைப்படுத்தி அதுபோல் பஞ்சு பொதியை நிறுக்காமல் எடை சொல்லச் சொல்லியும் சோதித்தபொழுது தன் மதிநுட்பத்தால் சரியான எடையை கூறிய பெருமைக்கு உரியவர்கள்.

12 வணிகர் பெருமை
வேந்தர்களுக்கிட்டாத பொன் கதவு பூட்டுவர்கள்

தங்கக் கதவும் தளதளென்ற பொன்நிலையும்
சீரங்க மூர்த்தி திருவிருப்பு மண்டபமும்
மாடமொரு கூடம் வளருகின்ற கோபுரத்தில்
ஆடுகின்ற ரம்பைகளும் அதற்கேற்ற சோடினையும்
ஆலயங்களுண்டு பண்ணி அபிஷேகந்தான் முடித்து
என்றும்

இவ்வாறு வேந்தர்களுக்கு நிகராக, அவர்களுக்கும் கிட்டாத பொன் கதவு பூட்டுவர்களாகவும், சீரங்க மூர்த்தி விழாக்காலங்களில் எழுந்தருள மண்டமும், மாடமும், கூடமும் கட்டியும் ராஜகோபுரமும் அதில் பல பதுமை செய்தும், இவ்வாறு கோவில்களை கட்டியும் அந்த கோவில்களுக்கு கும்பாபிஷேகமும் செய்துவந்துள்ளார்கள் என்றும் அம்மானையில் கூறுகிறது.

13 பாண்டிய மன்னன் வேண்டி
அந்த நல்ல தேசம் ஆளுகின்ற பாண்டியனார்
வாசமிகுதேசம் வளம் பெறவும் வேணுமென்று
ஆசையுள்ள தேசம் அதிக தவம் பெறவும்
பொற்குடிகளாகுமந்த பூமிதனிலேதான்
நற்குடிகளாகுமென்று ராசனவன் நாட்டில்
என்று கேட்க

இப்படியாக அனைத்து மேன்மை பெற்று வாழ்ந்து வந்த தன வணிகர்களால் சோழநாடு வளம் பெற்றிருந்ததை அறிந்த பாண்டிய மன்னனும் தன்னுடைய நாடு வளம் பெறவும், தவம் பெறவும் மிகுந்த ஆசை கொண்டு பொற்குடிகளாக வாழும் நற்குடிகள் வேண்டும் என கேட்டு,

14 மன்னவனார் பாண்டியருக்கு வணிகருமங்கேது சொல்வார்
மானம் தரும் வேந்தே வணங்கோமொருவரையும்
தெண்டம் பெரும் பிடிகள் சிறை எடுப்பிலே விளங்கும்
அண்டி ஏகை இணைக்கம் ஆக்கிணை களடி பிடிகள்



எட்டுவகை காரியங்கள் இல்லை என்று சொன்னக்கால்
என்றும் பேர்விளங்கும் என்று இங்கிருக்கும் பாவனைபோல்
அங்கும் நீர் தென்மதுரைக் கரசான பாண்டியரே
அங்குமெங்கள் தனை ஆதரிப்பீரமாகில்
இஷ்ட மிக மகிழ்ந்து இப்போது நாம் வருவோம்.

அவ்வாறு கேட்ட பாண்டிய மன்னனுக்கு தன வணிகர் சொன்ன வார்த்தைகள் எங்களுக்கு மதிப்பளிக்கும் அரசே ! 1) நாங்கள் யாரையும் வணங்கமாட்டோம் 2) அபராதம் போடக்கூடாது 3) எங்களை பிடித்துசிறை செய்யக்கூடாது 4) ஆண்டி ஏகை 5) இணக்கம் 6) ஆக்கிணை (கொடுமை) 7) களடி 8) பிடிகள் இவ்வாறுள்ள எட்டுவகை காரியங்கள் செய்வதில்லை என்று சொன்னால், சோழநாட்டில் வாழ்ந்தது போல் பாண்டிய நாட்டிலும் ஆதரிப்பீர்களேயானால், தாங்கள் மகிழ்ந்து வருவோம் எனவும்

15 அடிக்கோர் களஞ்சியப் பொன் அரசே தருவீரே
படிக்கும் புகழாக பண்பாய் வருவோமென்றார்.
மங்களமதாக உங்கள் வாக்கினால் சொன்னபடி
தந்தேன் நான் சொக்கேசர் தானறிய வென்று சொல்லி
பாண்டியன் கூட்டி வந்தார்.
பிரான்மலையில் வேடன் அசரீரி கேட்டுவணிகரிடம் கூற

**அடிக்கோர் பொன்களஞ்சி அரசே தந்தீர்களேயானால்** தாங்கள் படித்தும், கேட்கும், புகழாக, பணிவாய் வாழும் நாங்கள் வருவோம் என்றார்கள் மன்னனும் மங்கலமாக தாங்கள் கூறியபடி தந்தேன் நான் **"சொக்கலிங்கேஸ்வர்"** சாட்சியாக என்று சொல்லி கூட்டி வந்தான் பாண்டிய மன்னன், அருவியூர் பட்டணத்திற்கு

16 நன்று நன்று என்று அந்நாளில் முகூர்த்தமிட்டு
செயசெயமென்று திருப்பணியும் தான் முடித்தார்
சுற்றிவரக்கோட்டை சூட்சுமமுடனே முடித்தார்
அன்று மடப்பளியும் அறைவீடுதான் முடித்து
தென் கைலாசம் சிவனார் பிரான்மலையில்
ஆதிசிவநாதர் அரனார் மங்கை பாகருக்கும்

பராபரனார் தேவி பார்வதி தேனம்மாளுக்கும்
சந்தோச மாயனைவோர் சம்பிரமதாய் முடித்து
பாண்டிநாட்டாசானும் பாங்கு வணிகேசரும்
மற்றும் பல குடிகள் மகிழ்ந்திருந்தாரம்மானை

**பிரான்மலையில் வேடன் அசரீரி கேட்டு நம்மவரிடம் கூறியது அறிந்து "பரம்பொருள்" திருமண கோலத்தில் ஆலயம் அமைத்து குறித்து அம்மாணை**

இவ்வாறு கேட்டது குறித்து மகிழ்ச்சியடைத்து நன்னாளில் முகூர்த்தமிட்டு, திருப்பணியும் முடித்து, சுற்றிவர கோட்டை கட்டியும், மடபள்ளி அறைவீடு, போன்றவை கட்டியும், தென் கைலாசம் போன்ற பிரான்மலையில் ஆதிசிவநாதர் அறனார் மங்கைபாகருக்கும், ஆதிதேவி பார்வதி தேனம்மாளுக்கும் திருமணத்தை நடத்திவைத்து இந்த நிகழ்ச்சியில் பாண்டிய மன்னனும், தனவணிகர்களும், மற்றும் பல குடி மக்களும் வந்திருந்து மகிழ்ச்சியடைந்தார் என அம்மாணை கூறுகிறது.

17 அரிவையூர் பட்டணத்தார் ஆன வணிகேசருந்தான்
அரனுரைப் பூஜை செய்யும் ஆனந்த வேதியருக்கும்
அரிவை பிராயமுள்ள அம்மாள் தேனம்மாளுக்கும்
பூசிக்கும் வேதியருக்கும் பொன் குடிகளந்நேரம்
மெத்த மனமகிழ்ந்து வேதாந்த வேதியர்க்கு
வேண்டும் பல வரிசை வெகுமதிகள் தான் கொடுத்து
சித்தமன மகிழ்ந்து சிவனார் மங்கைபாகருக்கு
பூசையது காரியத்திற்குண்டான கிரியை முதல்
வேதியர்கள் கேட்டதெல்லாம் வேண்டுமெனக்கொடுத்து
பொய் சொல்லா வாசகரும் போதுமெனக் கொடுத்து
வேணதெல்லாம் வாங்கி வேதியர்கள் தான்மகிழ்ந்து
பொன்குருவின் சொல்படிக்கு பூசை செய்தார் பட்டரய்யர்

இவ்வாறு அருவியூர் பட்டணத்தில் வாழ்ந்த வணிகர்கள் ஆறுகாலம் பூஜையும், பூஜை செய்யும் வேதியருக்கு பொன்கள் கொடுத்தும், அவர்கள் வேண்டுவன எல்லாம் கொடுத்தும் பரிசு, வெகுமதிகள் கொடுத்தும் அவர்களை மகிழ்வித்து மங்கைபாகருக்கும் பூஜை சிறப்பாக



நடத்திவந்துள்ளார்கள். பொய் சொல்ல வணிகரும் போது என சொல்லும் அளவிற்கு கொடுத்து பெற்ற வேதியர்களும் மகிழ்ந்து நமது குருவின் ஆணைப்படி பூசை செய்து வந்துள்ளார்கள்.

18 அரிவையூர் பட்டணத்து ஆன வணிகேசருக்கும்
மாரிபொன்மாரி வரிசையுடன் பெய்ததுவே
அன்று வணிகேசர் அறிந்தானுற்ற காரணத்தை
பொன்மாரி தன்னை போதுமென அள்ளிவைத்து
பொன்குருவும் நைக்குடியோர் புதுமைதனை நினைத்து
தேசம் செழிக்க சிவனாருள் படிக்கும்
அரனாருதித் தெழுந்த அவ்விடத்தில் மண்டபமும்
சுந்தர சொர்க்கம் ஆறுகால் பீடமுடன்
அரனாருள் படிக்கு அன்று முடித்தனராம்.
வாரணத்தை முரித்த மகாதேவர் சொல்படிக்கு
ஆதி வையவர்க்கு அன்று மடமுண்டாக்கி
சூட்சமுடன் கோவில் திருப்பணியும் தான் முடித்து
சோற்று மடமுடித்து சுற்றாலைக் கோட்டையிட்டு
திருப்பணியுங் கோட்டையது சூட்சமுடனே முடித்து
வீரும் வணிகேசர் மிக மகிழ்ந்து அந்நேரம்
பூசைக்கு வேண்டியது பூசை செய்யும் பட்டருக்கு
வேண்டிய காரியத்தை மிகமகிழ்ந்து தான் கொடுத்தார்.

இவ்வாறு அருவியூர் பட்டணத்து வாழ்ந்த வணிகர்களுக்கு இறைவன் பொன்மாரி (தங்க காசுகளை மழையாக) பெய்வித்தது அதனை போதுமெனக்கருதி அள்ளிவைத்தும் கொண்டும் இதனை பெற்றுத்தந்து **"பொன் குருவே"** என நற்குடியாளர்கள் புதுமையாக நினைத்து, தேசம் செழிக்க சிவனருள் செய்த இடத்தில் மண்டபமும், அழகு நிறைந்த சொர்க்கமாக நிகழும் ஆறுகால் பீடமுடன் கட்டியும், மடம்கள் உண்டாக்கியும், கோவில் திருப்பணிகளும் செய்தும் கோட்டை முதலியவற்றை திருத்தி கட்டியும் வணிகர்கள் மகிழ்ந்தும் பூசைகள் பல செய்தும் இவ்வாறு பல நல்ல காரியங்களை மிக மகிழ்ந்து நடத்தி வாழ்ந்தார்கள்.

# நம்மவரின் பழம்பெருமை

"உயரத் துடிக்கும் சமுதாயமே ! உங்கள் முன்னோர்களின் வாழ்க்கை முறை, வரலாறு, பெருமைகளை அறிந்துகொள்ளுங்கள் என்று சொல்வதற்காகத் தான் வரலாறு கூறப்படுகிறது எழுதப்படுகிறது" என்றார் சமயத்துறவி.

இமயத்தில் புலிக்கொடி பறக்கவிட்டதையும் அங்கிருந்து கல்கொண்டு வந்து கண்ணகிக்கு சிலை வடித்ததையும், கங்கை கொண்ட சோழபுரம் நிர்ணயித்ததையும் வரலாறு கூறுகிறோம்.

"ஊஞ்சல் பின்னோக்கிச் செல்வது முன்னோக்கி கூடுதல் உயரம் ஆடுவதற்காகத்தான்" என்றார் அரசியல் தலைவர்.

நம்முடைய சடங்குகளில் படிக்கப்படும் இசைவு பொன்னோலையில் வரும், கட்டில், மெத்தை, தோணிப்பாய் சீராக வழங்கப்படும் வரலாறு சிறப்புடையது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தோணிப்பாய் அத்யாவசியமாக இருந்திருக்கிறது. கடல் கடந்து வாணிகம் செய்திருப்பதை சுட்டிக்காட்டுகிறது. நிலைதோறும் தங்கக்கதவும் தளதளனென்ற பொன் நிலையும் இருந்ததைக் குறிப்பிடும் அம்மானைப் பாடலுக்கு இசைவாக இருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வசதியான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறோம் என்று பெருமையடைகிறோம்.

மிகுந்திருந்த தங்கத்தை பலகைபோல் பாலமாக ஊற்றி ஏலேலசிங்கன் என்று எழுதி கடலில் விட்ட தங்கக்கட்டி பிறகு கரையில் ஒதுங்க அதை எடுத்து வந்து கால்தேய்க்க உதவும் என்று அவர் வீட்டருகே போட்டு பின் ஒரு நாளில் பாசம் நீங்கி ஏலேல சிங்கம் என்ற பெயர் தெரிந்த ஏலேலசிங்கம் செட்டியார் வரலாறு அம்மானையில் வருகிறது.

இல்லங்களில் தோசை, இட்லி, வடை பலகார வகை சமீப நாற்பது வருடங்களாகத்தான் ஏற்பட்டது. ஆடம்பரமான வசதியான பலகாரம் என்று கூறப்படுவதுண்டு.

நூறு வருடங்களுக்கு முன்பே அருள்மிகு மங்கைநாயகருக்கு கால சந்திக் கட்டளைக்கு தோசை, வடை அமுதுபடிக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஞானிகளுக்கு ஒளிவட்டம் இருக்கும் என்று கூறுவதுண்டு. நன்னடத்தை, பண்பாடு ஒழுக்கம் முதலியவற்றால்தான் அது ஏற்படும். நம் சமூகத்திற்கும் ஒளிவட்டம் உண்டு. அம்மானையில் கூறியிருப்பதுபோல் நாம் உயர்ந்தவர்கள், பண்பாளர்கள், என்ற பெருமை உடையவர்கள். அதைப் பேணிக்காப்போம். Old is gold.

அறிவும் மனமும் ஒன்றிணைந்து செய்யும் செயலே இறைவனின் செயல். அப்படி ஒன்றி செய்யவே சடங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த நல்ல நேரத்தில் நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால் நல்லதே நடக்கும்.

அந்த வகையில் நல்லதையே நினைத்து நல்லதே நடக்க எல்லாம் வல்ல தேனம்மை உடனுறை மங்கை நாயகர் தாள்பணிந்து வேண்டுவோம்.



# தொடரும் உரை............

நகரத்தார் பெருமக்களே !

வணக்கம்.

இந்த இனிய தொகுப்பு நூலை முழுமையாக படித்திருப்பீர்கள் என கருதுகிறோம்.

படித்த உங்கள் இதயத்தில் நாங்கள் தொகுத்து தந்துள்ள, நாங்கள் வேண்டி எழுதியுள்ள கருத்துக்கள் எதிரொலித்துக் கொண்டு இருக்கும் என நம்புகிறோம்.

நம்பிக்கை வைத்து தொகுத்துள்ள கருத்துக்கள், சடங்குகள், சம்பிரதாய, காலநேரத்தை எடுத்துக்கொண்டு சடங்குகளை கலாச்சார பண்பாடுகளை நகரத்தார் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

கடைப்பிடிப்பதன் மூலமே நாம் எல்லா நன்மைகளையும் பெறமுடியும். என்பதுதான், சத்தியமான உண்மையாகும் நம் முன்னோர்கள் இவற்றையெல்லாம் வழிமுறைப்படுத்தி வாழ்வியலில் கடைப்பிடித்து ஒரு சராசரி மனித மேன்மையும், பொருளாதார உயர்வும், வாழ்க்கைத் தரமும், வரலாறு, இலக்கிய, நிகழ்வுகளில் உன்னதமான இடமும், பெற்று சமூக பெருமை காத்து வாழ்ந்து சிறப்புப்பெற்றுள்ளார்கள் என்பது மேலும் உண்மை.

மனிதர்கள் அனைவருமே உயர்ந்த நிலையில் வாழ வேண்டும், என்ற மன நிலையிலேயே இருக்கிறோம். அந்நிலையில் வாழ அவசரமும், வேகமும் நேரமின்மை எனும் காரணங்கள் மட்டும் நம்மை உயர்வடைய செய்துவிடாது. ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் காலம் மிகவும் அவசியமாகிறது. ஒரு குழந்தை மண்ணில் உதிக்க வேண்டுமானால் பத்துமாத காலம் வேண்டியுள்ளது. ஒரு வாழைமரம் பயன்தர ஆறுமாதகாலம், ஒரு தென்னை பயன்தர ஐந்து ஆண்டுகாலம். பயிர்கள் பலன்தர ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய கால அவகாசத்தை எடுத்துக்கொண்டுதான் முழுமையாக பலன் தருகிறது. "காலம்" தான் இந்த பரிபூரண வளர்ச்சியையும் பலன்களையும் தர முடியும். ஒவ்வொரு நிலையிலும், அந்த கால அளவிற்குரிய பரிணாம மாற்றங்களை பெறுகிறது. இது விஞ்ஞான ரீதியிலும் கண்டறியப்பட்ட உண்மை.

அதுபோல்தான் நமது வாழ்வியலில் பிறந்த குழந்தை முதல் இறுதி வரை ஒவ்வொரு கால நிகழ்வுகளில் அந்தந்த சடங்குமுறைகளைச் செய்ய வேண்டியுள்ளது அவசியமாகிறது. இப்படி அவசியமுள்ள நிகழ்வுகளை காலத்தில்

நடத்துவதன் மூலமே பரிணாம வளர்ச்சி பெற்று பிறந்த குழந்தையாக, சிறுவனாக, சிறுமியாக பள்ளி பருவமாக, வாலிப பருவமாக, திருமண மணமகனாக, மணமகளாக, தந்தையாக, தாயாக, இவ்வாறு காலங்களில் மாறும் நிகழ்வுகளை ஒரு விழாவாக அவற்றை நாம் நிகழ்த்துகிறோம்.

இவ்வாறு நிகழ்த்தும் விழாக்களில் பல சடங்கு, முறைகளாக முறைப்படுத்தப் பெற்றுள்ளது. ஆனால் இவற்றை மட்டும் முறையாக கால நேரம் எடுத்துக்கொண்டு நிகழ்த்துவதில்லை. அவசர அவசரமாக நடத்தி முடிக்கிறோம். இந்நிலையில் மட்டும் காலம் நேரம் எடுத்துக்கொண்டு நடத்தாமல் விடுவதால் நம் விழா முழுமை பெறுகிறதா? பரிபூரண மகிழ்வு ஏற்படுகிறதா? மனிதன் உயர வேண்டும் என்று எண்ணும் எண்ணம் முழுமைபெறுகிறதா? இல்லை என்றுதான் கூறவேண்டும். ஒரு மரம், செடி, கொடி முதல் எல்லா உயிர்களும் காலம் நேரம் எடுத்துக்கொண்டுதான் முழுமையை தரும்பொழுது முழுமையாக கடைப்பிடிக்காத விழாவும் விழாக்களின் முக்கியத்துவம் எப்படி உயர்வாகும்? நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று !

எனவே நாமும் காலநேரத்தை ஒதுக்கி சம்பிரதாய, சடங்கு முறைகளை கடைப்பிடித்து முழுமையாக நிகழ்த்தி உயர்வு, மேன்மை, வளம், நலம் கூட்டவும் உதவும் வழிமுறைகளை வாழ்வில் கடைப்பிடித்தே தீர்வது என உறுதி எடுத்துக்கொள்வோம்.

இவ்வாறு உறுதி எடுத்துக்கொண்டு திருமண நிகழ்வுகள் சிலவற்றை முறைப்படுத்திக் கொள்வோம்.

இன்று நாம் நடைமுறையிலுள்ள சடங்கு முறைகளும் பழமையான முறைகளும் ஒவ்வொன்றிலும் சில மாற்றங்களே உள்ளது.

அவையாக

1) பெண்பார்ப்பது முதல் நிச்சியம் செய்வது வரையிலும் பழமையான முறைகளும் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

2) திருமண விழாவில் மட்டும் சில சடங்குகளை நாம் முறைப்படுத்தாமல் விட்டுவிட்டோம். இந்த நிகழ்வுதான் ஆயிரம் காலத்து பயிராக வளரவேண்டிய இந்த தம்பதியினர்களுக்கு நாம் செய்ய வேண்டிய உயிர் போன்ற நிகழ்வுகள். இந்நிகழ்வுகளில் ஆயிரமாயிரம் அர்த்தமும், வேதங்களும், சாஸ்திரங்களும் சொல்லும் உண்மைகளும், வேதியியல் ரீதியாகவும், நிகழும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. இதைத்தான் ஆண்டாண்டுகாலமாக இறைவனே திருமணம் செய்துகொண்டு நடைமுறைப்படுத்தி மக்களுக்கு உணர்த்தும் முகமாக மதுரை மாநகரில் மீனாட்சி திருமண வைபவம் நடைபெறுகிறது.



இம்முறையாக நம் திருமண விழாக்களில் மணமேடை அமைக்கும் முறை பழங்காலத்தில் நடைபெற்று வந்துள்ளது. அவற்றை சிந்திக்கின்ற பொழுது இன்றைய நிலையில் திருமண மண்டபங்களில் நடைபெறுவதால் அவற்றை ஒருவார காலத்திற்கு அமைப்பது என்பது மிக மிக சிந்திக்க வேண்டிய ஒன்றுதான். அவ்வாறுள்ள சிந்தனையில் இடம் பொருள், ஏவல் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு மணமேடை அமைக்கும் பழக்கத்திற்குள்ள மற்ற அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றி நல்மண் எடுத்துவந்து மணவறை அடியில் மணப்பலகை கீழே ஒரு சிறிய மேடையாக அலங்காரம் செய்து கொள்வதில் எந்தவிதமான கஷ்டங்களுமில்லை.

குறிப்பு :

மணமக்கள் கட்டாயமாக மணப்பலகையில் தான் அமர்ந்து திருப்பூட்டுதல் வேண்டும். இன்றைய நடைமுறையில் நாற்காலியில் (சேர்) அமர்வது என்பதும், கால்களை தொங்கவிட்டு உட்கார்வது என்பதும் மிகவும் வேதனைதரும் முறையாகும். அதுபோல் மணமகன், மணமகள் மேடையை வலம் வந்து அமரும் பொழுது சபையை வணங்கி மணப்பலகையில் வலதுகாலை எடுத்துவைத்து பின்புறமாகயிருந்து ஏறி முன் வந்து அமரவேண்டும். இவ்வாறு செய்வதால் உலகத்தோடு ஒத்து வாழ்வதும், ஒற்றுமையாக வாழ்வதும் பெரியவர்களை மதித்து வாழ்வதும் உறுதி செய்யப்பெற்றது.

மேலும் சாஸ்திரம் தெரிந்த வேதியரை வைத்து ஹோமம் வளர்ப்பதும், மாங்கல்ய பூஜை செய்வதும் நடைபெறும் வழக்கமாக உள்ளது. அதில் சிறுமாற்றம் என்பது அவசியம். ஹோமகுண்டம் எனும் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இன்று சட்டியை வைத்து அதில் ஹோமம் வளர்ப்பது தவிர்க்கவேண்டிய ஒன்று பதிலாக ஹோமகுண்டம் போன்ற வடிவில் இன்று எல்லா நிலைகளிலும், மண், இரும்பு, சிமெண்ட் ஆகியவற்றாலான குண்டம் செய்யப்பெற்று வாங்கிக் கொள்ளலாம். (மண குண்டம் ரூ.25 முதல் 100 வரையுள்ளது)

திருப்பூட்டுதல் நிறைவு பெற்றவுடன் மங்கல வாழ்த்து வாசித்தல் என்பது மிக முக்கியமான நிகழ்வு அவற்றை நம்மவர்கள் முழுமையாக செய்வதில்லை, திருமணத்திற்கு சுற்றம் சூழ வந்திருந்து வாழ்த்தியருள வேண்டுகிறார்கள் திருமண வீட்டார். ஆனால் "மங்கல வாழ்த்து" என்ற மிக உயர்ந்த சம்பிரதாய சடங்கு முறையை சரியான முறையில் வாசித்து வாழ்த்துகிறோமா? ஏன்? "காலம் இல்லை அவசரம்" இந்த மங்கல வாழ்த்துக்காகத்தானே ! உறவினர்களை அழைத்தோம், நண்பர்களை கூட்டினோம், ஆயிரமாயிரமாய் செலவு செய்தோம், அவற்றை எல்லாம் மறந்து இவ்வளவு நேரங்களையும் செலவு செய்தது அந்த முக்கியமான நேரத்திற்குதானே ! என்பதை மறந்துவிடுகிறோம் சிந்தித்துப் பாருங்கள்.

மங்கல வாழ்த்து "வெண்பா" "விருத்தம்" "கலித்துறை" என முறைப்படுத்தப் பெற்றுள்ளது. அதில் வரும் சொற்களை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். நம் செல்வங்கள் அந்த மங்கல சொற்களின் பயன்களை எல்லாம் பெற்று வாழ்ந்தால் எப்படி சிறப்பாகயிருக்கும், உயர்வாகயிருக்கும் நினைத்துப் பாருங்கள். கண்டிப்பாக மகிழ்வீர்கள்.

எனவே 'மங்கல வாழ்த்து' மூன்று முறை வாசிக்கப்பெற வேண்டும் சுற்றத்தார் அனைவரும் அது சமயம் மிகவும் அமைதிகாக்க வேண்டும். வாசிப்பவர் உள்ளத்தே ஜோதி சுரூபமாக இறைவனே நின்று ஒலியாக மணமக்களை வாழ்த்துவதாக "ஐதீகம்". அந்த மங்கல ஒலி பெற்ற பின்புதான் மணவிழா தம்பதியினர் ஆவதாகவும் சாஸ்திரம் கூறுகிறது எனவே இவை கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இவ்வாறாக ஒவ்வொரு சடங்குகள், பொருள் நிறைந்ததாகவும், சம்பிரதாயம் மிகுந்ததாகவும், வழி, வழி வந்த வாழ்க்கை முறையை முறைப்படுத்துவதாகவும், சிறந்த சிந்தனைகளை பெற்றதாகவும், இருந்து ஒவ்வொரு நகரத்தாரும் எல்லா செல்வங்களையும் பெற்று, நீடுபுகழ், நிறை செல்வம், உயர்கல்வி, தீர்க்க ஆயுள், தான தர்மம், ஒங்கு ஒற்றுமை இவைகளைப் பெற்று வாழவே, இந்த தொகுப்பு நூல் வெளியீடு செய்யப்பெற்றுள்ளது.

எனவே உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து சுபவைபவங்களிலும் இந்நூல் உங்களுக்கு உறுதுணை புரியும். "அந்த கால நேரத்தில்" நாங்கள் தொகுத்து தந்துள்ள அனைத்து சடங்கு சம்பிரதாயங்களையும் நடைமுறைப் படுத்தி சிறக்கவேண்டும் எனும் எங்களின் நோக்கம் உங்கள் இதயங்களில் நிச்சயமாக பிரதிபலிக்கும்.

எனவே இவ்வாறு ஆண்டாண்டு காலங்களாய் இந்த நூல் பயன் பெறும் எனும் நோக்கிலும் பயன்படுத்தப்பெற வேண்டும் எனும் நோக்கிலும் தொகுப்பாளராகிய நாங்கள் நகரத்தார்கள் நலம்பெற, வாழ்வியல் வெற்றி பெற சடங்குகளையும், சம்பிரதாய முறைகளையும் தொடர்ந்து உரைத்துக்கொண்டே யிருப்போம். ஆகையால் இதை முடிவுரையாக நிறைவு செய்யாது, தொடரும் உரை...... எனும் தலைப்பில் நிறைவு செய்கிறோம். என்றென்றும் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் மேன்மை எல்லாம் பெற இறைவனை வேண்டுகிறோம்.

வாழ்க சமூகம் !

வளர்க சடங்குகளும் சம்பிரதாயமும்.

நன்றி



# தொகுப்பு நூல் வெளிவந்த பாதையும் நன்றியுரையும்

## நன்றி

இந்நூல் தொகுப்பு என் ஆவலாகயிருந்தாலும், கடந்த பல ஆண்டுகாலமாக இவற்றை தொகுத்து (தனக்கு அறிந்தவற்றை) எல்லாம் வைத்திருந்தவர் உயர்திரு. ம. மாணிக்கம் அண்ணன் அவர்கள். அவர்களிடம் என் ஆவலை பகிர்ந்து கொண்ட பொழுதுதான் இதை ஒரு நூலாக வெளியிட நான் தொகுத்து வைத்துள்ளவற்றை தருகிறேன் என்றும், அதற்கு முன் நமது சமூக பெரியவர்கள், தெரிந்தவர்களை கேட்டால் இன்னும் சிறப்பாக அமைக்கலாம் எனக் கருதி அருவியூர் நகரத்தார் குரல் மூலம் எங்கள் வேண்டுகோளை வெளியிட்டோம். அவ்வாறு வெளியிட்ட பொழுது தனக்கு தெரிந்த மிகச் சிறந்த கருத்துக்களையும், எழுதி நேரில் வந்தால் இன்னும் பல காரண காரியங்களை அறிந்து கொள்ளலாம் என எழுதியவர் ; இவ்வளவு நகரத்தார்கள் இருந்தும் ஒரே ஒருவர்தான் எழுதினார்கள். எழுதியிருந்தவாரே, நாங்கள் நானும் உயர்திரு ம. மாணிக்க அண்ணன் அவர்களும் பொன் புதப்பட்டிக்கு சென்று நேரில் சந்தித்தோம் ; சந்தித்தபொழுது அவர்களுடைய பெருமையும், அவர்களுடைய ஆர்வமும், கருத்து பொதிவும் எங்களை மிகவும் வியப்படைய செய்தது. நம் சமூகம் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுடைய தெளிவான உணர்வு என்னை விடாப்பிடியாக நிறைவேற்ற வைத்தது. அந்த பெருமைகளுக்குரிய நக்ரத்தார் பெண்மணி திருமதி. மா. லெட்சுமி ஆச்சி அவர்கள், பொன் புதுப்பட்டி.

இந்நூல் மிக சிறப்பாக வெளிவர அவர்களுடைய கருத்து எவ்வளவு அவசியமோ, அதுபோல் உயர்திரு. ம. மாணிக்கம் அண்ணன் அவர்களின் உழைப்பு மிகச் சிறந்தது. கூப்பிட்டபொழுதெல்லாம் ஓடிவந்து உதவி செய்தவர். இந்நூல் முழுமையாக உருவானது என்றால் அவரால் மட்டுமே என்றுதான் சொல்வேன். அவர்களுக்கு கால காலத்திற்கு நம் சமூகம் கடமைப்பட்டுள்ளது. இவர்கள் இருவருக்கும் நானும் எப்பிறவியில் இந்த சமூகத்தில் பிறந்தாலும் கடமைப்பட்டுள்ளவனாகவும் நன்றியுள்ளவனாகவும் இருப்பேன். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

அதற்கு அடுத்தபடியாக யாருக்கு தெரியும் பழமையான பழக்கம் என, என் எண்ணங்கள் அலைந்தபொழுது என் நினைவுக்கு வந்தவர் திருமதி. சிவயோகம் செல்வம் அவர்கள். அவர்களை தொலைபேசியில் அழைத்து பேசிய பொழுது எனக்கு தெரிவதைவிட எங்களுடைய தாயார்க்கு மிகவும் தெளிவாக தெரியும் எனக் கூறி என்னை அவர்கள் இருக்குமிடத்திற்கு வரசொன்னார்கள். நானும் அங்கு சென்று அவர்கள் கூறிய தகவல்களை சேகரித்து வந்தேன். அவர்களும்

மிகவும் அழகாக ஒரு நிகழ்ச்சிகூட விடாமல் திரையில் ஓடும் நிகழ்ச்சிபோல் விவரித்தார்கள். அந்த பெருமைக்கு உரியவர்கள் திருமதி. க. ருக்மணி ஆச்சி அவர்கள். அவர்களுக்கும் என் நன்றி.

அடுத்தபடியாக நமது சடங்கு சம்பிரதாயம் அனைத்தையும் மிக அழகாக நடத்திவருபவரும், நமது பண்பாடு, கலாச்சாரத்தில் மேலோங்கி திகழ்பவரும், எல்லோரும் போற்றக்கூடியவரும் ஆகிய உயர்திரு. சொ.அ. மாணிக்கம் செட்டியார் அவர்கள், அவர்களுடைய கருத்து ஒன்றே ஒன்று "தொகுப்பது பெரிதல்ல. அவற்றை பின்பற்றி நடைமுறைப்படுத்தவேண்டும். அதன் மூலம் நம் சமூகம் சிறக்க வேண்டும்" என ஆசீர்வதித்தார்கள் அவர்களுக்கு நன்றி.

**தொகுப்புக்கு தகவல் தந்து உதவியவர்கள்**

திரு. சொ. அ. மாணிக்கம் செட்டியார், பொன்னமராவதி
திரு. ம. மாணிக்கம், கோயமுத்தூர்
திருமதி. மா. லெட்சுமி ஆச்சி, பொன் புதுப்பட்டி (செம்பதி)
திருமதி க. ருக்மணி ஆச்சி, கோயமுத்தூர் (படமிஞ்சி)

இவ்வாறு கிடைத்த தகவல்களை கைப்பிரதியாக எழுதித் தொகுத்தபின் விடுதல் அல்லது மாற்றம் உள்ளதா? என சரிபார்க்க வேண்டும் எனும் நினைவு மாற்றங்கள், நிறை, குறையிருந்தால் மாற்றியமைத்து வெளியிட செய்ய உதவும் எனும் நோக்கில் பல பிரதிகளாக நகல் செய்து பொதுநலச்சங்க செயற்குழுவில் ஊர்முறையாக நகரத்தாரிடம் கொடுத்து அனுப்பினேன். அவ்வாறு அனுப்பிய பிரதியை பெற்றவர்கள் தாங்கள் சொல்லவேண்டிய ஆழமான கருத்துக்களை அழகாக எழுதியும், வாழ்த்தியும் வரவேற்றும் என்னை உற்சாகப்படுத்தினார்கள்.

அவ்வாறு எழுதியவர்களில் உயர்திரு. சொ. வைத்தியலிங்கம் அண்ணன் அவர்கள் மிகவும் முறைப்படுத்தியும், தற்கால முறைகளை குறித்தும், வேண்டும் என அழுத்தமாக எழுதிச் சொல்லியும் வரைமுறை செய்து அனுப்பினார்கள். கிடைத்த அன்றே முழு வீச்சில் படித்து முறைப்படுத்தி முதலாவதாக கிடைக்கச் செய்தார்கள் அவர்களுக்கு நன்றி.

அதுபோல் உயர்திரு நா. திருநாவுக்கரசு அவர்களும், உயர்திரு V.N. சுந்தரம் அவர்களும் உயர்திரு அரு. வே. மாணிக்கவேலு அவர்களும் உயர்திரு.மு.த. காந்தி அவர்களும் திரு. அ.சொ. சண்முகம் அவர்களும் கருத்து பொதிவு, சடங்குகளின் ஆழமான உட்பொருள் குறிப்பிட்டு எழுதி இன்னும் சில காலம் எடுத்துகொண்டு பலருடைய கருத்துக்களை அறிந்து வெளியிடலாம் எனக்கூறி எழுதியிருந்தார்கள். இந்நிலையில் நாங்கள் ஆராய்ந்தபொழுது இதுநாள் வரை இதற்காக ஒரு நூல் இருந்ததாக (ஏகாம்பரம் செட்டியார் வெளியீடு செய்யுள் முறையில் தவிர) தெரியவில்லை. நம்மவர்களோ, பல வழிமுறைகளை விட்டு, திருப்பூட்டினால் போதும் எனும் நிலைக்கு வந்துவிட்டார்கள், இது முறைகள் தெரியாமலா? தெரிந்தும் வேண்டாம் எனும் நோக்கமா? எனும் ஐயப்பாடு வேறு எங்களுக்கு, எனவே தான் அருவியூர் குரலில் சடங்குமுறை தெரிந்தவர்கள்



எழுதுங்கள் என வேண்டுகோள் விடுத்தோம் ஆயிரம் குரல் பிரதிகளில் சென்றும், அதை இன்னும் பல ஆயிரம் பேரும் படித்தும் எழுத முன்வரவில்லை, ஒருவரை தவிர. காரணம் என்ன? என மீண்டும் ஒருகேள்வியை கேட்டுக்கொண்டு, ஐம்பது வயது உள்ள பலரை நேரில் பார்த்து பற்றி கேட்ட பொழுது எங்களுக்கு தெரியாது எனும் பதில்தான் கிடைத்தது.

இந்நிலையில் தான் நாங்கள் ஒரு இலக்கை நிர்ணயித்துக்கொண்டு செயல்பட தொடங்கி நம் சமூகத்தினர்க்கு சடங்கு, சம்பிரதாய முறையில் "விழிப்புணர்வு" ஏற்படுத்தவேண்டும் என இந்நூலை வெளியீடு செய்கிறோம் என்பதை கூறிக்கொண்டு அவர்களுக்கும் என் நன்றி.

**கையெழுத்து பிரதியை படித்து ஆலோசனை வழங்கியவர்கள்**

உயர்திரு சொ. வைத்தியலிங்கம், மதுரை
உயர்திரு மு.த. காந்தி செட்டியார், மதுரை
உயர்திரு. V.N. சுந்தரம், திருவையாறு
உயர்திரு அ.சொ. சண்முகம், திருச்சி
உயர்திரு. அரு.வே. மாணிக்கவேலு, பொன்னமராவதி
உயர்திரு. நா. திருநாவுக்கரசு, பொன்னமராவதி

இவ்வாறு தொகுத்து சரிசெய்தபின்பு அச்சுப்பதித்து வெளியீடு செய்யவேண்டும் எனும் என்னுள் இருந்த ஆவலை நிறைவு செய்ய நிதி ஆதாரம் வேண்டும். அவ்வாறு இருந்த நிலையில் சிறந்த ஆலோசனை வழங்கியும், நாங்கள் உதவி செய்கிறோம் என என்னை மேலும் உற்சாகப்படுத்தியவர்கள் உயர்திரு A.P. ஸேதுராமன் அவர்களும், கோயமுத்தூர், உயர்திரு. R. ராமச்சந்திரன் கோயமுத்தூர் அவர்களும். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

அவர்கள் சொன்ன யோசனையின் அடிப்படையில் இந்த தொகுப்பு நூலுக்கு உங்களின் உதவி எதிர்பார்க்கிறேன் எனச் சொல்லி கேட்ட பொழுது எவ்வளவு வேண்டும் எனக் கேட்டு அள்ளிக் கொடுத்த வள்ளல் பெருமக்கள்தான் இவர்கள். இவர்களுக்கு என் அன்புகலந்த நன்றி.

**நிதி உதவி அளித்தவர்கள்**

உயர்திரு A.P. ஸேதுராமன், கோயமுத்தூர்
உயர்திரு N. சுப்பிரமணியன், (வசிஷ்டர்) கோயமுத்தூர்
உயர்திரு N. செல்வம், கோயமுத்தூர்
உயர்திரு ST.KR. சக்திவேல் பொன்னமராவதி
உயர்திரு சு. சோலைராஜன், கோயமுத்தூர்
உயர்திரு கு.தி. வெங்கடாச்சலம், கோயமுத்தூர்
உயர்திரு RM.A. கண்ணன், கோயமுத்தூர்
உயர்திரு மா. சுவாமிநாதன், கோயமுத்தூர்
உயர்திரு மா. மணிகண்டன், கோயமுத்தூர்

உயர்திரு கை. ரவீந்திரன், கோயமுத்தூர்
உயர்திரு ரா. ராமன், கோயமுத்தூர்
உயர்திரு ரா. ராமச்சந்திரன், கோயமுத்தூர்
உயர்திரு க. சுப்பிரமணியன், கோயமுத்தூர்
உயர்திரு ச. கணேசன், அன்னூர், கோயமுத்தூர்
உயர்திரு ம. சரவணன், கோயமுத்தூர்
உயர்திரு M. ஜெகநாதன், கோயமுத்தூர்
உயர்திரு சுப. சொக்கலிங்கம், கோயமுத்தூர்
உயர்திரு மா. சண்முகநாதன், கோயமுத்தூர்
திருமதி செ. சிவயோகம், கோயமுத்தூர்

நிதி ஆதாரம் பெற்ற பின் வெளியிடும் நாள் ஆகியற்றை தேர்வு செய்தபின், பொது நலச்சங்கத் தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர், கோயமுத்தூர் சங்கத் தலைவர் மற்றும் கோயமுத்தூர், இளைஞர் பேரவைத் தலைவர் ஆகியோரிடம், வாழ்த்துச் செய்தி அனுப்பி வைக்க வேண்டினேன். அவர்களும் என்னை வாழ்த்தியும், உற்சாகப்படுத்தியும் செய்தி அனுப்பினார்கள். அவர்களுக்கு என் நன்றி.

நிதி ஆதாரம் பெற்றபின் அச்சுப்பதிப்பு வேலை செய்ய எனது நண்பர் உயர்திரு. முருகேசன் (மாயன் அச்சகம்) அவர்களை அணுகி எவ்வளவு வரும், என மதிப்பீடு கேட்ட பொழுது உங்களிடம் நான் என்ன கேட்கப் போகிறேன், நீங்கள் எடுத்துக் கொண்ட நல்ல பணியை நிறைவேற்றி தருகிறேன். நீங்கள் கொடுப்பதை பெற்றுக்கொள்கிறேன் எனச் சொல்லி என்னை மிகவும் பெருமைப்படுத்தினார். அவர்களுக்கும் அவருடன் இணைந்து அச்சகத்தில் பணியாற்றி இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் என் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி. !

இந்நூல் வெளியீட்டு வெற்றி என்பது !

**"நல்லவை எண்ணவேண்டும்" எனும் ஒரு "சொல்" வெற்றி பெற்றதாக கருதுகிறேன்.**

பாரதி சொன்னான்....
"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவை எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"
நன்றி, நன்றி, நன்றி, நன்றி, நன்றி, நன்றி.



தொகுப்பாளர்
**முத்துகனகசபை**
கோயமுத்தூர்



அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் வாழ்வை வளமாக்க வழிகாட்டும் வழிமுறை (சடங்குகளும், சம்பிரதாயமும்) தொகுப்புநூல் பற்றிய தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகிறது.

எமது அடுத்தவெளியீடு

## "நகரத்தார் குடிப்பட்டமும், குலதெய்வவழிபாடும்"

## நம்மவர் "பன்முகவளர்ச்சி"

**(நமது அறிஞர்கள் எழுதும் வணிக, தொழில், கல்வி வளர்ச்சி வழிமுறைகள்)**

குடிப்பட்டமும், குலதெய்வ வழிபாடும் எனும் தொகுப்பு நூல் வருங்கால தலைமுறைக்கு நாம் தேடிவைக்கின்ற மிகப்பெரிய பொக்கிஷம். எனவே நகரத்தார்கள் மிகுந்த ஒத்துழைப்பு அளித்து தங்கள் சார்ந்த குடிப்பட்டம் குலதெய்வ வழிபாடு குறித்து தொகுத்து வழங்கும்படியும்

கல்வி, வணிகம், தொழில் இவற்றில் பட்டம் பெற்றவர்களும் வணிகம், தொழில், இவற்றில் தங்கள் பெற்ற அனுபவத்தையும் அதில் கிடைத்த வெற்றி வழிமுறைகளையும் கட்டுரையாக எழுதும்படியும் அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்விரு தொகுப்பு நூல்களை வெளியிடும் பொழுது நமது சமுகம் விழிப்புணர்வுடன் கூடிய வளர்ச்சி பெற்று சிறக்கும் எனும் தொலைநோக்கு பார்வையில் நம்பிக்கை இருக்கிறது. எனவே தங்களின் சமுக சேவையை இவ்விரு தொகுப்பு நூலின் தொகுப்பாளர்களாகயிருந்து உதவி செய்யலாம் என வேண்டி விரும்பி அழைக்கிறோம். வருக ! பன்முக வளர்ச்சி பெற்ற சமூகமாக வளர்க்க உதவுக !

**தொடர்பு முகவரி :**

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் பண்பாட்டு மன்றம்
**ஏவிஎம் மெடிக்கல்**
20, ரெங்ககோனார் வீதி, காட்டூர்
கோயமுத்தூர் – 641 009.

குலமும் குரலும் சிறக்க நல்வாழ்த்துக்கள்

ம. மாணிக்கம் மா. சண்முகநாதன் M.C.A.,
Mobile : 98430 - 15503

# MACSOFT™

**Software Developers**

அ.சுப. மலையாண்டி செட்டியார் நிறுவனம்

Web : www.macsoft.in E-mail : info@macsoft.in, msn_macsoft@yahoo.com
Mobile : 98422 - 04611, 98943 - 32345, 98435 - 85503



R V Rahunath B.Sc.,

# Annaii Infotech

Computers & Spares

☎ 0422 - 4368568 Mobile : 98422 - 35503, 98428 - 35503

- கம்ப்யூட்டர்கள் ரூ. 14,000 முதல்
- அனைத்து முன்னணி நிறுவன கம்ப்யூட்டர்களும் (HCL, COMPAQ, TOSHIBA LAPTOP) குறைந்த விலையில் கிடைக்கும்.
- கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட அனைத்து உதிரி பாகங்களும் (Dot Matrix, Inkjet, Laser Printer, UPS, Scanner, Speaker, CD, Floppy, Modem, Computer Table, Web Camera, Ribbon, Computer Stationery & Billing Rolls) கிடைக்கும்.
- Web Designing at Low Cost.
- **We undertake** : IT Consultancy, AMC's, UPS, Monitor, SMPS Service,
- **Available Softwares** : Medical (Retail & Wholesale), Hospitals, Hardwares, Travels, Chitfunds, Pawn Brokers, Hotels, Bakeries, Pazhamudhir Nilayam, Jewelleries, Departmental Stores, Textiles, Accounts & All type of Softwares.
- **தமிழில்** Accounting ( குறிப்பு, பேரேடு, ஐந்தொகை, லாப நஷ்டம் ), நகை அடகுக் கடை, ஜுவல்லர்ஸ்,

**Dealers for :**



intel HCL HEWLETT PACKARD COMPAQ SAMSUNG TVS ELECTRONICS



**I.T. Solution Provider**

1st Floor, Yaseen Complex, 198-A, T.V. Samy Road,
(Above Malligai Departmental Stores), R.S. Puram, Coimbatore - 2.

*Best Place for Best things at the LOWEST Price*





அருள்தரு மங்கை நாயகர்துணை
தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !



## விஜயா பார்மஸி

சங்கீதா மருத்துவமனை கட்டிடம்
குனியமுத்தூர், கோயமுத்தூர் – 641 008
தொலைபேசி : 2250783



S. மாதவன்

## செல்வம் மெடிக்கல்ஸ்

172 A, பொள்ளாச்சி சாலை
கரும்புக்கடை, கோயமுத்தூர் – 641 008
தொலைபேசி : 2398709



N.S. அசோகா

## அன்பு ஏஜன்ஸீஸ் "A"

10/ 16 காவேரி நகர், குனியமுத்தூர்
கோயமுத்தூர் – 641 008
தொலைபேசி : 2251061, 2252924



S. ரவி

## சோமு பார்மஸி

6/29, பொள்ளாச்சி மெயின் ரோடு
ஆத்துப்பாலம், கோயமுத்தூர் – 641 008
தொலைபேசி : 2413415



R. தங்கராசு

உ

அருள்தரு மங்கை நாயகர் துணை

தொகுப்புநூல் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள் !

ஓம் ஸ்ரீம் அருந்ததி வசிஷ்டக் குருப்யோ நமஹா !

சித்த மருத்துவ – ஜோதிட – ஆராய்ச்சி – பயிற்சி

கோவையில் மகத்தான 20 ஆண்டு கால சேவை.

**Dr. N. வசிஷ்டர் சுப்ரமணியம் Ph.D., RMP.,**

செயற்குழு உறுப்பினர்– அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம், கோவை.

துணைச்செயலாளர்– அருவியூர் வடக்குவளவு நகரத்தார் இளைஞர் பேரவை, கோவை

துணைத்தலைவர் – சித்தா – ஆயுர்வேத – யோகா சங்கம், கோவை.





**"உழைப்பால் உயர்ந்தவர்" விருது Raj TV சார்பில்**

வழங்கியவர் சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர்

உயர்திரு முருகேசன் அவர்கள்

உயர்நீதிமன்றம், சென்னை

---

**REGINA MEDICALS**
Sowripalayam, Coimbatore
Ph : 0422 - 2594859

**V.S. WIN FINANCE**
Pawn Broker & Money Lenders
Puliyakulam, Coimbatore.

**SRI ARUNTHADHI VASHISTAR**
*SIDDHA MEDICINE & ASTROLOGICAL RESEARCH CENTRE.*

500-1A, Pangaja Mill Road,
Puliyakulam,
Coimbatore - 45.
Cell : 98430 23548

105, PMG Complex,
Opp, Rathna Bhavan,
T. NAGAR Bus Stand
Chennai - 17.
Cell : 94443 82392

**அச்சு புத்தகத்தை மின் புத்தகமாக மாற்றுவதற்கு அடிகோலிட்டவர்-**

**சு.சோலைராஜா ,கோவை**

**அச்சு புத்தகத்தை மின் புத்தகமாக மாற்றியவர்-**

**ச.சு.மணியன், புதுக்கோட்டை**